# கள்ளத்தோணி

ஊட
658




எம்.ஏ. அப்பாஸ்

# கள்ளத் தோணி

ஆசிரியர்

## எம். ஏ. அப்பாஸ்


## நவபாரத் பதிப்பகம்

தபால் பெட்டி நிர் 1647 :: சென்னை-1.

விலை 1-8-0 பரிசுப்பதிப்பு 2-8-0

நவபாரத் வெளியீடு—1.
முதற்பதிப்பு ஜூன் 1953
இரண்டாம் பதிப்பு ஜூலை 1953
மூன்றாம் பதிப்பு பெப்ரவரி 1954

தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 45

கடல் கடந்த நாடுகளின் பாலைகளைச் சோலைகளாக்க, பகலிலே இரத்த வியர்வையும், அங்கு இழைக்கப்படும் அநீதிகளை நினைத்து இரவிலே இரத்தக் கண்ணீரும் சிந்தும் தமிழனுக்கு, இந்நூல் சமர்ப்பணம்.

★

சம்பவங்கள், பெயர்கள் யாவும் யாரையும் குறிப்பிடுபவையல்ல.

இலங்கையில் ஏக விற்பனை உரிமை

**மோகன் குமார் அன் கோ.**

66, முதலாம் குறுக்குத் தெரு
கொழும்பு—11

## சாட்சிக்கூண்டிலே....என்னை நிறுத்தினுல்....?

சூழ்ச்சிக்குழியிலே வீழ்த்தப்பட்டுக் கிடக்கும் சந்திரர்களின் உரிமையை உலகறியக் கர்ஜிப்பேன். எனது தாயகத்தை—தமிழகத்தை வெள்ளத்தால் பிரித்து, காலவேகத்தால் புதைத்து, உள்ளத்தால் மறைத்து, ஒண்டவந்தாரிடம் ஒப்படைத்த இயற்கையை என்வழி திருப்புவேன். சொந்த மக்களின் உரிமையை நிருபித்து, சுரண்ட வந்தவர்கள் செய்யும் துரோகத்தை அம்பலப்படுத்துவேன். தாய்நாடும் சேய்நாடும் என்றென்றும் சௌஜன்யமாக வாழ்வதற்கு சாத்தியமான வழிவகைகள் சொல்வேன்.

இதை வாங்கிப் படிப்பதுடனும், விமர்சனம் செய்வதுடனும், வீசியெறிவதுடனும் நின்றுவிடாதீர்கள்; வேண்டுவன செய்ய விரைந்தெழுங்கள், அன்னைத் தமிழகத்தின் அபகரிக்கப்பட்ட அங்கங்களை மீட்டுத்தந்து, கடல்கடந்த தமிழனின் கண்களிலிருந்து மடைதிறந்து பாயும் கண்ணீர் வெள்ளத்தைத்தடுத்து நிறுத்த இன்றே பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுங்கள். அயல்நாட்டுப் பாலைகள் தமிழனின் ரத்தத்தால் சோலைகளாக மாறிக்கொண்டிருக்கையில், தங்கம் விளையும் தாய்நாட்டுப் பூமிகளைத் தரிசாகக் கிடக்க விடாதீர்கள்; அவர்களைத் திருப்பியழைத்து செல்வம் பெருக்கத் திரண்டெழுங்கள் என்றெல்லாம் வாசக அன்பர்களாகிய உங்களிடம் மன்ருடிக் கேட்பேன்.

குறுகிய சமூக சீர்திருத்தமென்னும் குட்டையைக் குழப்பிக் கொண்டிருந்த என்னை தேசப்பற்றென்னும் திறந்த, பரந்த சமவெளியில் கொண்டுவந்து நிறுத்திய பேரறிஞர் **அ. இராகவன்** அவர்களுக்கும், தோழர் **எம். எம் இஸ்மாயில்** அவர்களுக்கும், இம் முயற்சியில் என்னேடு ஒத்துழைத்த இதர அன்பர்களுக்கும், ***A. P. J.*** **அச்சகத்தாருக்கும்**, அங்குள்ள தொழிலாளர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவிப்பேன்.

"துரோகி" யில் சந்தித்தோம்—என்றென்றும் மறக்க முடியாதபடி. மீண்டும் சந்திப்பதற்கிடையில் ஆண்டுகள் இரண்டு உருண்டோடி விட்டன. கருத்தால் ஒன்றுபட்ட நம்மைக் காலத்தால் பிரித்துவிட முடியாது. உங்களுடைய ஆதரவு இதற்கும் நிச்சயம் அமோகமாகக் கிடைக்கத்தான் போகிறது—அடுத்த சந்திப்பும் அதிசீக்கிரத்தில் ஏற்படத்தான் போகிறது என்று 'ஜோஸ்யம்' கூடச்சொல்வேன்.

கொழும்பு—5-6-53 **எம். ஏ. அப்பாஸ்**

# “ஜோஸ்யம்” பலித்தது !

“கள்ளத்தோணி”யின் முதற்பதிப்புக்காக எழுதிய **சாட்சிக் கூண்டிலே என்னை நிறுத்தினால்?...”** என்ற தனதுரையின் முடிவிலே “உங்களுடைய ஆதரவு இதற்கும் நிச்சயம் அமோகமாகக் கிடைக்கத்தான் போகிறது—அடுத்த சந்திப்பும் அதி சீக்கிரத்தில் ஏற்படத்தான் போகிறது என்று ‘ஜோஸ்யம்’கூடச் சொல்வேன்” என்று ஒரு ‘ஜோஸ்யத்’தைச் சொல்லிவைத்தார் அறிஞர். ஆனால் அந்த ‘அதி சீக்கிரம்’, இவ்வளவு அதிசீக்கிரத்தில் வந்துவிடும் என்று அவர் கனவு கூடக் கண்டிருக்கமாட்டார்! அவர் சொன்ன ‘ஜோஸ்யம்’ அவரையே ஆச்சரியத்திலாழ்த்தி யிருக்கவேண்டுமென்பதில் ஐயமில்லை.

தான் எழுதிய ஒரு நூலின் முதற்பதிப்பு—ஆயிரக்கணக்கான பிரதிகள்—வெளியாகி பதினைந்து நாட்களுக்குள் பரபரப்பாக விற்பனையாகி அதன் மறுபதிப்பும் அடுத்த மாதத்திலேயே வெளிவருவதைக் காண்பதைவிட ஒரு ஆசிரியருக்கு மகிழ்ச்சி யளிக்கத்தக்க நிகழ்ச்சி பிறிதொன்றிருக்க முடியாது! அவர் சொன்னார்: “ஆம் மகிழ்ச்சிக் கடலில்தான் நான் இன்று உல்லாசமாக எனது ‘தோணி’யில் பிரயாணம் செய்கிறேன். அங்கே என் வாசக அன்பர்கள் அலையலையாக என்னைச் சூழ்கிறார்கள், அகமகிழ்ந்து ஆர்ப்பரிக்கிறார்கள். ஆனாலும் சுயநல சுறாமீன்கள் என்னைத் துரத்தாமலில்லை; பொறாமைப்புயல் தாக்காமலில்லை, கண்டனக் கடற்பாறைகளில் தோணி மோதாமலில்லை. இந்த இரண்டாவது பயணத்தை கலைவாணரின் கருத்துரையைக் கலங்கரை விளக்காக வைத்துக்கொண்டு ஆரம்பிக்கிறேன்——பொறுத்திருந்து பார்ப்போம் வாசக அன்பர்களுக்கு வணக்கம்—நன்றி”—என்று,

‘கள்ளத்தோணி’யின் **இப் பதிப்பை** எமது கன்னிப் பரிசாக வெளியிடக் கிடைத்தது எமது பதிப்பகத்தின் பாக்யம். எமது முதல் முயற்சியே ‘எவரெஸ்ட் வெற்றி’ தரும் என்பதில் எங்களுக்கு பூரண நம்பிக்கை யிருக்கிறது. இதைத் தொடர்ந்து அறிஞர் அப்பாஸ் அவர்களின் இன்னும் பல கருத்தோவியங்களையும் அன்பர்களுக்கு அர்ப்பணிக்கும் பணியை மேற்கொள்ள விழைகின்றோம். அன்பர்கள் எமது முயற்சிகளுக்கு ஆசி கூறுவார்கள் என்று நம்புகிறோ.

சென்னை-1.
30-7-53

**நவபாரத் பதிப்பகத்தார்.**

'கள்ளத்தோணி'' (முதற் பதிப்பு) விற்பனை அங்குரார்ப்பண விழா,

(17—6—53)



ஆசிரியர் கலைவாணர் அ. இராகவன்

# கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் மதிப்புரை

முந்தையர் தமிழை இயல், இசை, நாடகம் என்று முத் தமிழாக வகுத்துப் போயினர். அந்த முத்தமிழிலே மூன்ருவது தமிழாகிய நாடகத் தமிழுக்கு மற்றைய இரு தமிழுக்கும் இல்லாத ஒரு பெருமை என்னவெனில் மற்றைய இருதமிழாகிய இயல் இசையைத் தன்னகத்தே அடக்கி இருப்பதேயாம்.

நண்பர் எம். ஏ. அப்பாஸ் அவர்கள் எழுதிய "கள்ளத்தோணி" என்ற இந்நாடக நூலைப் படித்தேன், சுவைத்தேன், பாராட்டுகின்றேன். "தமிழில் நல்ல நாடகங்கள் இல்லையே" என்ற தமிழர்களின் ஏக்கம் இனி ஒருவேளை நிரந்தரமாகவே நீக்கப்படலாமென நம்புகிறேன். நாடகத் தமிழன் வெற்றிக்கரை சேருவதற்கு அப்பாஸ் அவர்களின் "கள்ளத் தோணி" ஒருவழிகாட்டி. நாடக வானில் இது ஒரு விடி வெள்ளி! அந்த அளவுக்கு அப்பாஸ் அவர்களின் நாடகம் என்னைக் கவர்ந்து விட்டது. அவற்றுள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

நாடகத்தில் ஓரிடத்தில் தந்தை தனது மகளிடம் "அழாதேம்மா, கடவுள் கைவிடமாட்டார்" என்று கூறுகிருர். "ஆம், கைவிடமாட்டார். பிடித்திருந்தாலல்லவா விடுவதற்கு" என்று மகள் பதில் கூறுகிருள். மென்மையின் உறைவிடமான பெண்மையின் வாயிலாக நகைச் சுவையுடன் நற்கருத்தையும் தரும் ஆசிரியரின் திறம் போற்றுதற்குரியதல்லவா? இன்னும் பார்ப்போம். நடைமுறை உலகிலே, ரயில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டே காந்தியாரைப் போற்றிப் புகழ்ந்து பொழுது போக்கிக் கொண்டிருக்கும் ஒரு பலரை, மூன்ரும் வகுப்புக்கு "காந்தி வகுப்பு" (காந்தி கிளாஸ்) என்று கூறிப ஒரே வார்த்தையால் வெட்கித் தலைகுனிய வைக்கிருர் ஆசிரியர், ஓரிடத்திலே!

இன்னும் ஒரு நகைச்சுவை. தனது காதலியான சிங்கள மங்கையிடம் அவளது தமிழ்க் காதலனைப் பேசவைக்கும் காட்சியிலே அவன் சொல்கிருன்: "சதா கடல் நீரிலேயே மிதந்து கொண்டு இருப்பதினு

லேயே லங்கா தேவிக்கு கொஞ்சம் ஜலதோஷம் பிடிச்சிருக்கு; அப்புறம் தமிழைச் சிதைத்து, ஸமஸ்கிருதத்தைக் கலந்து என்னென்னமோ பண்ணி சிங்களம்னு பேசுறீங்க!'' இதைக்கேட்டு அந்த சிங்கள மங்கையே சிரிக்கிறாள். இந்த இடத்தை நான் பெரிதும் சுவைத்தேன்.

இந்நூலிலே சம்பவங்கள் மிக மிக அழகாக அமைந்திருக்கின்றன. காட்சிகள் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கின்றன, ஒன்ருவது காட்சியை இரண்டாவது காட்சியும், இரண்டாவது காட்சியை மூன்ருவது காட்சியுமாக வந்து வந்து ஒன்றை ஒன்று விரட்டும் வேகத்துடன் அமைந்திருப்பது ஒன்றே போதும் இந்நூலின் பெருமைக்கு. ஆசிரியர் பெயரை சரியாகப் பாராமல் இந்நூலைப் படித்துக்கொண்டுவந்தால் நம்மை ஆசிரியர் ஒருவேளை இதை எழுதியவர் ''பம்பாய் அப்பாஸோ'' என்றுகூற சந்தேகப்பட வைத்திருப்பார். ஆயினும் இறுதியில் வாழ்வையே வெறுத்த மீனுட்சியை தொழிலாளர்களின் தலைவியாக்குவதன்மூலம் அந்த அப்பாஸாக இந்த அப்பாஸ் இல்லாவிட்டாலும் அந்த அப்பாஸுக்கு இந்த அப்பாஸ் நிகர்த்தவர் என்று நம்மை நினைத்துவிடச் செய்கிருர். அந்த அளவுக்கு இவரது எழுத்துக்களிலே புதுமைமணம் கமழுகின்றன. பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை எடுத்து இவர் கையாண்டிருக்கும் இடங்களில்கூட, இவர் தம்திறம் வியப்புக்குரியதாயிருக்கிறது!

''பிறந்ததுதான் லங்கா மாதாவின் மடியிலேயே தவிர, சுவாசித்ததெல்லாம் பாரதத்தாயின் பரிசுத்தக் காற்றைத்தான்'' என்று அந்த சிங்கள மங்கை செப்பும் செம்மையை—திறனை ஒவ்வொரு சிங்கள மக்களும் சிந்திப்பது நமக்கல்ல, அவர்களது முன்னேற்றத்துக்கே அது உதவியாகும்.

இந்நூலிலே ''பிச்சை எடுத்து, திருடி **விபச்சாரம்** செய்தாவது தன் மக்களைக் காப்பாற்றுபவளல்லவா தாய்', என்ற வாக்கியத்திலுள்ள ''விபச்சாரம்'' என்ற ஒரே ஒரு வார்த்தையில்மட்டும் ஆசிரியரின் மீறிய உணர்ச்சி காணப்படுகிறது!

இந்நூலை, ஒரு இனத்துக்காக மற்ருெரு இனம் எழுதிய நூல் என்று குறிப்பிடுவதைவிட, சிங்களர்களுக்காக தமிழன் எழுதிய நூல் என்று குறிப்பிடுவதைவிட, **''உலகத்துக்காக மனிதன் எழுதிய**

**நூல்** " என்றே குறிப்பிடலாம். அத்தகைய பொதுநல மலர்க் கருத்து கள் நூலிலே எந்தத் திசையிலும் பூத்து மணக்கின்றன.

" கள்ளத்தோணி " என்ற சொல்லுக்கு இருக்கும் களங்கத்தை நீக்கி, புது அகராதி தயார் செய்யவேண்டிய அவசியத்தை உண்டு பண்ணி விட்டார் ஆசிரியர்! வாழ்க எம். ஏ. அப்பாஸ்! வாழ்க கள்ளத் தோணி!

இந்நூலைப் பிறமொழிகளில் மொழி பெயர்க்க வரப்போகிறவர் களின் விலாசத்தை விசாரித்துத்தேடி வாழ்த்தும் திறமைகூட என் வாழ்த்துக்கு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

எனெஸ்கே பில்ம்ஸ்.
சென்னை. 11-7-53 } **N. S. கிருஷ்ணன்.**

# முன்னுரை

இந்தியாவிற்குத் தெற்கே பூமியின் நடுக்கோடு (நிரட்சர ரேகை) வரை ஒரு நிலப்பரப்பு இருந்தது. அதற்கு குமரிக்கோடு, ஒளிபர் நாடு, தமிழகம், லெமூரியாக் கண்டம் என்று பலபெயர்கள் வழங்கப்பட்டன. சுமார் 15,000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய கடற்கோளால் அந் நாடு அழிந்துவிட்டது. அதில் அழிந்ததுபோக எஞ்சிய நிலப்பரப்பே இன்றைய தென் இந்தியாவும், இலங்கையும் என்று தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. மேனாட்டு சாத்திர விற்பன்னர்கள் பலரும் இதை ஆதரித்துள்ளனர். இலங்கையிலும், தென் இந்தியாவிலும் ஒரே வித மான மண்ணும், மலையும், மரஞ்செடி கொடிகளும், விலங்குகளும். பறவைகளும் இருப்பதை உற்று நோக்கும் பூகர்ப்ப சாஸ்திர நிபுணர் களும் ஒருகாலத்தில் இரு நாடுகளும், ஒரே பூமியாக இருந்திருக்க முடியும் என்று உறுதி கூறியுள்ளனர்.

தமிழர் இலங்கையோடு நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று சரித்திரம் சான்று பகிர்கின்றது. அப்படியிருக்க சுமார் 500 மைல்களுக்கு அப்பாலுள்ள கலிங்க நாட்டிலிருந்து விஜயனும் அவனது நண்பர்களும் "கள்ளத் தோணி" யில் இங்குவந்து குடியேறியதற்குப் பின்னர்தான் 50 மைல் தூரத்தில் வசித்த தமிழர்கள் இங்குவந்து குடியேறினர் என்று கூறும் சரித்திரப் புரட்டர்களின் கூற்றை நியாயபுத்தியுள்ள எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. தூத்துக்குடியின் அருகிலோ வேதாரண்யத்தின் பக்கத்திலோ மீன்பிடிக்கச்செல்லும் பரதவர்களின் படகுகள் புயல் காற்றினால் இலங் கைக் கரைக்கு வந்துசேர்வதை இன்னும் அடிக்கடிக் காணும் நமக்கு தமிழர்கள் நெடுங்காலத்திற்கு முன்பே இலங்கையோடு தொடர்புடைய வர்களாய் இருந்தார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமின்று.

சிங்களவர்களின் முன்னோர்களாகக் கருதப்படும் கலிங்க நாட்டி லுள்ள அடங்காப் பிடாரியாகிய அரச குமாரன் விஜயனையும், அவனது நண்பர்களையும் அன்னாட்டு அரசன் நாடு கடத்தவே அவர்கள் ஒரு தோணியில் ஏறி இலங்கைக் கரையில் வந்து இறங்கினர் என்று இலங் கைச் சரித்திரம் கூறுகின்றது. பாஸ்போர்ட் இன்றி, அரசாங்க அனுமதி யின்றி, அன்னிய நாட்டானாகிய விஜயனும் அவனது

கூட்டத்தாரும் இலங்கையில் திருட்டுத்தனமாய்க் குடியேறியதை **கள்ளத்தோணி** என்று சிங்கள அரசியல்வாதிகளை நோக்கி அவர்களது சரித்திரம் கூறிக்கொண்டே இருக்கிறது. இன்றைய சிங்களவர்களின் முன்னோர்களும் அவர்களின் மொழியும், சமயமும், இசையும் சிற்பங்களும், ஓவியங்களும், நாகரீகங்களும் இந்தியாவிலிருந்து வந்தவைகள்-அதாவது **கள்ளத்தோணி**யில் வந்தவை—என்பதை சிங்கள அரசியல் வாதிகள் உணரவேண்டும். இந்தியர்களை விரட்ட கொடிகட்டி நிற்கும் இந்த அரசியல் வாதிகள் துவேஷ வெறியால் புத்த மதத்தை விரட்டி இந்திய ஓவியங்களைக் கரியாக்கி, இந்திய சிற்பப் பொக்கிஷங்களை நிர்மூலமாக்கி, இந்திய உணவு, உடை, நாகரீகம் ஆகியவைகளை அகற்றி ஆங்கிலேய மயமாக்கத் துணிந்தாலும் துணியலாம். இந்தத் தவருன போக்கை பாமர சிங்கள மக்கள் ஒரு பொழுதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதும், சிங்களவர்-தமிழர் நட்பும், இரத்த சம்பந்தமான பிணைப்பும் பிரிக்க முடியாதவை என்பதையும் சிங்கள் மக்களுக்கு நினைப்பூட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

நிற்க, தமிழர்கள் காட்டாற்று வெள்ளம்போல் இலங்கைக்குள் குடிபுகுந்து இலங்கையின் பொருளாதார அமைப்பைக் குலைக்க நாமோ இந்திய அரசாங்கமோ விரும்பவில்லை. தலைமுறை தலைமுறையாகக் குடியேறி வசிக்கும் தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமையும், வியாபாரிகளுக்கு வர்த்தகஞ் செய்து கொள்ளும் உரிமையும் கொடுக்கவேண்டும் என்றே நாம் கோருகிறோம். 8 லட்சம் இந்தியர்கள் உதிரம் சிந்தி இந் நாட்டைப் பொன்னுடாக்கினார்கள். இறந்த பின்னரும் தேயிலை, ரப்பர் போன்ற செடிகளின் அடியில் புதைக்கப்பட்டு நல்ல உரமாகமாறி தேயிலையும் ரப்பரும் செழிப்பாக வளரத் துணை செய்தார்கள். உயிரோடிருக்கும் பொழுதும் இறந்த பின்னரும் இந்நாட்டின் பொருளாதாரச் செழுமைக்குப் பணியாற்றும் 8 லட்சம் இந்தியத் தொழிலாளிகள் கேவலம் 3 கோடி ரூபாய்களை இந்தியாவிலுள்ள தம் உறவினர்களுக்கு அனுப்புவது சேனநாயகா சர்க்காருக்கு பெரிய "கொள்ளை" யாகத் தெரிகிறது. ஆனால் உழையாது இந்நாட்டைச் சுரண்டிக் கொழுத்த - விரல் விட்டெண்ணத்தக்க—ஒரு சில வெள்ளை முதலாளிகள் கோடி கோடியாய் பல் வேறு வழிகளில் இந்நாட்டின் செல்வத்தைச் சுரண்டிக்கொண்டு போவது அவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லை. இந்திய சர்க்கார் இந்தியர்கள் இலங்கையில் புதிதாகப்போய்க் குடியேறுவது கூடாது என்று 10 ஆண்டுகளுக்கு முன்னரே தடுத்திருக்கிறது. ஆனால் இந்-

தியர்கள் குடியேற்றத்தைத்தடுக்க வேண்டும் என்று வாய்ப்பறை அடித்த பெரிய சேனநாயகா சர்க்கார் யுத்தகாலத்தில் புதிய தொழிலாளர்களை அனுப்பும்படி இந்திய சர்க்காரிடம் மன்றுடியது. இந்திய துவேஷத்தை வளர்ப்பது சேனநாயகா சர்க்காரின் இருதய பூர்வமான விருப்பமல்ல என்பதையும், பதவி மோர்கத்திற்காகச் செய்துவரும் ஒரு அரசியல் சூழ்ச்சியே இது என்பதையும் அரசியல் விற்பன்னர்கள் அனைவரும் அறிவார்கள்.

இன்றைய இந்திய அரசாங்கமும் தமிழர்களை மாற்றாந்தாயின் மக்களைப் போல் நடத்துகிறது. இலங்கையில் வாழும் தமிழர்களில் இவர் இந்தியர் இவர் இலங்கையர் என்று பிரகடனம் செய்ய வேண்டும். இந்தியர்களை கௌரவமாக நடத்த வேண்டுமென்று இலங்கை அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்யவேண்டும். இலங்கை அரசாங்கம் அதைப் புறக்கணித்தால் இலங்கையில் வாழும் தம் பிரஜைகளை உடனே திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட நாளிற்குள் இலங்கையில் வசிக்கும் இந்தியர்கள் தாய்நாடு திரும்பவேண்டுமென்றும், அவ்வாறு திரும்பாவிடில் இனி அவர்கள் இந்தியாவிற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்களென்றும் திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும். இந்தியர்கள் இலங்கையில் மானக்கேடாக லட்சாதிபதிகளாக வாழ்வதைவிட மானத்தோடு அரைவயிற்றுக் கஞ்சியைக் குடித்து இந்தியாவில் இறந்துவிடுவது மேல் என்று இந்திய சர்க்கார் கருதவேண்டும். இந்தியாவிலும், இலங்கையிலும் இத்தகைய கிளர்ச்சிகள் வலுப்பட வேண்டும்.

"உழைப்பே செல்வம்" என்பது இன்றைய பொருளாதார நிபுணர்களின் முடிவு. எட்டு லட்சம் மக்களின் உழைப்பால்வரும் கோடானு கோடி செல்வத்தை வேண்டாமென்று உதறித்தள்ள இலங்கை அரசாங்கம் முயல்கிறது. பொருளாதார நெருக்கடியில் உழலும் இந்திய அரசாங்கம் உடனடியாக இலங்கையில் வாழும் இந்தியத் தொழிலாளிகளைத் திரும்ப அழைத்து அவர்கள் உழைப்பால் எழும் கோடானுகோடி பவுன் பெறுமதியான செல்வத்தை உபயோகிக்க வழியின்றிக் கிடந்துழல்கின்றது.

இவ்விதமான இரண்டு அரசாங்கங்களினால் தமிழனின் மானம் கப்பலேறுகிறது. அவர்கள் அரும்பாடுபட்ட செல்வங்களைக் கொள்ளையடிக்க இலங்கை அரசாங்கம் புதுப்புது இலாக்காக்களை சிருஷ்டித்து

சில உத்தியோகஸ்தர்களுக்கு 'லஞ்ச லைசன்ஸ்' கொடுத்திருக்கிறது. இவைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளிவைக்க தமிழர்கள் ஒற்றுமைப்பட வேண்டும். தமிழர்களுக்கெனப் பலம் வாய்ந்த ஸ்தாபனம் தோன்ற வேண்டும். மிதவாதத் தலைவர்கள் விரட்டியடிக்கப்படவேண்டும். புத்தகங்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள், ஸினிமாக்கள், காட்டாற்று வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடவேண்டும். புராதன காலந்தொட்டு இலங்கை தமிழர்களுக்குச் சொந்தமான நாடு. சிங்களவர்கள் சிறுபான்மையானவர்களாய் இந் நாட்டிற்கு வந்து குடியேறியவர்களே யாகும். நாகர்களோடும் யாகர்களோடும் கலந்து இன்று பெரும்பான்மையோராய்த் திகழ்கின்றனர். இதனால் தமிழர் உரிமையைப் பறித்துவிட முடியாது என்பதை நாம் உலகிற்கு உணர்த்த வேண்டும். இந்தியாவில் பிரிட்டிஷ் சிங்கத்தை விரட்டியடித்த தமிழர்கள் இலங்கையிலுள்ள சின்னஞ்சிறு நரியாட்சிக்குப் பயந்து நடுங்கிக்கொண்டிருப்பதை உலகம் ஏளனமாகப் பார்த்துச் சிரிக்கிறது.

கலை ஒரு சிறந்த ஆயுதம். ஒரு கலைஞன் தன் பேனு முனையால் இந்த உலகத்தை ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும். ஆனால் தமிழ் நாட்டுக் கலைஞன் தன்னிடத்திலுள்ள விலைமதிக்க ஒண்ணுத, அளவிடற்கரிய சக்தி வாய்ந்த ஆயுதத்தை தன் வயிற்றுத்திரத்தினிமித்தம் ஒரு சில வெள்ளிக்காசுகளுக்கு விற்றுவிடுகிருன். தமிழர்களுக்கு நேர்ந்துள்ள இக்கட்டான இந்தக்காலத்தில்கூட தமிழ்நாட்டுக் கலைஞர்களும் எழுத்தாளர்களும் "முல்லைச் சிரிப்பு" "காந்தி வெண்பா" "பெரிய புராணத்தின் சீரிய உண்மை" "சுப்புலட்சுமியின் அந்தப்புர வாழ்க்கை" "ஆரியக்காரியின் சேரி" என்றெல்லாம் பாட்டுகளும், அடுக்கு மொழிக்கட்டுரைகளும், ஆபாசக் கதைகளும் எழுதிக்கொண்டிருப்பது வெட்ககரமானது. "கொடுங்கோலன் குண்டுகளைப் படுதோல்வியடையச் செய்யாத பாக்கள் என்ன பாக்கள்? இருளடர்ந்த நரகம்போன்ற இரும்புச் சிறைகளின் கதவுகளைத் திறந்து எம் அருந் தோழர்களை விடுவியாத கவிகள் என்ன கவிகள்? என்று முழங்குகிருர் நம் நாட்டின் ஒப்பற்ற கவியும், பாராளுமன்ற உறுப்பினருமான ஹரிந்திரநாத் சட்டோபாத்தியாய. "கலையின் உண்மைக் குறிக்கோள் வாழ்க்கையை வளமுற்றதாகவும், அழகானதாகவும் செய்வதாக இருக்கவேண்டும். உண்மையை உணர்த்தத் தவறுவது கலையன்று. தூங்கிக் கிடக்கும் மனிதசமுதாயத்தைத் தட்டியெழுப்பி, உணர்ச்சியூட்டி, தங்களின் விதியை மாற்றியமைக்கவேண்டும் என்ற எண்ணத்தை

எழுப்புவதாக கலை இருக்கவேண்டும்'' என்கிறார் கவியரசர் இக்பால் இவ்வரியமொழிகள் தமிழ் எழுத்தாளர்களுக்கு நல்ல அறிவுச்சுடர் காட்டுவனவாகும்.

காதற் பாக்கள் எழுதுவதிலும், அமெரிக்க விபச்சார இலக்கியங்களை மொழி பெயர்ப்பதிலும், சினிமா நட்சத்திரங்களின் அந்தரங்க வாழ்க்கையை வர்ணிப்பதிலும் மூழ்கிக் கிடக்கும் தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக இலங்கை—இந்தியர் பிரச்சினையை வைத்து **கள்ளத்தோணி** என்னும் பெயரால் இலங்கை இந்தியர்களின் இன்னல்களை சரித்திரத்தோடு பிணைத்து ஓர் சிறந்த நாடகம் ஒன்றை **அறிஞர் அப்பாஸ்** அவர்கள் எழுதி வெளியிட்டது பாராட்டுதற்குரியதாகும். இந்நூலை மட்டுமின்றி இதைப்போன்ற நூல்கள் எத்தனை தோன்றினும் தமிழர்கள் மனப்பூர்வமாக வரவேற்பார்கள் என்று எண்ணுகிறேன். இத்தகைய நூற்கள் சிங்களத்திலும் வரவேண்டுமென்பது எனது ஆசை, **கள்ளத்தோணி** என்னும் இந்தக் கதை நாடகமாகவும், சினிமாப்படமாகவும், தோன்றினால் மக்களுக்குப் பெரும் பயன் விளையும் என்பது என் மனப்பூர்வமான எண்ணம்.

இத்தகைய கலைக்கருவியால் பெரும் பெரும் ஏகாதிபத்தியங்களையெல்லாம் கிடுகிடுக்கச் செய்து விடமுடியும் என்ற உண்மையை உணர்ந்த தமிழர்கள் சுண்டக்காய் பருமன் உள்ள சின்னஞ்சிறு சேனநாயகா ஆட்சியில் தமிழர்களின் உரிமையை நிலைநாட்டும் அறப்பணிக்கு திருநெல்வேலி ஜில்லா ஏர்வாடி வாசியான எம் நண்பர் அப்பாஸ் அவர்களின் **கள்ளத்தோணி** என்ற கலைஆயுதம் பெரும் அணுகுண்டாய் விளங்கு என்பதில் எள்ளளவும் சந்தேகம் இன்று.

**அ. இராகவன்.**

கொழும்பு **5—6—53.**

# கள்ளத்தோணி

**காட்சி 1.** **சென்னை.**

ஜீவனின் மறுமலர்ச்சி நாடக மன்றத்தில் ஏராளமான கூட்டம். நாடகத்தை ஆரம்பித்து வைத்து பேரறிஞர் மணிமாறன் பேசுகிறார்,

**மணிமாறன்:** கலாபிமானிகளே, வணக்கம். நாகரீகத்தின் சிகரத்தில் நின்று நர்த்தனம் புரிந்த தமிழன், இமயத்தில் தம் வீரக்கொடியை விண்ணுயரப் பறக்கவிட்ட தமிழன் அடிமையாய், தரித்திரனாய், கூழுக்கும் வழியின்றி. கடல் கடந்து பல தீவுகளுக்கும் சென்று, காடுகளையும் மேடுகளையும் திருத்தி, ரத்த வேர்வை சிந்தி அன்று சோலைகளாக மாற்றினான். இன்று அதே நாடுகளில் நயவஞ்சகமும், துவேசமும், துரோகமும் கோரத் தாண்டவமாடுவதைக் கண்டு அவன் ரத்தம் கண்ணீராக வழிந்தோடிக் கொண்டிருக்கையில், இப்படிப்பட்ட ஒரு கருத்துள்ள நாடகத்தை நடித்துக் காட்ட முன்வந்த தோழர் ஜீவனையும் அவரது நாடக மன்றத்தாரையும் நாம் போற்றாமலிருக்க முடியாது. இந்த நாடகத்திலே தமிழகத்துக்கும், தமிழனின் நாகரீகத்திற்கும் மாபெரும் துரோகம் செய்து விட்டதாக திருவாளர் சரித்திரம் அவர்கள் பிரளயத்தின் மீதும், அதற்கு உடந்தையாயிருந்ததற்காக நெருப்பு, சூறாவளி ஆகியவர்கள் மீதும் குற்றம் சாட்டி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்—நீதிபதி திருவாளர் பொதுஜனம் அவர்களின் நீதிமன்றத்திலே. தொடர்ந்து நீங்களும்-

வழக்கைக் கவனியுங்கள்-உங்கள் தீர்ப்பையும் வழங்குங்கள். வணக்கம். **(அமர்கிருர்)**

**[திரை விலகுகிறது. காட்சி நீதிமன்றமாக மாறுகிறது. குற்றவாளிக் கூண்டிலே பிரளயம் நிறுத்தப்பட்டிருக்கிருன்.]**

**பொதுஜனம்:** இன்றைய இந்தியாவிற்குத் தெற்கே, பூமியின் நடுக்கோடுவரை பரந்து, விரிந்து, சிறந்து விளங்கிய தமிழகத்தை—லெமூரியாக் கண்டத்தை-நீர் உமது சகாக்களான நெருப்பு, சூருவளியின் உதவியால் சிதைத்து, சின்னுபின்னப் படுத்தியும், துண்டித்தும், விழுங்கியும் மாபெரும் துரோகம் செய்துவிட்டீர் என்று திருவாளர் சரித்திரம் குற்றம் சாட்டுகிருர். இது சம்பந்தமாய் நீர் ஏதாவது கூற விரும்புகிறீரா ?

**பிரளயம்:** நீதிபதியவர்களே, நான் உலகின் பல பாகங்களிலும் பல அவதாரங்கள் எடுக்கிறேன் என்பது உண்மைதான் என்ருலும் தமிழகத்துக்கு நான் எவ்வித துரோகமும் செய்ததில்லை. எப்பொழுது, எங்கே என்ன செய்து விட்டேன் என்று சொல்லட்டும் பார்க்கலாம் ?

**சரித்திரம்:** என்ன துணிச்சல் ! லெமூரியாக் கண்டத்தில் தமிழர் நிறுவிய நாகரீக நகரங்கள் எங்கே ? தமிழர்களின் உன்னத உப்பரிக்கைகள், மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், ஆடை அணிகலன்கள், பண்டபாத்திரங்கள், இசைக்கருவிகள் எங்கே ? காவியம், ஒவியம், சிற்பம், இசை, மருத்துவம், அரசியல் அமைப்பு முதலியவற்றை விளக்கி எழுதிவைத்திருந்த எண்ணற்ற ஏடுகள் எங்கே ? **(பிரளயம் பேந்தப் பேந்த விழிக்கிறது)**

அதுதான் போகட்டும், தமிழன்னையின் அடிவயிற்றிலே கிடந்த **லங்கா** தேவியை மாபெரும் இந்து சமுத்திரத்தின் நடுவிலே தாயின் அரவணைப் பின்றிப் பிரித்து தன்னந்தனியே கண்கலங்கி தத்தளிக்க வைத்தாயே, அதற்கென்ன சொல்வாய் ?

**பிரளயம்:** நீதி யரசே, சரடுதிரிப்பதில் சமர்த்தர் என் சரித்திர நண்பர். தமிழில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றை நண்பர் சூருவளி கலிங்கத்தில் வாரி வீசி விட்டால் உடனே தனது அபத்த ஆராய்ச்சி மூலம் "கலிங்கத்தில் ஆதியில் வசித்தவர்கள் திராவிடர்கள்தான்" என்று கதையளந்து விடுவார்! "டிமிட்ராவ்—வெங்கட்ராவ், இரு பெயர்களிலும் ஒற்றுமை தொனிக்கிறது. ஆகையால் டிமிட்ராவின் கொள்ளுப்பாட்டன் தமிழனுகத்தான் இருந்திருக்க வேண்டும்" என்று சொல்லும் இவரின் அரிய ஆராய்ச்சி! எங்கே, ஒரு அத்தாட்சி காட்டச் சொல்லுங்கள்—இலங்கை தமிழகத்துடன் இணைந்திருந்தது, என்பதற்கு!

**இலங்கையும் பழைய தமிழகமும் ஒன்ருக இணைந்திருக்கும் தேசப்படம், ஒரு அகலமான மரக்கட்டையில் செதுக்கப்பட்டதை சமர்ப்பிக்கிருர் சரித்திரம். பிரளயம் திடுக்கிட்டு விழிக்கிருர்.**

**சரித்திரம்:** நீதிபதியவர்களே, நான் அரும் பாடுபட்டு செய்த ஆராய்ச்சியின் பலன் இது. மரத்தில் செதுக்கப்பட்டிருக்கும் இப்படத்தில் இலங்கை எவ்வாறு தமிழகத்துடன் இணைந்திருக்கிறது என்பதைப் பாருங்கள். இந்தப் பிரளயம் இலங்கையைத் தமிழகத்திலிருந்து துண்டித்த தோடல்லாமல் இந்தப் படத்தையும் இந்து மகா சமுத்திரத்தில் தள்ளிவிட்டான். கன்னியா

குமரியிலுள்ள மீன் பிடியாளர் ஒருவரிடமிருந்து இந்தப் படம் எனக்குக் கிடைத்தது.

**பொதுஜனம் :** என்ன சொல்லுகிறீர், பிரளயம் ?

**பிரளயம் :** உம்ம் இல்லே இல்லே...சூருவளிதான்....இல்லே நெருப்புதான்....உம்ம் இல்லே பொய்...இலங்கை சிங்களவர் நாடு. தமிழர்கள் அங்கே இடையில்தான் குடியேறினுர்கள். ஆகையால்...........

**இச்சமயம் ஒரு பெண் தலைவிரி கோலத்துடன், கண்ணீரும் கம்பலையுமாகக் கோர்ட்டுக்குள் ஓடிவருகிருள்.**

**பெண் :** அடத்துரோகி ! அன்னையின் அடிவயிற்றில் அக மகிழ்ந்து கிடந்த என்னை நீ துண்டித்து துயரக்கடலில் தள்ளினதுமல்லாமல் துணிந்து புளுகவுமா பார்க்கிருய்? சீ, மானங்கெட்டவனே !

**பிரளயம் :** (பீதியுடன்) லங்கா !....

**நெருப்பும் சூருவளியும் ஓடப்பார்க்கிருர்கள். போலீ ஸார் தடுத்து நிறுத்துகின்றனர் கோர்ட்டில் குழப் பம். 'ஆர்டர் ஆர்டர்' என்ற சப்தம். அதைத் தொடர்ந்து நிசப்தம் நிலவுகிறது.**

**லங்கா :** நியாயாதிபதியே, நான்தான் தாயிடமிருந்து இந்த சண்டாளன் பிரளயத்திஞல் துண்டிக்கப்பட்ட அபாக் கியவதி லங்கா ! கிட்டத்தட்ட 4000 ஆண்டுகளுக்கு முன்னே, பைபிளில் சொல்லப்படும் நோவா காலத் திலே—குர்ஆனில் கூறப்படும் நூஹ் நபி காலத்திலே இந்தப் பாவி பிரளயம் ஒரு கோரத்தாண்டவம் ஆடி ஞன். பூமாதேவியின் பெரும்பகுதியை சமுத்திர ராஜனுக்குப் பலியிட்டான். லெமூரியாக் கண்டம்

என்ற பெயரால் பரந்து, விரிந்து, நாகரீகத்தில் சிறந்து நின்ற தமிழகத்தைச் சின்ன பின்னப்படுத்தினான். அப்பொழுதுதான் என்னையும் என் தாயிடமிருந்து பிரித்து அனாதையாக்கி விட்டான். கதறினேன், துடிதுடித்தேன். கதியில்லை. அன்புக்கரம் நீட்டி, என் தலையை வருடி, "கைவிடமாட்டேன், கண்கலங்காதே. உடலால் இருவராகிவிட்டாலும் உள்ளத்தால் நாம் ஒருவரே" என்று தேற்றினாள் தமிழன்னை. என்மக்கள் தன் சகோதரர்களாகிய யாகர்களுடனும், நாகர்களுடனும் வாழ்ந்து வந்தனர். துண்டிக்கப்பட்டிருந்தாலும் தூரமும் தண்ணீர் ஆழமும் அதிகமில்லாதிருந்ததால் அன்னை பூமியிலிருந்து மக்கள் அடிக்கடி நீந்தியும், நடந்தும், வெகுசுலபமாக வந்துபோய்க் கொண்டிருந்தார்கள். அப்புறம் வரவர கடலரித்து ஆழம் அதிகமானதும் சிறுசிறு கட்டுமரங்களையும், தோணிகளையும் உபயோகித்துக் கொண்டார்கள். ஒருநாள்........

பல தோணிகள் வழக்கத்திற்கு மாறாக வடமேற்குத் திசையிலிருந்து என்னை நோக்கி வருவதைக் கண்டேன். கிட்டத்தட்ட எழுநூறு புது ஆசாமிகள் அவைகளிலிருந்தனர். என்னுடைய அனுமதியில்லாமல், கள்ளத்தனமாக வந்த தோணிப் பேர்வழிகளை உடனே திரும்பிப் போகும்படி கண்டிப்பாக உத்திரவிட்டேன். அவர்களில் ஒருவன் என்னை வணங்கி என்கையில் ஒரு ஓலையைத் தந்தான். அது என் தங்கை கலிங்கத்தினால் எழுதப் பட்டிருந்தது. அவள் நாட்டு இளவரசனும், விஜயனும், நாட்டில் குற்றங்கள் புரிந்து வந்ததால் என் கண்காணிப்பில் இருந்து திருந்தட்டும் என்று சகோதரி அனுப்பியிருந்தாள். கலிங்கச் சகோ

தரி மக்களை கள்ளத்தோணி ஆசாமிகள் என்றும் பாரா மல் கைகொடுத்து வரவேற்றேன். அவர்கள் என் மக் களுடன்— குறிப்பாக யாகர்களுடன் நெருங்கிய தொ டர்பு கொண்டு வாழ்ந்தார்கள். **ஸிம்ஹபுரா** வைத் தலை நகராகக் கொண்ட கலிங்க தேசத்திலிருந்து வந்திருந்த படியால தங்களை **ஸிம்ஹளர்** என்று அழைத்துக்கொண் டார்கள். தங்கள் கலிங்க நாட்டுப் பாஷையையும் எனது மொழியையும் கலந்து **சிங்களம்** என்ற ஒரு புது மொழியையும் சமைத்துக்கொண்டார்கள். எனது மூத்த புதல்வராகிய தமிழரும், இளைய புதல்வர்களாகிய யாகர், நாகர்களும் சிங்களவர்களுடன் ஒன்று பட்டு அன்யோன்யத்துடன் வாழ்ந்து வந்தார்கள். தங்களது கலிங்க தேசத்துடனும், என் அன்னைத் தமிழகத்துட னும் விவாக பந்தங்களையும் வெகு தாராளமாக ஏற் படுத்திக் கொண்டார்கள். கலிங்க நாட்டிலிருந்து வந்து என்னிடம் தஞ்சம் புகுந்த சிங்களவர்களும் திராவிட மரபினர்கள்தான். கலிங்க மன்னன் தேவேந் திரவர்ம இராசராசன் என்பவன் சோழ மன்னனாகிய முதல் குலோத்துங்க சோழனின் மகள் இராச சுந்த ரியை மணந்துகொண்டான். அப்பெண் வயிற்றில் தோன்றிய அனந்த பத்மன் என்பவன் கி. பி. 1078-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் தேதி சிம்மாசனம் ஏறினான். நான் ஏற்கெனவே சொன்னேனே என் அனுமதியின்றி கள்ளத்தோணியில் வந்த கலிங்க கோஷ் டியின் தலைவன் கலிங்கநாட்டு மன்னனின் மகனாகிய விஜயன் என்று, அவன் முதலில் என் யாக குமாரத்தி யாகிய குவைனியை மணந்தான். அப்பால் இரண்டா ந்தாரமாக பாண்டிய நாட்டு மன்னனின் புதல்வியை

மணந்துகொண்டான். சோழநாட்டு மன்னன் நரேந்திரவர்மன் ஓர் சிங்கள அரசகுமாரியை மணந்து கொண்டான். சிங்கள அரசகுமாரி மிட்டா என்பவளை மணந்துகொண்டவனும் ஓர் பாண்டிய அரசகுமாரனே. அவள் வயிற்றில் உதித்தவன்தான் இலங்கை சரித்திரம் பெருமையுடன் போற்றிக் கொண்டாடும் மஹா பாராக்கிரம பாகு. இவன் கி. பி. 1169-ல் பாண்டிய நாட்டில் அரசு புரிந்த பராக்கிரம பாண்டியனுக்கு நெருங்கிய உறவினனுக இருந்தபடியால், பாண்டிய நாட்டின் மீது சோழமன்னன் குலசேகரன் போர் தொடுத்த போது பராக்கிரம பாண்டியனுக்கு பல முறை ஏராளமான படைகளை அனுப்பி, எண்ணற்ற சிங்கள வீரர்களை பலி கொடுத்து உதவி செய்தான். பராக்கிரம பாண்டியன் இறந்து விட்டபொழுதும் கூட சிங்களப்படை அவனுக்காகப் போர் புரிந்து, சோழ மன்னனை விரட்டியடித்து, பராக்கிரம பாண்டியனின் மகன் வீர பாண்டியனை சிம்மாசனமேற்றி வைத்ததை சிங்கள சரித்திரம் இன்றும் பெருமையுடன் கூறிக் கொண்டிருக்கிறது. கி. பி. 676-ல் சிம்மாசனத் தினின்று விரட்டப்பட்ட இலங்கை மன்னன் மான வம்மன் காஞ்சி மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். காஞ்சி மன்னன் மீண்டும் அவனை சிம்மாசனத்தி லமர்த்தியதோடு இந்தியக் கலை நுட்பங்களையும் இலங்கைக்கு அளித்தான். சிகிரியா போன்ற சிற்ப நுட்பங்கள் இலங்கைக்குப் பரிசளிக்கப் பட்டது. கி. பி. 920-ல் சோழ மன்னனுகிய முதலாம் பராந்தக னுல் விரட்டப்பட்ட பாண்டிய மன்னன் இராச

சிம்மனுக்கு சிங்கள மன்னனுன காசிபன் அபய மளித்து சோழனின் பகையை சம்பாதித்தான். அதன் பலனுக சோழன் தொடுத்த போரில் ஏராளமான சிங்களப் படைகள் அழிந்து போயின. கடைசியில் சிங்கள மன்னன் தன் தலை நகரைவிட்டே ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது கண்ட பாண்டிய மன்னன் தன் பொன்முடியையும், அரச சின்னங்களையும் காசிபனிடம் ஒப்படைத்துவிட்டு சேர நாட்டிற்கு ஓடிவிட்டான். சோழன் எவ்வளவு பரிந்து கேட்டும், போர் தொடுத்துப் பார்த்தும் காசிபன் பாண்டிய மன்னனின் மணிமுடியையும், அரச சின்னங்களையும் சோழனிடம் ஒப்புவிக்க மறுத்துவிட்டான். அவ்வளவுதூரம் வேரூன்றியிருந்தது சிங்கள—பாண்டிய நட்பு. இலங்கை மன்னன் விஜயபாகு ஓர் கலிங்க இளவரசியை மணந்ததால் இலங்கையில் கலிங்கர் செல்வாக்கு ஓங்கியது. இறுதியில் கலிங்கமஹா என்னும் கலிங்கன் ஒருவன் இலங்கைக்கே மன்னனுக வந்துவிட்டான். கி. பி. 1385–ல் மலையாளத்திலிருந்து வந்த இடையர் குலத்தவரான அழகுக்கோனுர் என்பவரை சிங்களவர்கள் அரசனுகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். 1410–ல் சீனுவிற்கு சிறை செய்துகொண்டு போகப்பட்ட வீரகேசுவரன் என்பவன் சிங்கள மன்னனுன அழகக்கோனின் உறவினனென்றும், சோழ நாட்டு இந்துமதத்தினன் என்றும் சீனர்களால் கூறப்படுகிறது. மயூரசந்தேசம் என்னும் சிங்கள நூலிலும் இதற்கு சான்றுகள் கிடைக்கின்றன. இன்றுகூட சிங்கள சாதியில் அலகக்கோன் (அழகக்

கோன்) குடும்பம் அழியாது இருந்துவருகிறது. 1450–ல் இலங்கையில் ஆட்சி செலுத்திய பராக்கிரம பாகுவின் சிறந்த தளகர்த்தனுக விளங்கிய செண்பகப் பெருமாள் என்பவன் நாஞ்சி நாட்டிலுள்ள ஒரு பண்டாரத்தின் மகன். இவன் சிங்கள அரசனுக்குத் தத்துப்பிள்ளையாக வந்து சேர்ந்தான். இவனே பராக்கிரம பாகுவிற்குப் பின் புவனேபாகு என்னும் சிங்களப் பெயருடன் அரியணையேறி சிங்கள அரசனுகத் திகழ்ந்தான்..........இப்பொழுதாவது உணருங்கள், இலங்கை ஒரு காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாயிருந்தது. அப்பால் தமிழர்களின் குடியேற்ற நாடாகக் கருதப்பட்டது. அதற்கப்புறம் மாமன் மைத்துனன் மருமகன் முதலிய தமிழர்களின் உறவினர்களான சிங்களவர் நாடாக—தமிழர்களின் இரத்தசம்பந்தமுள்ள இனத்தவர்கள் நாடாக விளங்கியது. தமிழர் சிங்களவர் தொடர்பு நீண்ட நெடுங்காலமாகவுள்ள பிரிக்க முடியாத ஒன்று. உறவு முறை கொண்ட ஒரு சகோதரத்வ சம்பந்தமுடையது இந்நாடு. தமிழர்களும் தமிழ் மொழியும், தமிழ் எழுத்தும், தமிழ்க்கலையும் தமிழர் நாகரீகமும், தமிழ் இரத்தமும் இந்நாட்டு மக்களிடையே பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்து கிடக்கிறது என்பதை உணராது 'இந்நாட்டில் உரிமை கொண்டாடுவதற்கு தமிழர் யார்?' என்று கேட்கும் கத்துக் குட்டிகளான அரசியல்வாதிகள் அண்ணனைத் தம்பி 'உன் அப்பன் யார்?' என்று கேட்கும் அறிவுச் சூனியர்கள் என்று சரித்திரம் இன்றில்லா விட்டாலும் என்றுவது தீர்ப்புக் கூறுமலிருக்க முடியாது.

அன்று அவர்களின் ஒற்றுமைகண்டு நான் உளம் பூரித்திருந்தேன். அப்புறம்...........அராபியர் வந்தனர். போர்த்துக்கீஸியர், டச்சுக்காரர் வந்தனர். கடைசி யாக ஆங்கிலேயர் வந்தனர், இந்த வெண்பிசாசுகள் உலகில் எங்கெங்கு சென்ருர்களோ அங்கங்கெல்லாம் சொந்த மக்களிடையே பிளவு உண்டுபண்ணி வைத்துக் கொள்வதுதான் இவர்களின் தந்திரம், அப்படித் தான் என் கண்மணிகளிடையேயும் துவேசத்தை வளர்த் தார்கள் — தங்கள் சுயநலத்திற்காக, சுரண்டலுக் காக! இவர்களும் கடைசியில் 1948-ம் ஆண்டு பெப் ரவரிமாதம் நாலாம் தேதி தொலேந்து போவதாகச் சொல்லி மூட்டை முடிச்சுகளேயும் கட்டினுர்கள். இனி விமோசனம்தான் என்று எண்ணி இறுமாந்திருந்தேன். ஆனல் அந்தோ! மூட்டை முடிச்சுகள்தான் சென்ற னவே ஒழிய அவர்கள் செல்லவில்லே, அவர்களேவிடக் கொடுஞ்சித்தர்களாக என் சிங்கள மக்களில் சிலரை மாற்றிவிட்டிருக்கிருர்கள், அதிகார ஆசைகாட்டி! ஆதிக்க வெறியும், பதவிப்பித்தும் கொண்ட இந்தப் பொம்மைகள் என் வயிற்று மாணிக்கங்களில் மூத்த வர்களான தமிழர்களுக்கும் இளேயவர்களான சிங்கள வர்களுக்கு மிடையில் தங்கள் சுயநலத்துக்காக துவே சத்தை வளர்த்து இன்று அராஜரீகக் கூத்து ஆடுவதை நினேத்தால் என் நெஞ்சு வெடிக்கிறது. என் அன்னேத் தமிழகத்துடன் நான் கொண்டிருக்கும் அனபுப் பிணேப் பை அறுத்தெரியப் பார்க்கிருர்கள். ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தினுல் உலகம் தாங் ருதா? பிரித்தாளும் பேய்களின் சூழ்ச்சியிலே சிக்கி

விட்டார்கள் இந்தப் பித்துக்கொள்ளிகள். வந்தவன் சொல்லைக் கேட்டு சொந்த சகோதரனையே துன்புறுத்துகிறார்கள். இந்தப் பாதகன் பிரளயம் அன்று அன்னையிடமிருந்து என்னைப் பிரித்தான். என் அடங்காப் பிடாரி இளைய புதல்வர்களில் சிலர் என்னருமை மக்களாகிய யாகர்களையும் நாகர்களையும் காட்டிற்கு அடித்து விரட்டி கருவறுத்தனர். என் மூத்த புதல்வர்களாகிய தமிழர்களை அக்கரையிலும் இக்கரையிலும் பிரித்துவைத்து சிரித்து விளையாடுகிறார்கள். என் அருமைக் கண்மணி ஒருவன் தன் சொந்த உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்து அதோ மன்னார் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலே கர்ஜிப்பதைக் கேளுங்கள்:—

(காட்சி மாறுகிறது.)

## காட்சி 2. மன்னார் மாஜிஸ்டிரேட் கோர்ட்

[ஏராளமான கூட்டம். விசாரணை நடைபெறுகிறது. குற்றவாளிக் கூண்டிலே ஓர் இளைஞன் = சந்திரன்.)

**மாஜிஸ்டிரேட்:**—நீ இலங்கைக்கு வந்தது குற்றம்.

**சந்திரன்:**-பெருங்குற்றம். மன்னிக்கமுடியாத குற்றம். நான் வந்ததல்ல—என் முன்னோர்கள் வந்தது. அவர்கள் மட்டும் அன்றே இங்கு வராமலிருந்திருந்தால், இன்று அவர்களின் வீரசந்ததிகளுக்கு இந்த இழிநிலை—அவலநிலை—அவமானநிலை ஏற்பட்டேயிருக்காது. ஹட்டன் காடுகளுக்குப்பதிலாக அவர்கள் உதகமண்டலக் காடுகளை வெட்டித்திருத்தியிருந்தால் — மேற்குத் தொடர்ச்சி

மலையை மேனிசெழிக்க வைத்திருந்தால் —நீலகிரிச் சோலைகளை வேலியமைத்துக் காத்திருந்தால் அந்தப் பொன்கொழிக்கும் நாட்டு மக்கள் இன்று இப்படிக் கண்கலங்கி நிற்க நேர்ந்திருக்காது. இலங்கையின் மலைக் காடுகளுக்குச் சிந்திய ரத்தத்திற்குப் பதிலாக மைசூர் சந்தனக்காடுகளுக்குத் தண்ணீராவது சிந்தியிருந்தால் இன்று கண்டிப் பகுதியை அண்டிப்பிழைக்க, நாவலப் பட்டியில் கேவலப்பட சந்தர்ப்பமே வாய்த்திருக்காது.

**சர்க்கார் வக்கீல்:**—குற்றவாளி கேட்ட கேள்விக்கு விடையளிக்காமல் அனுவசியமாகக் கதையளக்கிறார்,

**சந்திரன்:**—ஹும். கதையாம். அனுவசியமான கதையாம்! கள்ளத்தோணி!....கள்ளத்தோணியில் வந்தேன் அதிர்ஷ்டசாலிகளான சிங்களவர்களின் மூலபிதா விஜயனையும் அவனது கூட்டத்தார்களையும் போலல்ல—துரதிர்ஷ்ட தமிழர்களைப் போல, ஆகவே பிடிபட்டேன். இது உண்மை. பிடித்தவர்களோ சட்டத்தின் பிரதிநிதிகள். இதுவும் அசைக்க முடியாத உண்மை. அப்படியிருக்க இந்த விசாரணை எதற்காக? சர்க்கார் தங்கள் அதிகாரிகளையே சந்தேகிக்கிறதா?

**மாஜிஸ்:**—நீதி வழங்கப் படுவதற்கு விசாரணை அவசியம்.

**சந்திரன்:**—அப்படியானால் என்னுடைய விளக்கம் அதைவிட முக்கியம்.

**மாஜிஸ்:**—குற்றச் சாட்டிற்கு சம்பந்தப்பட்டதை மட்டும் சொல்லலாம்.

**சந்திரன்:**—நன்றி....அதிகாரவர்க்கம் எத்தனையோ அடக்குமுறைகளைக் கையாண்டும் அவைகளையும் மீறி கள்ளத்தனமாகக் குடியேறும் இந்தியர் தொகை—குறிப்பாக

தமிழர்களின் தொகை பெருகுகிறதே யன்றி அருகு வதைக்காணோம் ஏன் ?

**சர். வக்கீல்:**— பாடுபடாமல் பணம் தட்டிக்கொண்டு போகத்தான் (**கோர்ட்டில் சிரிப்பு**)

**சந்திரன்:**— விவேகமற்ற பதில். பாடுபடாமல் பலனுண்டுஎன் பது தமிழனின் அகராதி அறியாத சொல். உழைப்பு என்றதும் உடல் நடுங்கும் உலுத்தனு தமிழன்? கடல் கடந்த நாடுகளிலே, காலைக் கடுங்குளிரிலே, கந்தை யுடுத்து, காலணியின்றி, அட்டைகடித்தும் அலறித் துடிக்காமல், அரைவயிற்றுக் கஞ்சிக்காக தேயிலை பறிக்கவும், ரப்பர்பால் எடுக்கவும், ஈயச்சுரங்கங்களிலே பயமின்றி இறங்கவும், நெஞ்சொடிய ரிக்ஷா இழுக்க வும் கலங்காமல் முன்வரும் இந்தக்கர்மவீரர்களா பாடு படாமல் பணம் பறிக்க வருகிறுர்கள்?

**சர். வக்கீல் :**— அப்படியானுல் இலங்கை மக்களை காப்பாற் றத்தான் இப்படிக் கள்ளத்தோணி ஏறி வருவதாக நம்மை நம்பச் சொல்கிறுரா, இவர்? (**சிரிப்பு**) வராதே என்று தான் நாங்கள் சொல்கிறேமே.

**சந்திரன் :** இன்று சொல்கிறீர்கள். ஆனுல் அன்று 'வராதே' என்று சொல்லாமலிருந்தது மாத்திரமல்ல, 'வா வா' என்று அழைத்தது மாத்திரமல்ல, தாய் நாட்டை நம் பிக்கிடந்த மக்களை, பிறந்த நாட்டிலே சிறந்து விளங் கிய மக்களை 'ரத்தினத்தீவு' 'தங்கம் விளையும் லங்கை' 'வாருங்கள். வளப்படுத்துங்கள். வாணிபம் செய்யுங் கள்' என்றெல்லாம் உங்கள் கைக்கூலிக் கங்காணிகளை அனுப்பி அழைத்து வரச்செய்தீர்களே....... எப்படியெப் படியெல்லாம் செப்படி வித்தைகள் காட்டி உங்கள்

கங்காணிகள் தன்மானத் தமிழனின் தாழ்பணிந்து கெஞ்சினுர்கள் தெரியுமா ?

[உடனே திருப்புக் காட்சி]

## காட்சி 3. 1926 ஆலங்குடி அருணுசலம் வீடு

**கங்காணி பேச்சிமுத்து:—**........இப்படியெல்லாம் கெஞ்சுறேனே தம்பி, எல்லாம் எனக் காகவா ?....நாளேக்கி நீ நல்லாயிருக்கும்போது என்னேயா நெனேக்கப் போரே ? ....நீயுந்தான் என்னுன்னமெல்லாமோ செஞ்சிப் பாத்துட்டே. ஏதாச்சும் உருப்பட்டுதா ?... திரைகடல் ஓடுது திரவியம் தேடுதூண்ணு........

**ராமையாப் பிள்ளே:—**(வந்துகொண்டே) உம்ம்....ம் திரை கடல் ஓடவுமில்லே—திரவியம் தேடவுமில்லே........திரை கடல் ஓடியும் திரவியம்தேடு' — அப்படீண்ணு நம்பளுக்காகத்தான் சொல்லி வச்சிருக்கு.

**கங்காணி :—**அப்படிச் சொல்லு ராமையா அண்ணே நானுந்தான் அப்பவே புடிச்சி சொல்லிக்கிட்டேயிருக்கேன். நம்ப அருணுசலம் என்னமோ பெரமாதமா ரோசிக்கிருன்.

**ராமையா :—**அவன் ரோசிக்கிறதுலேயும் தப்புல்லே தம்பீ. அந்தப் பொண்ணு தங்கத்தோட குணத்தையும், அன்பையும் நினேச்சா பிரிஞ்சிப் போரதுக்கு இளம் மனசு சகிக்குமா ? அதுலேயும் புள்ளப்பாசம் வேறே. சிறுசுகதானே.

(வாசலில் கண்ணீருடன் நிற்கும் தங்கத்தைப் பார்க்கிருன் அருணுசலம்)

**கங்காணி** :—அதுக்குத்தானே அண்ணே நானும் இவ்வளவு பெரயாசப்படரேன். பாவிப்பய சீமையிலே வானமும் இருந்தாப்புலே ஏமாத்திடிச்சி. தங்கமும் கொழந்த மீனுட்சியும் அரப்பட்டினி கிடந்தா உடம்பு என்னத் துக்காகும்?........அருணுசலம் அக்கரை போனதும் மாசம் இருபத்தஞ்சி ரூவா டணுருண்ணு அனுப்பி வைச்சிடமாட்டான்.

(உவகையுடன் தங்கத்தை ஏறிட்டுப் பார்க்கிருன் அருணுசலம், அவள் சோகமே உருவாக நிற்பதைக் கண்டு தயங்குகிருன்.....)

**அருணு** :—எதுக்கும் நீ போயிட்டு நாளைக்கு வா அண்ணே. தங்கம் கிட்டேயும் ஒருவார்த்த கேட்டுக்கிட்டு முடிவு சொல்லுகிறேன்.

**கங்காணி** :—என்னமோப்பா, அந்த ஏழுமலையான்தான் உனக்கு நல்ல புத்தியக்குடுத்து நல்லமுடிவா சொல்லச் செய்யணும். வலியவர்ர லெச்சிமிய காலாலே உதச் சித் தள்ளிடாதே........உம், அப்போ ராமையாண்ணே எந்தப்பக்கம் ?

**ராமையா** :—நானும் வர்ரேந்தம்பி (அருணுசலத்திடம்) போய் வரேம்பா. (போகிருர்கள்.)

**அருணுசலம்** :—(பெருமூச்சுடன்) தங்கம்........

**தங்கம்** :—(பொங்கிவரும் அழுகையை அடக்கிக் கொண்டே) வேண்டாம். நாம்ப பிச்சை எடுத்து குடிச் சிக்கிட்டாவது ஒண்ணு சந்தோசமா இருக்கலாம். மரத்

தை வச்ச நாயன் தண்ணி ஊத்தாம இருக்கமாட்டான். நீங்க எங்கேயும் போகவேண்டாம்.

**அருணு** :—இப்புடி எத்தினி நாளேக்குத்தான் நீ பட்டினி கெடக்கிறது.........கொளந்த வேர குராவிப் போகுது. இப்புடியே பட்டினி கெடந்தா........

**தங்கம்** :—உங்க மடிமேலேயாவது சாவேன்—நிம்மதியாக.

**அருணு** :—அசட்டுப் பிசட்டுன்னு போசாதேதங்கம். எப்படி யாவது கொஞ்ச காலத்த கடத்திட்டோமிண்ணு........ நம்பளுக்கும் ஒரு நல்ல காலம் பெரக்காமலா போயிடும்?

**தங்கம்** :—அப்புடீண்ணு என்னேயும் கூடவே அழச்சிட்டுப் போயிடுங்க.

**அருணு** :—அப்புடிக்கூட நெனச்சேன். ஆனு, அந்த சீம உனக்கு ஒத்துக்கிடுமோ என்னமோ ?........

**தங்கம்** :—இவ்வளவு பெரிய நம்ப நாட்டிலே கோடான கோடிப்பேரு பெளேக்கும்போது நாம்பதானு கடலேத் தாண்டிப்போயி சம்பாதிக்கணும்.

**அருணு** :—அப்புடிச் சொல்லாதே தங்கம் பேச்சிமுத்தைப் பாரு. கடலே அவிச்சி வித்துக்கிட்டு, கஞ்சிக்கி சிங்கி யடிச்சான். இப்ப பாத்தியா ? பத்து வெரலுக்கும் தங்க மோதிரம். வைரக்கடுக்கன், களுத்துலே செயின்............

**தங்கம்** :—யாரைக் கொள்ளேயடிச்சானே........

**அருணு** :—இல்லே தங்கம். லங்கையிலே வேலேக்கிரொம்பக் கிராக்கியாம். நம்ப நாட்டுல இருக்கிருப்போல அங் கேயும் எவ்வளவோ செல்வமெல்லாம் இருக்குதாம். ஆனு அந்த நாட்டுச் சனங்களுக்கு வேலேண்ணு வேப்

பங்காயாம். அதுனுலேதான் வெண்ணெயை வச்சிக் கிட்டு நெய் செய்து தாங்கோண்ணு நம்ப நாட்டு சனங் களைக் கூப்புடுருங்களாம். எங்கேயாவது நாம்ப ஒளைக் கணும், சம்பாதிக்கணும். அவ்வளவுதானே. அது வும் நம்ப நாட்டு சனங்க வசிக்கிற நாடுதானே.

**தங்கம்:**—இனிம உங்க இஷ்டம். போய்ப்பாத்துடுவோம். உங்க ஆசையையுந்தான் ஏன் தடுக்கணும்.

**அருணு:**—உம்ம்....ம்.... பார்ப்போம்.... (**கண்ணீரைத் துடைத்துக் கொள்கிருன்**).

## காட்சி 4. இலங்கை—தேயிலைத்தோட்டம்.

**[தங்கம் எழும்பி வீட்டு வேலைகளைக் கவனிக்கிருள். கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்கிக் கொண்டிருக்கும் அலஞ்சலத்தை கங்காணி பேச்சு முத்து எழுப்புகிருன். நூற்றுக்கணக்கானேர் வேலைக் குப் போய்க்கொண்டிருக்கிருர்கள்........]**

**கங்காணி:**—ஏப்பா....தம்பி....அருணுசலம்....எழும்புப்பா.... தம்பீ....உம்ம்....எழும்பு........

**அருணு:**—(**புரண்டுகொண்டே**) உம்ம்....என்னுண்ணே.... மணி யென்னு ?........

**கங்காணி:**—மணி நாலரை ஆயிடிச்சிப்பா....தங்கம் வீட்டு வேலை கூடசெய்து முடிச்சிட்டுதே.

**அருணு:**—ஐயோ....நாலரை மணிக்கி...நடுக்குர குளுரிலே ....கொட்டுர பனியிலே....எப்புடியண்ணே தேயிலைக் கொழுந்து எடுக்கிறது ?....

**கங்காணி:**—என்னப்பா செய்றது ?....வெய்யில் வந்துட்டா கொழுந்தெல்லாம் பெருசா விரிஞ்சி, வாடி, வசங்கிப் போகும்...அப்புறம் ஒண்ணும் நம்பர் கொழுந்து எப் புடிக்கெடைக்கும் ? சோம்பலு இல்லாம சுறுசுறுப்பா உளெக்கிறதுனுலேதாம்பா தமிழனுக்கு எல்லா நாட்டு லேயும் நல்லா மதிப்புருக்கு....கொட்டுர பனியிலே பறிக்கிற தேயிலேதான் உலகத்துலேயே ஒசத்தீண்ணு சொல்ருங்க.

**[அருணுசலம் எழும்பி வேலேக்குப்போகிருன். வழியில் ஒரு கிழத்தொழிலாளி கதறுகிருன்**

**கிழவன்:**—இந்த அக்கிரமத்தக் கேப்பாரு இல்லீங்களா?.... கங்காணித்தம்பீ....சொந்த நாட்டையும் ஊட்டையும் மறந் துட்டு 45 வருசமா நாய்மாதிரி உளெச்சதுக்கா இந்தக் கெதி !...சாமிக்குக்கூடக் கண்ணில்லியா?.......

**அருணு:**—என்னுண்ணே வெசயம்?

**கிழவன்:**—எம் மகளேப் பொண்டாளக்கேட்டான் அந்தச் சண்டாளப் பாவி தொரே. உடனே அவள நாவலப் பட்டிலே இருக்கிற எந்தம்பி ஊட்டுக்கு அனுப்பிச்சி வச்சிட்டேன். அதுக்காக எம்மேலே ரொம்பக் கோவமா இருக்கானும். உடனே வந்து பாக்கச் சொன்னுனும்....

**அருணு:**—கோவமா இருந்தா இருந்துட்டுப் போரான். அதுக்காக........

**கிழவன்:**—........பற்றுச்சீட்ட கிளிச்சி வெளியே அனுப் பிச்சிட்டா? இந்த சாகப்போற வயசுலே நான் எங்கே

போயி பிளேக்கிறது? அப்பனே, கதிர்காமக் கந்தா!

**அருணு:**—என்னுண்ணே இது! வேர ஒரு நல்ல தொரயோட தோட்டத்துலே சேந்துட்டாப்போவுது.

**கிழவன்:**—நீ வெவரம் தெரியாதவம்பா, புதுசு. இந்தப் பாவி மவன் பற்றுச்சீட்டு தந்தாத்தானே மத்த தொரைங்களும் தோட்டத்திலே சேப்பாங்க............ஐயோ............ கண்ணம்மா.......உன்னை நான் எப்படிக் காப்பாத்தப் போறேன்?............?

**(அருணுசலத்தை இழுத்துக்கொண்டு போகிருன் கங்காணி........ஏராளமான இந்தியர்கள் காலைக் கடுங்குளிரையும் பாராமல் தேயிலைக்கொழுந்து கிள்ளிக்கொண்டிருக்கிருர்கள். கண்டக்டர் ஸில்வா பெண்கள் வேலை செய்யும் பகுதியில் வட்டமிடுகிருன்....திடீரென்று....)**

**பெண் குரல்:**—அடச்சீ....உடு....உடுறியா என்னு....உம்ம்.... நீ நாசமாப்போக....ஐயோ........

**(திமுறும் சப்தம் கேட்டு எல்லாத் தொழிலாளிகளும தலைநிமிர்ந்து பார்க்கிருர்கள். சப்தம் செடிகளுக்குப் பின்னுலிருந்துதான்வருகிறது. ஆனுலும் யாவரும்செயலற்று, பெருமூச்சு விட்டு நிற்கிருர்கள். அருணுசலம் மட்டும் விரைந்து ஓடுகிருன்........)**

**பெண்:**—[அருணுசலத்தைக் கண்டு] அண்ணே, ஓடியாங்க. இந்த நாசமாப் போறவன் கிட்டேயிருந்து என்னைக் காப்பாத்துங்க........காப்பாத்துங்க.... ..

**அருணு:**—அடச்சீ....விடய்யா அந்தப் பெண்ணே. வெக்கமில்லே ஒனக்கு?......

**கண்டக்:**—வாட்! இடியட்...........நீ நேத்துத்தான் வந்தது,

அதுக்குள்ளே இந்த நோனுவ லவ்பண்றது!........போ மேன்.......

**அருணு:**—சீ, மானங்கெட்டவனே. உனக்கு அக்கா தங்கை இல்லே?........

**கண்டக்:**—யூ டேம் பூல். **(சப்பாத்துக்காலால் உதைக்கிறுன். அருணுசலம் எழுந்துவந்து அவனை நையப் புடைத்து விடுகிறுன். கூக்குரல் கேட்டு ஓடிவந்தவர்கள் திகைத்து நிற்கிருர்கள். வெற்றிவீரன் போல் நிற்கிறுன் அருணுசலம்.)**

**கங்காணி:**—அடப்பாவி! என்ன செய்துட்டே? எங்கபொழைப் புலேயே மண்ணப் போட்டுட்டியே.

**அருணு:**—அண்ணே, ஒனக்கு வெசயம் வெளங்கல்லே. இந்தத் தடிப்பிசாசு நம்ப வள்ளிய........

**கங்காணி:**—அதுக்கு நீ யாருடா கேக்கிரத்துக்கு?

**அருணு:**—**(துடிதுடித்து)** என்னு சொன்னே! பேச்சிமுத்து, நம்ப தங்கச்சி மேலே ஒருத்தன் கைய வைக்க நாம் பார்த்துக்கிட்டா நிற்கிறது?

**கங்காணி:**—தொட்டா என்னுடா? கொரஞ்சாப் போகும். **(கண்ணைச்சிமிட்டுகிருன் கண்டக்டரைத் தூக்கிக் கொண்டே)** மன்னிச்சிடுங்க கண்டாக்கு தொரே. அவன் புதுசு **(கண்டக்டர் உறுமிக்கொண்டே போகிருன், கங்காணி அருணுசலத்தைத் தனியாக அழைத்துப்போய் பேசுகிருன்)** தம்பி, இந்த மிருகங்களுக்கு நாம் சரியான பாடம் படிச்சிக் கொடுக்கணும். கொஞ்சம் பொறுமையாயிரு. இப்படித் தப்புத்தண்டாவா நடந்துக்கிட்டா ஒண்ணும் பிரயோசனமில்லே. பாவம். இத்தன மக்களோட வவுத்துலேதான் மண்விழும். வா.... **(போகிருர்கள்.)**

## காட்சி 5 தேயிலைத்தோட்டத்தில் ஒரு குடிசை

**[நோயுற்றிருக்கும் தங்கத்தைப்பார்க்க வந்திருக்கிறார் தோட்ட டாக்டர்.]**

**டாக்டர்:—**...........இப்ப எவ்வளவோ தேவலை. ஆனாலும் இந்த அம்மா இந்த தோட்டத்துக்கு வந்து 2½ வருஷமாகியும் இந்த நாட்டு சீதோஷ்ண நிலைமை ஒத்துக் கொள்ளாததுனாலே இப்படி அடிக்கடி நோய்வாய்ப் படுவதைக் கவனித்தால் கொஞ்சகாலம் இந்தியா போய்த் திரும்புவதுதான் நல்லதென்று தோன்று கிறது. அதுவும் 3 மாதக்கர்ப்பிணி. இந்தியா போய் பிரவசத்திற்குப் பிறகு திரும்பி வருவதுதான் நல்லது ....உம்ம்....யோசித்து வசதிபோலச் செய்யுங்கள். நான் வருகிறேன். **(போகிறார்.)**

**அருணா:—(பெருமூச்சுடன்)**உம்ம்....எல்லாரும் இப்படித் தான் சொல்றுங்க இந்த ஊருப்பனி ஒனக்கு ஒத்துக்கி டல்லே. அதுலேயும் இப்ப நீ புள்ளத்தாச்சி....

**கங்கா:—**ஆமா தம்பி. எதுக்கும் தங்கத்த ஊருக்கு அனுப் பிச்சி எடுத்தாதான் நல்லது. **(தங்கத்தின் கண்களில் கண்ணீர் மல்குகிறது.)** நீ ஒண்ணும் யோசிக்காதே தங்கச்சி. கொஞ்ச நாள் பிரிஞ்சி இருக் கிறத்துனாலே என்ன ? கொழந்தயும் நீயும் சௌக்கி யமா 6, 7 மாதத்திலே திரும்பி வந்துடுறீங்க. அவ்வ ளவுதானே.

**தங்கம்:—**பெரியவங்க இஷ்டம்போல செய்யுங்க.

**கங்காணி:**—அப்போ நாளேக்கி நல்ல நாளு தம்பி. நம்ப வேலு சம்சாரமும் போகுது. ஒண்ணு அனுப்பிச்சிட்டா தொணைக்கும் வசதியாப் போயிடும்.

**அருணு:**—மீனுட்சி இப்பத்தான் நல்லாப் படிக்க ஆரம்பிச்சிருக்குது....

**மீனுட்சி:**—**(விளேயாட்டைவிட்டு விட்டு)** நான் போக மாட்டேம்பா. முத்துகூடத்தான் இருப்பேன்.

**அருணு:**—ஏந்தங்கம், நீதான் 6, 7 மாசத்துலே திரும்பிடப் போறியே....

**தங்கம்:**—........பச்சக்குளந்தை—பிரிஞ்சி இருக்குமா ?....

**மீனுட்சி:**—நாந்தான் உன்னேத் தேடமாட்டேனே முத்துகூடவும் அப்பாகூடவும் இருந்துக் கிடுவேனே.

**கங்காணி:**—**(சிரிப்புடன்)** அது யாரு தம்பி, அந்த முத்து ?

**அருணு:**—என் தங்கச்சி மகன். குறும்புக்காரப்பயல். படிப்புலே மகாகெட்டி.

**கங்காணி:**—அட, நம்ப நல்லகண்ணு மவனு!........பொம்பளப்புள்ளேங்களே இப்புடித்தாம்பா. நேத்துவந்த புருசன நம்பிக்கிட்டு பெத்துவளத்த தாய்தகப்பன அடியோட மறந்துடுதுக........உம், தங்கச்சி தங்கம், நீயுந்தான் அஞ்சாறு மாசத்துலே திரும்பி வந்துடப்போறியே. படிக்கிற புள்ளேய ஏங்கெடுக்கணும்........

**தங்கம்:**—**(தயங்கி)** ஏண்டி மீனு, அப்போ என்னேத் தேடமாட்டியே ?

**மீனுட்சி.**—ஊஹூம்....முத்துக்கூடத்தான் இருப்பேன்.

**கங்காணி:**—அப்போ நான் வர்ரேந்தம்பி........பிரயாணத்துக்கு தயார்பண்ணி தங்கத்தை அனுப்பிச்சிவச்சிடுவோம். (கங்காணி விடைபெற்று செல்கிருன்).

## காட்சி 6. தேயிலைத் தோட்டம்

(ஏராளமான இந்தியர் தோட்டத்துரையின் பங்களா வின் முன் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். உள்ளே துரையும் கண்டக்டரும் ஆலோசனை நடத்துகிறார்கள்)

**துரை :**—வாட் நீயூஸென்ஸ்!.......என்னமேன், இன்டியன்ஸ் இல்லாட்டா ஸிலோனிஸ் போட்டு மேனேஜ் பண்ணுறன் சொன்னது........போர் டேய்ஸ் ஆகலே........மேனேஜ் செய்ய முடியல்லே ?........

**கண்டக்டர் :**—முடியலே ஸார். 450 இன்டியன்ஸுக்குப் பதிலாக 750 சிங்களவங்களைப் போட்டுப் பாத்தாச்சி. முடியலியே. காலையிலே 9 மணிக்கு முன்னே எழுப்ப போனா உதைக்க வர்ரானுக. அதுக்குள்ளே வெயிலிலே கொழுந்தெல்லாம் பெருசா விரிஞ்சி, வாடி, வசங்கிப் போகுது. A கிரேட் தேயிலையைக் கண்ணால் கண்டே 4 நாளாச்சி. நம்ப தோட்டத்துக்கு இருந்த மதிப்பே போயிடும் போலிருக்கே. நாலுநாள் வேலை பார்க்கிற துக்குள்ளே லீவுவேணும், சம்பளம் கூட்டணும்னு 'ஸ்ட்ரைக்' வேற பண்ணிட்டுப் போயிட்டானுக.

**துரை :**—இப்ப என்ன மேன் பண்றது ?........

**கண்டக் :**—எப்படியும் இந்தியர்களைத்தான் தாஜா பண்ணி யாகணும்.

**துரை :**—தாஜா ?........வாட் தாஜா ?........

**கண்டக் :**—பெக்கிங்.

**துரை :**—யெஸ். நோ அதர் கோ. பட் ஹவ்? வழிசொல்லு மேன் ?

**கண்டக் :**—அந்த லெச்சிமி குட்டிகிட்ட நீங்க தப்பா நடந்த துக்காக அவள் புருசன் கருப்பையாகிட்ட மன்னிப்புக் கேக்கணும்.

**துரை :**—(**மௌனம்**)

**கண்டக் :**—இல்லாட்டா வெறும் கலாட்டா தான். அவன் பொல்லாதவன்.

**துரை :**—ஹூம், வேற ஏதாவது 'ஸம்திங்' கொடுத்தா?....

**கண்டக் :**—அவன் அப்படிப்பட்டவன் இல்லே, ஸார். நீங்க கொஞ்சம் ஹேஸ்டி.

**துரை :**—என்ன மேன் பண்றது ?

**கண்டக் :**—ஒரு கல்யாணம் செய்துக்கிடுறது.

**துரை :**—வாட் ?

**கண்டக் :**—மேரேஜ்!

**துரை :**—மேரேஜ்! அது எப்படிமேன் முடியும் ? ஸேலரி தவுஸண்ட் ருபீஸ். அவ டிரஸ், மேக்கப், கார், பூட்,.... இம்பாஸிபிள்....ஆல்ரைட், கமாண்.

**[தொழிலாளரிடம் வருகிறார்கள்—ஆர்ப்பாட்டம்].**

**துரை :**—கருப்பையா, கொஞ்சம் தப்பு நடந்துட்டான் துரை. மன்னிப்புக் கேக்குறான். ஹியர் ஆப்டர் இப்புடி நடக்க மாட்டான்—பிரமிஸ் பண்றான். உங்களுக்கு மெனி மெனி ஹெல்ப் தர்றான். நீங்கள் டூட்டி போறான். தேங்ஸ்.

**[எல்லோரும் வேலைக்குத் திரும்புகிறார்கள்]**

## காட்சி 7. தேயிலைத் தோட்டம்—குடிசை

**[முத்துவும் மீனாட்சியும் விளையாடிக் கொண்டிருக் கிறார்கள். அருணாசலம் கட்டிலில் படுத்துக் கொண்டு யோசனையிலாழ்ந்திருக்கிறான்]**

**முத்து :**—மீனு....இந்தாப்பாரு, மீனு....

மீனு:—அப்பா பாருப்பா, மீனு மீனுங்குன்........இனிமே மீனுண்ணு கூப்புட்டா ஒங்கூட நான் பேசமாட்டேன் ஆமா.

முத்து:—சரி....உம், மீனு ..

மீனு:—என்னு ?

முத்து:—தோத்துப்போயிட்டியே....தோத்துப்போயிட்டியே

மீனு:—நீதான் கருவாடு....தவக்கை....பாம்பு.

[அருணுசலம் ஒரு கடிதத்தைக்கொண்டு வந்து]

அருணு:—இந்தாடா முத்து, இதை வாசிச்சிச் சொல்லு.

முத்து:—(வாசிக்கிருன்) "என் அருமை மகள் மீனுட்சிக்கி....

மீனு:—(கைகொட்டி ஆடிக்கொண்டே) ஓ, காயிதம் எனக்குத் தானே....எனக்குத்தானே....

முத்து:—(தொடர்ந்து) தாயார் எழுதுவது....திங்கட்கிழமை காலே உனக்கு ஒரு தம்பி பிறந்திருக்கிருன். சுகமாக இருக்கிரேும். உன் அப்பாவிற்கு என் நமஸ்காரத்தைத் தெரிவித்து எல்லா விஷயத்துக்கும் பதில் எழுதச் சொல்லு. உன்தம்பி உங்க அப்பாவையேதான் உரித்து வைத்தாற்போலிருக்கிருன். நீ நன்ருகப் படித்துவா.

இப்படிக்கு உன் அன்புள்ள தாயார்
தங்கம்."

அருணு:—(ஆனந்தமாக) பகவான்தான் கிருபை செய் தான். இந்த மட்டுக்கும் சுகமாகப் பிரசவம் ஆச்சே. ஏண்டி மீனு, உனக்கு தம்பி பொறந்திருக்கானுமே.

மீனு:—முத்து, எங்க தம்பியையும் இனிமே விளேயாட்டுக்கு சேத்துக்குவோமா?....அப்பா, அம்மாவும் தம்பியும் எப்பப்பா வருவா?

**அருணு:**—இனி சீக்கிரம் வந்துடுவாங்க.

[முத்துவும் மீனுவும் மீண்டும் விளையாட்டிலீடுபடுகிறார்கள்]

## காட்சி 8. ஆலங்குடி-அருணுசலம் வீடு.

[காய்கறி நறுக்கிக் கொண்டிருக்கிருள் தங்கம். பள்ளியிலிருந்து வருகிருன் ராமச்சந்திரன்:)

**சந்திரன்:**— காந்தித் தாத்தா—சுயராஜ்யம்
வாங்கித் தாத்தா........எங்க (காந்தி)

**தங்கம்:**—சந்திரன்!

**சந்திரன்:**—அம்மா (ஓடிவருகிருன்—அள்ளியெடுத்து முத்து கிருள் தங்கம்) அம்மா. இண்ணிக்கி எங்க பள்ளிக் கொடத்துலே காந்தி தாத்தா கதை சொன்னுங்கம்மா.

**தங்கம்:**—காந்தித் தாத்தாவா கதை சொன்னுங்க?

**சந்திரன்:**—ஆமாம்மாண்ணு.

**தங்கம்:**—சரி என்ன சொன்னுங்க?

**சந்திரன்:**—சத்தியமே பேசணும். தாய் தகப்பன் சொல்லைக் கேக்கணும்.

**தங்கம்:**—அதுதான் சரி. தாய்தகப்பன் சொல்லைத்தான் கேக்கணும்.

**சந்திரன்:**—(சிறிது யோசனையுடன்) அம்மா, அப்பாவும், அக்காவும் எண்ணிக்கிம்மா வருவாங்க?

**தங்கம்:**—சீக்கிரம் வந்துடுவாங்கடா, கண்ணு.

**சந்திரன்:**—எந்த நாளும் ஏமாத்துரியே. எப்பம்மா அப்பாவைக் கூப்புடுவே?

**தங்கம்:**—உம்ம்....நானுந்தான் எத்தனையோ கடுதாசி எழு

திப் பாத்தாச்சி........

**சந்திரன்:**—அப்போ, அப்பா ஒஞ்சொல்லைக் கேக்கமாட்டாங் களா?........

**தங்கம்:—[பழைய நினைவுகளுடன்)** ஆமாடா. எஞ்சொல் லைக் கேக்கலேதான். முதல்லே கடல் கடக்க வேண்டா முண்ணு கரடியாகக் கத்தினேன், அப்புறம் தனியா திரும்பி வரத்தயங்கினேன்....இப்போ எத்தனையோ காடுதாசி எழுதிப்பாத்தாச்சி...

**சந்திரன்:**—அம்மா!....

**தங்கம்:—(உணர்வுபெற்று—கண்ணீரைத் துடைத்துக் கொண்டே)** உம்ம்....என்ன சொல்லிட்டேன் குழந்தை யிடம்....நீ நல்லாப்படிச்சி 'அப்பா வாங்க' ண்ணு எழுதி ணுத்தான் வருவாங்களாம். நீ நல்லாப் படிக்கணுமாம். பணம் அனுப்பித்தருவாங்களாம்.

**சந்திரன்:**—ஓ நாந்தான் நல்லா படிப்பேனே....படிப்பேனே ....**(குதித்துக்கொண்டே தெருப்பக்கம் ஓடுகிருன். கண்ணீர் மறைக்கும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருக்கிருள் தங்கம்)**

## காட்சி 9. 1939 தேயிலைத்தோட்டம்

**(பெரியவர்களாகிவிட்ட முத்துவும் மீனுவும் தோட்டத் திலே மரத்தடியில் அமர்ந்திருக்கிருர்கள், 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாரதியாரின் பாட்டை முத்து பாட மெய் சிலிர்க்கக் கேட்டுக் கொண்டிருக்கிருள் மீனுட்சி. பாட்டு முடிகிறது).**

**மீனு:**—முத்து........

**முத்து:**—அப்புறம் கோவிச்சுக்கமாட்டியே....

**மீனு:**—என்னது?

**முத்து:**—நீ சொன்னபடி செய்தால்....

**மீனு:**—நான் என்ன செய்யச்சொன்னேன் ?

**முத்து:**—'முத்து' என்ருயே...செய்யட்டுமா ?

**மீனு:**—**(நாணத்தால் குனிந்து)** போங்க அத்தான்.

**முத்து:**—**(புன்முறுவலுடன்)** உம்ம்....இப்ப சரி. என்ன வேணும் ? சொல்லு.

**மீனு:**—அத்தான், இந்தச் சோலையின் அழகைப் பார்த்தீர்களா ?

**முத்து:**—இதை இன்றுதானு புதுமையாகப் பார்க்கிருய் ? இதன் மடியில்தானே வளர்ந்து வாலிபமானேம். ஒரு வேளை... இன்றுதான் உன் கண்கள்....

**மீனு:**—ஆம், இன்றுதான் என் கண்கள் இதைச் சரியாகக் கண்டன,

**முத்து:**—அப்படி எதைத்தான் கண்டன ? சொல், கேட்போம்.

**மீனு:**—'தேந்தண் துளிசிதற—தென்றல் அடிவருட—மாந்து மணமெதிர வண்டிசைக்க—கூந்தல்மயிலாட—கிள்ளை மகிழ்மிழற்ற........

**முத்து:**—போதும். போதும். இன்றுகூட உன் கண்கள் இந்தச் சோலையை சரியாகக் காணவில்லை மீனு, பாட்டாளியின் கூட்டாளிக் கவிஞன் இதை எப்படிக் காண்கிருன் என்பதைக் கேள். (இனிய குரலெடுத்து இதய முருகப்பாடுகிருன்)

'சித்திரச் சோலைகளே—உமை நன்கு திருத்த இப்பாரி

னிலே—முன்னர் எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொறிந்தனரோ உங்கள் வேரினிலே'

**மீனு:**—**(ஆனந்தக்கண்ணீருடன்)** ஆமாம் அத்தான். இந்தச் சோலையை வளர்க்க எத்தனைத் தோட்டத் தொழிலாளர்கள் இரத்தத்தை வியர்வையாகக் கொட்டியிருப்பார்கள் !

**முத்து:**—இது மட்டுமா ? [பாடுகிருன்]

"சிற்றூரும் வரப் பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறை யுழைப்புத் தோழ்களெல்லாம் எவரின் தோழ்கள்
கற்பிழந்து மலைபிழந்து கனிகள் வெட்டிக்
கருவியெல்லாம் செய்து தந்த கைதான் யார் கை ?
பொற்றுகளைக் கடல் முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்செவரின் மூச்சு ?"

**மீனு:**—அத்தான், உங்களைப்போன்ற லட்சியவாதிக்குத் தக்கவளாக என்னையும் மாற்றிவிடுங்கள்—அவ்வளவு தான். (நாணிக்குனிகிருள்.)

**முத்து:**—நீதானே மீனு என் லட்சிய மங்கை. என் கருத்திலே, காவியத்திலே, இதயத்திலே எழுத்திலே, எண்ணத்திலே, பேச்சிலே, மூச்சிலே, எதிலும் என் லட்சிய மங்கையாகிய நீதான் நர்த்தனம் புரிகிருய். முல்லை இதழ்காட்டி முறுவலிக்கிருய். எல்லையற்ற இன்ப உலகிற்கு என்னை இழுத்துச் செல்கிருய்.........

**மீனு:**—போதும் முகஸ்துதி.

**முத்து:**—முகஸ்துதியல்ல, மீனு. முற்றிலும் உண்மை. நீதான் என் லட்சியப் பெண்.

மீனு:—அப்படியானல் வெறும் மீனுவை லட்சிய மீனுவாக சிருஷ்டித்த கர்த்தா நீங்கள்தான். (இருவரும் எழுந்து நடக்கிறார்கள்.)

முத்து:—அறிவு ஆண் பெண் இருவருக்கும் பொது உடமை. பெண்ணைத் தெய்வமாக மதிப்பதாகச் சொல்லிக் கொண்டே மண்ணில் நெளியும் புழுவைப் போல் மிதித்து நசுக்குகிறான் ஆண்.

**[எதிரிலே வந்து கொண்டிருந்த தோட்டத் துரையின் கார் இவர்களின் சமீபம் வந்ததும் திடீரென்று நிறுத் தப்படுகிறது. இருவரும் ஸ்தம்பித்து நிற்கையில் பசித்த புலி பக்குவமான ஆட்டுக் குட்டியைப் பார்ப்பது போல் வைத்த கண் வாங்காமல் மீனுவையே பார்க்கி றான் தோட்டத்துரை. முத்துவை இழுத்துக் கொண்டு விர்ரென்று நடக்கிறாள் மீனு. காருக்குள்ளிருந்து அதி ரும் சிரிப்பொலி கேட்கிறது. காரும் நகர்ந்து செல்கி றது. சிறிது தூரம் இருவரும் மௌனமாகவே நடக்கிறார்கள். அப்புறம்......]**

மீனு:—அத்தான், அந்தக்கிழட்டுத் துரை நம்மை ஏன் அப் படிப் பார்த்தான்?

முத்து:—அந்தப் பார்வையில் விஷம் கலந்திருந்தது, மீனு.

மீனு:—ஒருவேளை அவனைப் பாம்பு கடித்திருக்குமோ? (நகைத்து விட்டு) நீங்க சுத்த அசடு அத்தான்........பார் வையில் விஷமாம்!....(போகிறார்கள்)

## காட்சி 10 தோட்டத்துரையின் பங்களா

துரை:—(குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே) ஐ நெவர் தாட்—இப்புடி ஒரு பொண்ணு நம்ப அருணு

சலத்திற்கு இருக்குண்ணு!........கண்டக்டர், ஆர் யு ஸுர் அர்?

**கண்டக்:**—யெஸ்ஸார். அவள் அருணுசலத்தின் மகள் மீனுட்சிதான் படித்தவள். அவளை அருணுசலம் வேலைக்குக் கூட அனுப்புவதில்லை.

**துரை:**—வெரிகுட். அட்மைரபிள் பியூட்டி !....கண்டக்டர்!

**கண்டக்:**—யெஸ் ஸார்.

**துரை:**—இதுவரை நீ இந்தக் குட்டியைப் பற்றி சொல்லலியே. (நாக்கைச் சப்புகிருன்.)

**கண்டக்:**—அருணுசலம் குணம்தான் துரைக்குத் தெரியுமே. இதுலேவேர அவன் தங்கை மகன் முத்து அந்தக் குட்டியையே சுற்றிக்கிட்டு திரிகிருன். நாலெழுத்துப் படிச்சவன். நாசூக்கா நடந்துக்கிருன். இல்லாத சட்டமெல்லாம் பேசருன்.

**துரை:**—யெஸ் யெஸ். நான் கூட நோட் பண்ணினேன்.

**கண்டக்:**—மீனுட்சியைப் பற்றி நினைப்பதுலே நோ யூஸ் ஸார்.

**துரை:**—கண்டக்டர், பை ஹுக் ஆர் குருக்—அந்தக் குட்டியை அரேஞ் பண்ணியாகணும்.

**கண்டக்:**—எக்ஸ்கியூஸ் மி ஸார், இம்பாஸிபிள்.

**துரை:**—இம்பாஸிபிள்! — இங்கிலீஷ்மேனுடைய டிக்ஷனரியிலேயே கிடையாது........இப்ப அருணுசலம் எங்கே இருப்பான்? டுட்டிதானே?

**கண்டக்:**—யெஸ் ஸார்,

**துரை:**—அந்தக்குட்டி?

**கண்டக்:**—முத்துவோட கொஞ்சிக்கிட்டு இருப்பா.

**துரை:**—கோல்டன் ஆப்பர் சூனிடி? கம்ஹியர். (கண்டக்டரின் காதில் ஏதோ சொல்லுகிறுன். கண்டக்டர் சிரித்துக்கொண்டே போகிறுன். துரை டெலிபோனில் யாரையோ கூப்பிட்டுப் பேசுகிறுன்.)

## காட்சி 11. குடிசை

**[அருணுசலத்தின் குடிசையில் முத்துவும் மீட்ஞசியும் பேசி விளையாடிக் கொண்டிருக்கிருர்கள். வாசலில் கார் ஒன்று வந்து நிற்க அதிலிருந்து ஒருவன் இறங்கி வருகிருன்].**

**பியூன்:**—நீங்கதானே தொரே முத்து?

**முத்து:**—நான் தொரைமுத்து இல்லேப்பா. வெறும் முத்து.

**பியூன்:**—உங்களைக் கூட்டி வரும்படி துரை கார் அனுப்பிச்சிருக்காரு.

**முத்து:**—கார்வந்திருக்கா! அப்படீன்ஞ அது வேர எந்த முத்துமாயிருக்கும். எனக்கும் காருக்கும் பொருத்த மில்லேப்பா.

**பியூன்:**—பகுடிபண்ணுதீங்க தொரே. நீங்க நல்லகண்ணு ஐயா மகன்தானே?

**முத்து:**—அது என்னவோ உண்மைதான்.

**பியூன்:**—அப்போ ஏறுங்க காரிலே.

**முத்து:**—என்னப்பா இது! திடுதிப்புண்ணு வந்து காருல ஏறுங்கோங்கிரே? ஒண்ணும் புரியலியே! தொரகூட எனக்குப் பழக்கமில்லியே.

**பியூன்:**—எல்லாம் புரியும். ஏறுங்க காரிலே. உங்கப்பா காருல அடிபட்டு கிடக்காரு!

**முத்து:**—ஆ!....எங்கப்பாவா!

**பியூன்:**—ஆமா. ஏறுங்க, ஏறுங்கண்ணு வெளங்குதா உங்களுக்கு.

**மீனு:**—(பதறிப்போய்) அத்தான்!

**முத்து:**—(காரில் ஏறிக்கொண்டே) நீ இங்கேயே இரு மீனு. விஷயந் தெரிந்து கொண்டு உனக்குத் தகவல் கொடுக்கிறேன்.

(கார் விரைந்து செல்கிறது. வெகு நேரம் வரை வாசலிலேயே வழிமேல் விழிவைத்து நிற்கிருள் மீனுட்சி. அதோ கார்.... 'அத்தான்' என்று கத்திக்கொண்டே ஓடுகிருள். முத்து இல்லை. அதே பியூன்—கவலை தோய்ந்த முகத்தோடு காரை நிறுத்தினுன்.)

**மீனு:**—ஐயா, என்ன சேதி? அத்தான் எங்கே? மாமாவுக்கு எப்படி?

**பியூன்**—உம்ம்—ஏறுங்கம்மா காருலே. அந்த பாவி மனுஷன் இனிம என்னத்த....

**மீனு:**—ஐயோ! (அலறுகிருள்.)

**பியூன்:**—சரிம்மா, சீக்கிரம் ஏறுங்க. தொர கூட்டியாரச் சொன்னுரு.

[மீனு தயக்கத்துடன் காரில் ஏற, கார் விர்ரெனப் பறந்தோடுகிறது.]

## காட்சி 12 — துரையின் பங்களா

[கார் வந்து துரையின் வீட்டின் முன் நிற்கிறது. அவசரமாக இறங்கி ஓடிவந்த மீனுட்சி கண்டக்டரைக் காண்கிருள்.)

**மீனு:**—ஐயா, எங்கே என் அத்தான் முத்து? எங்கே அவர் அப்பா?

**கண்டக்:**—முத்து, டாக்டரைக் கூப்பிடப் போயிருக்கிறுன். அவுங்க அப்பா அதோ அந்த அறையில் கட்டிலில் கிடக்கிறுர். போய்ப்பாரம்மா.

('மாமா' என்று கதறிக்கொண்டு அறைக்குள் ஒடுகிறுள் மீனு. உடல் முழுவதையும் மூடிக்கொண்டு படுத்திருக்கிறுர் ஒரு நபர். மீனு மெதுவாக முகத்தில் கிடக்கும் துணியை அகற்றுகிறுள். அங்கே!..தீயை மிதித்து விட்டவள் போல் துடிதுடித்துப் பின்னுல் ஓடுகிறுள்—கதவை நோக்கி. கதவு இழுத்து வெளியே தாழிடப்படுகிறது. திரும்பிப்பார்க் கிறுள். கட்டிலிலே....பாற்கடலில் இரு விஷத் துளிகள் போல வெண்ணுருவத்தில் இரு நீலம் பாய்ந்த கண் கள் அவளை எரித்துவிடுவன போல் தகதகவென எரிகின் றன-'ஆ' என்ற அலறலோடு பிரக்ஞையற்று சாய்கிறுள். பூகம்பச்சிரிப்புடன் கட்டிலிலிருந்து துள்ளி எழுந்து வந்து பூவை எடுப்பதுபோல் அந்தப் பொற்கொடியைத் தூக்கி யெடுத்து கட்டிலில் கிடத்துகிறுன் துரை. முகத்திலே பன் னீர்த் தெளிக்கிறுன். சிறிது சிறிதாக மூர்ச்சை தெளிந்து 'அத்தான்' என்ற ஈனக் குரலுடன் கண்திறக்கிறுள். மீண்டும் பயத்தினுல் மூடிக்கொள்கிறுள்.)

**துரை:**—ஹஹ்ஹஹ்ஹாஹா....அத்தான் !—தேட் இஸ் ரைட். [மீனுட்சிக்கு ஆங்கிலம் தெரியுமாதலால் துரை பேசிய ஆங்கிலத்தின் சுத்தமான மொழி பெயர்ப்பே இங்கு கையாளப்படுகிறது—ஆ.ர்.]

**துரை:**—(மீனு விம்முவது கண்டு) பூலிஷ் கேள். என் பஞ் சணை இதுவரை எத்தனையோ சிங்காரிகளைச் சுமந்திருக்

கிறது. அவர்களின் சிரிப்பொலிதான் நான் கேட்ட துண்டு. இன்று விம்மல் கேட்பது விசித்திரமாயிருக் கிறது.

**(மெதுவாக அவள் முகத்தைத் திருப்புகிருன். துடி துடித்தெழுந்து ஓடிப்போய் சுவரில் சாய்ந்துக் கொள் கிருள். ஹஹ்ஹஹ்ஹா சிரிப்போடு மெதுவாக மதுக்கிண் ணத்தை நிரப்பிக் கொண்டு கிட்டே நெருங்குகிருன்.)**

**மீனு:**—(கும்பிட்டுக் கொண்டே) ஐயா, தயவு செய்து என்னைப் போக விடுங்கள். இது அதர்மம்.

**துரை:**—ஹஹ்ஹஹ்ஹஹ........பசியால் துடிப்பவனிடமிருந்து பஞ்சாமிர்தத்தைத் தட்டிப் பறித்துக்கொண்டு போக நீ நினைப்பது மட்டும் தர்மமா? பக்தனின் கண்களிலி ருந்து தேவி மறைந்தோட நினைப்பது மட்டும் தர்மமா?

**மீனு:**—பக்தன்!....தேவி! உங்கள் ஜாதிக்கு தெய்வ பயம் கூட இருக்கிறதா?

**துரை:**—நிச்சயமாக!....டிரினிடி!-திரித்துவம். செல்வம், மது, மாது!....இதோ இதைக் கொஞ்சம் முத்தமிட்டு எனக் குக் கொடு. (மதுக்கிண்ணத்தை நீட்டுகிருன். சடாரென்று தட்டிவிடுகிருள். பயங்கரமாகச் சிரிக்கிருன் துரை.)

**மீனு:**—அத்தான்!....அத்தான்....! (அலறுகிருள்.)

**துரை:**—அலறு, அழு, கதறு, பட் நோ யூஸ். இது என் ஆட்சி இங்குள்ளவர்களெல்லாம் என் பிரஜைகள்—ஊமைப் பிரஜைகள். இங்கு என் சொல்லே சட்டம். என் இஷ் டமே வேதம். நீங்கள் என் அடிமைகள்.

**மீனு:**—இல்லை. தொழிலாளிகள் அடிமைகளல்ல. தங்கள் தாயகத்திலேயே கூலிகளாக்கப்பட்ட துரதிர்ஷ்ட சாலிகள்.

**துரை:**—இது என் பூந்தோட்டம். இங்கு வேலை செய்யும் பெண்கள் என் பூந்தோட்டத்தில் மலரவேண்டிய புஷ்பங்கள். அவைகளை மருவித் தேன்பருகும் பொன் வண்டு நான். ஆனால், அவைகளுக்குள்ளே எழில் மிக்க இராணி மலர் நீ.

**மீனு:**—உன் எண்ணம் ஈடேறப் போவதில்லை.

**துரை:**—நிச்சயமாக நிறைவேறப் போகிறது—அதுவும் இப்போதே. ஒரு வேளை கசக்கி முகர நேரிடலாம். அவ்வளவுதான். (கிட்டே நெருங்குகிறான்—எட்டிச் செல்கிறாள்) நான் சொல்வதைக் கவனி. நீ விரும்பியோ வெறுத்தோ, இணங்கியோ, எதிர்த்தோ என் எண்ணம் நிறைவேறத்தான் போகிறது. ஆனால் நீ மட்டும் மன இசைவோடு எனக்கின்பமளிப்பதில் ஒத்துழைக்க முன் வந்தால்....இன்று மட்டுமல்ல, என்றென்றும் நாம் இன்பபுரியில் இணைந்திருக்கலாம்....எனக்கென்ன, மனைவியா? மக்களா? எனது சகல சம்பத்தும் உனக்கே தத்தம் செய்யப்படும். (பிடித்திழுத்து அணைக்க முயல்கிறான்.

**மீனு:**—சீ மிருகமே, என்னைத் தொடாதே........தொடாதே.... (கதறுகிறாள்.)

**துரை:**—(சிரிக்கிறான்) உன் குரலில் குயில் கொஞ்சுகிறதடி கோகிலமே. இனி என்னால் பொறுக்க முடியாது.

[பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டுபோய் கட்டிலில் போடுகிறான். புழுவாய்த் துடிக்கிறாள் பொற்

கொடி. கசக்கி எறிந்துவிட்டான் காமுகன்..................... வெகு நேரத்திற்குப் பின்னும் விம்மி அழுகிருள் வீராங்கனே, வெற்றிச் சிரிப்பு சிரிக்கிருன் வெறிபிடித்த வெண் பிசாசு.]

**துரை:**—(கதவைத் திறந்துகொண்டே) கண்டக்டர்............

**கண்டக்:**—யெஸ் ஸார்.

**துரை:**—காரியம் முடிந்து விட்டது. இனி மறுபடி அழைத்தால் இத்தனே பிகு பண்ணமாட்டாள். இப்போழுது இவளே நமது காரிலேற்றி வீட்டில் விட்டு வரச்சொல். நேரமாகிவிட்டது. ஒருவேளே அருணுசலம் தேடக் கூடும்.

[அவன்பேசிக் கொண்டிருப்பதைக் காதில் வாங்காமலேயே விர்ரென்று வெளியே ஓடி வந்தாள் மீனுட்சி. ஆனல் மீண்டும் பிடித்திழுத்து அணேத்துக் கொண்டான் துரை. 'மீனுட்சி' என்ற குரல் கேட்டு பிடியைத் தழர்த்திஞன் துரை. ரௌத்ராகாரனுகக் காட்சியளித்தான் அருணுசலம். 'அப்பா' என்றலறிக் கொண்டு வந்து அவன் மார்பில் முகம் புதைத்து ஏங்கி அழுதாள் மீனுட்சி. அருணுசலத்திற்கு எல்லாம் விளங்கிவிட்டது. ஆவேசம் வந்தவனேப்போல் மீனுட்சியைக் கீழே தள்ளி விட்டு உழைத்து உரம் பெற்ற தன் கை முஷ்டியால் ஓங்கி ஒரு குத்துவிட்டான்—துரையின் நாடியிலே. ரத்தம் கக்கி கீழே சாய்ந்தான் துரை. கண்டக்டரையும் உதைத்து விட்டு மீனுட்சியை இழுத்துக்கொண்டு சென்ருன் அருணுசலம்.]

**காட்சி 13. அருணாசலம்—குடிசை**

**(தேம்பியழும் மீனாவைத் தேற்றுகிறான் அருணாசலம்)**

**அருணா:**—(தலையைவருடி) அழாதேம்மா....கடவுள் கைவிட மாட்டார்.

**மீனா:**—(தலையையுயர்த்தி) ஆம், கைவிடமாட்டார்—பிடித் திருந்தாலல்லவா விடுவதற்கு. **(விக்கிரஹத்திடம் திரும்பி)** ஆபத் பாந்தவன், அனாதை ரட்சகன் என் றெல்லாம் உன்னைச் சொல்கிறார்களே. அந்தக் காமுகன் என் கையைப்பிடித்து இழுக்கையிலே—என் கற்பைப் பறிக்கையிலே ஆயிரந்தடவை கதறினேனே. அரக்கன் கையிலே அனாதையாக விடப்பட்ட என்னைக்காப்பாற்ற நீ ஏன் வரவில்லை, அனாதை ரட்சகா? ஒரு கன்னிப் பெண்ணுக்குத் தன் கற்புப் பறிபோகும் தருணத்தை விட வேறு ஆபத்தான நிலைமையும் இருக்க முடியுமா? நீ ஏன் வரவில்லை ஆபத்பாந்தவா?........நான் என்ன கற்பு கெட்டவளா? என் அத்தானைத் தவிர அயலானை நினைத்தறியாத உள்ளமல்லவா என் உள்ளம். (கதறு கிறாள்.)

**அருணா:**—ஆண்டவனைப் பழிக்காதேம்மா.

**மீனா:**—பாவம். ஆண்டவன் என்ன செய்வான்? இப்பொ ழுது ஆள்பவனையல்லவா சொல்லவேண்டும்....ஐயோ அத்தான், உங்களை என்ன செய்தார்களோ அந்தத் துரோகிகள்!........

**[ஒருவன் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போகிறான். மீனா உடைத்துப் படிக்கிறாள்.]**

**அருணா:**—என்னம்மா எழுதியிருக்கு?

**மீனா:**—வேறென்ன எழுதியிருக்கும்? பற்றுச்சீட்டு கிழிந்

துவிட்டது. தோட்டத்தை விட்டு 24 மணி நேரத்துக்குள் காலியாகிவிடவேண்டும்.

**அருணு:**—ஹூம். 24 மணி யென்ன, 24 நிமிஷமும் இனி இங்கே தாமதிக்கக்கூடாது,

**மீனு:**—அப்பா, இந்தப் பாவியை நாம் சும்மா விடக்கூடாது. அரசாங்கத்திடம் முறையிட்டு நீதி கோரவேண்டும். என்னைப்போல் எண்ணற்ற மீனுட்சிகள் இந்த ஈனத் தொரைகளிடம் மானமிழந்திருப்பார்கள். இவனைக் கோர்ட்டிலேற்றி மானபங்கப் படுத்தவேண்டும். சரியான தண்டனை கிடைக்கும் இவனுக்கு. (**சாமான்களை கட்டிக் கொண்டிருக்கிருன் அருணுசலம்.**) ஆனுல், போவதற்கு முன் மட்டும் என் அத்தானை ஒரு தடவைக் காண முடிந்தால்........ஐயோ அத்தான்........

## காட்சி 14 கொழும்பு—ஜெயில்

**[ஜெயிலில் முத்து சாப்பாட்டைத் தொட்டுக் கூடப் பார்க்காமல் அழுது கொண்டேயிருக்கிருன். வார்டர் அனுதாபத்தோடு விசாரிக்கிருன்.]**

**வார்டர்:**—என்னப்பா இது. வந்ததுலேருந்து இப்புடிச் சாப்பிடாமல் பட்டினிகெடந்தா உடம்பு என்னத்துக்காகும்? விசயந்தான் என்ன தம்பி?

**முத்து:**—ஐயா, அறம்புகா அரக்கர் நாட்டில் பிறந்திருந்துங்கூட உங்களுக்கு இவ்வளவு மனிதாபிமானம் இருப்பது மகிழ்ச்சி தருகிறது. தயவு செய்து என்னை என் போக்கிலேயே விட்டு விடுங்கள்.

**வார்டர்:**—தம்பி, நான் எங்கே போனுலும் மனம் என்னமோ உன் நினைவாத்தானிருக்கு. என்ன தான்

உண்மையிலேயே நடந்தது? நீ எப்படி இங்கே வந்தே?

**முத்து:**—(மௌனம்)

**வார்டர்:**—உம் "இவன் ஒரு சாதாரண வார்டர்தானே, இவன் என்ன நீதிபதியா உண்மையைச் சொல்லிட்டா விடுதலே செய்து விட" என்று நினைக்கிறே போலிருக்கு. ஏதோ உம் மனசுக்குப் பாரமாயிருக்கிறது சொன்னுலாவது லேசாகுமேண்ணுதாம்பா கேட்டேன்....உம்........ உன் இஷ்டம்.

**முத்து:**—வார்டர் அண்ணே, நான் எதற்காக இந்தத் தண்டனே அனுபவிக்கிறேன் என்பது எனக்கே புரியாத ஒரு புதிராயிருக்கு. ஒரு செடியிலே பூத்த இரு மலர்கள் போல என் மாமன் மகள் மீனுச்சியும் நானும் வளர்ந்து வந்தோம் கொட்டாப்புளிகுருப் தோட்டத்திலே. வானம் பாடிகள் போல பாடித்திரிந்தோம்—அந்தத் தோட்டத்துரையின் வேட்டைக் கண்களிலே படும்வரை. அவ்வளவுதான் மறுநாள் கார் வந்தது. எங்கப்பா காரில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடப்பதாக என்னைக் கொழும்புக்கே அழைத்து வந்து விட்டார்கள். கொழும்பிலே கார் ஆஸ்பத்திரிக்குப் பதில் போலீஸ் ஸ்டேஷனில்தான் நின்றது. உள்ளே அழைத்துச் செல்லப்பட்டேன். நான் கனவில் கூட நினைத்தறியாத விஷயங்கள் பற்றி என்னைக் கேட்டார்கள். நான் தோட்டத்துரையைக் கொல்ல சதி செய்தேனும். தொழிலாளிகளிடையே விரோதத்தையும், கிளர்ச்சியையும் வளர்த்தேனும்! எனக்கு சிவப்பு வர்ணம் தீட்டினுர்கள். பேரளவிற்கு ஏதோ விசாரணையும் நடந்தது. நான் அலறினேன். துடிதுடித்தேன். ஏழையின் குரல் ஏறுமா

நீதியின் செவியிலே? 5 வருடம்! நான் செய்யாத—செய்ய நினைத்தறியாத கற்பனைக் குற்றத்திற்கு கடுங் காவல் தண்டனை 5 வருடம்! என் கண்மணி மீனு என்னவானுளோ!....மீனு!....(தேம்பி அழுகிருன்.)

**வார்டர்:**—பாவிகள். இந்த ரத்தக் கண்ணீர் சும்மா போகாது தம்பி. உம்ம்....தலைகால் தெரியாமல் சர்வாதிகாரம் செய்தவனுகளெல்லாம் தரையிலே உருண்டுட்டானுக. நீ கவலைப்படாதேப்பா. கடவுள் இருக்கார்....கொஞ்சம் சாப்பிடு தம்பி. (கண்ணீருக்கிடையே நன்றியோடு பார்க்கிருன் முத்து.)

## காட்சி 15 கொழும்பு வீதிகள்

**(கொழும்பிலே வேலைதேடி வெற்றிபெருத அருணுசலம் கூலிப்பெட்டி சுமந்தான்—ரிக்ஷா இழுத்தான். ஒரு நாள்....)**

**ஒரு யாழ்ப்பாணப் பெண்:**—ஏ ரிக்ஷா!....ஏ ரிக்ஷா....கம் ஹியர். (அருணுசலம் ரிக்ஷாவுடன் வந்து நிற்கிருன்) டு போர்ட். ஹவ் மச்? (அருணுசலம் விழிப்பதைப் பார்த்து விட்டு) வாட் ஆர் யு பிளிங்கிங்?

**அருணு:**—இங்கிலீசு தெரியாதுங்க.

**யா. பெண்:**—டேம் பூல். கோட்டைக்கு என்ன கேக்குருய்?

**அருணு:**—ஒரு ரூவா குடுங்க.

**யா. பெண்:**—ருபீ! டூமச்!

**அருணு:**—தெரியலீங்க.

**யா. பெண்:**—யூ இல்லிட்ரேட். மிச்சம்........ஆல்ரைட் போ. (ரிக்ஷா போய்க் கொண்டிருக்கையில்) கொழும்புலே ரிக்ஷா இழுக்க இங்கிலீஷ் தெரிய ஒணும்.

**அருணு:**—சரிங்கம்மா. (பின்ஞல் சரிகிருள். வண்டி தூக்கிக் கொள்கிறது.) அம்மா, அம்மா, ரொம்பப் பின்ஞலே சரியாதீங்க. நேர உக்காருங்க.

**யா. பெண்:**—டேம், இடியட். நீ தானே டா 'சரிங்கம் மாண்ணு, சொன்னவன்?

**அருணு:**—ஐயோ. நீங்க சொன்னது சரிங்கண்ணு சொன் னேன். அம்மாவுக்கு தமிழ் புரியலே.

**யா. பெண்:**—நாண் ஸென்ஸ். மேடம் சொல்லு.

**அருணு:**—மேடத்துக்கு யாழ்ப்பாணம் தானே?

**யா. பெண்:**—ஷட் அப். யாழ்ப்பாணம்ஞ டமிலில் தான் ஸ்பீக் பண்ணணுமோ? யூ ராட்டன் எக.

**[ரிக்ஷா போய்க் கொண்டிருக்கிறது]**

## காட்சி 16.

### கொழும்பிலே அருணசலத்தின் குடிசை

**[இரவு 9 மணிக்கு அருணசலம் களைத்துப்போய் வந்து ரிக்ஷாவை வைத்துவிட்டு வீட்டுக்குள் நுழை கிருன். கால்கை கழுவியானதும் மீனுட்சி சமைத்து வைத்திருப்பதைப் பறிமாறுகிருள். கைலாசக் கோனும் வருகிருர்.]**

**கைலாசம்:**—என்ன அருணசலம், இப்பதான் வந்தியா?

**அருணு:**—ஆமாங்கய்யா, இண்ணிக்கி ஒரு நாலு ருபாக்கி ஓடிச்சி.

**கைலாசம்:**—உம், அப்ப அதிர்ஷ்டந்தான்....என்ன, வீடெல் லாம் வசதியாயிருக்கா?

**அருணு:**—(கும்பிட்டுக் கொண்டே) ஒரு குறையும் இல் லீங்க. கொழும்பு ஊருல வீடு கிடைக்காம ஆயிரக் கணக்கான மக்கள் நடுத்தெருவுலே நிற்கும் போது எங்களுக்கு வீடுதந்த நீங்க மாராசஞ இருக்கணும்ங்க,

**கைலாசம்:**—அதெல்லாம் விடப்பா....ஆமா, நம்ப மீனுச்சி யோட கேஸ் எண்ணிக்கி?

**அருணு:**—நாளேக்களிச்சி தீர்ப்பு சொல்லிடுவாங்க........உம். எப்படியும் அந்த வெள்ளேக்கார நாய ரெண்டு வருசமா வது உள்ளே தள்ளிடமாட்டாங்க.

**கைலாசம்:**—அவனுக கொட்டத்தை அடக்கணும் தம்பி,

**அருணு:**—கடவுள் உடமாட்டாருங்க. அந்தப் பாவி ஜெயிலுக் குத்தான் போவான். மீனுச்சி, ஐயாவுக்கு வெத்திலேப் பெட்டியை எடுத்துக் குடு.

**கைலாசம்:**—அதெல்லாம் வேண்டாம்பா. இப்பதான் வெத் திலே போட்டேன். நீ சாவாசமா சாப்பிடு. நாளேக்கிப் பார்க்கிறேன். (போகிறுர்.)

**காட்சி 17.** **நீதி மன்றம்**

**[மீனுட்சி வழக்கு தொடர்ந்து நடைபெறுகிறது.]**

**துரையின் வக்கீல்:**........இது ஒன்றும் பிரமாத மில்லே, மை லார்ட். அப்படியே உண்மையாகவே கற்பழிக்கப் பட்டிருந்தாலும் தோட்டத் தொழிலாளரிடையே இது மிக சகஜமான ஒன்றுதான். பிஜித்தீவிலே உண் மையாகவே ஒரு தோட்டத் துரை ஒரு 14 வயதுள்ள சின்னஞ் சிறு தொழிலாளிப் பெண்ணே பலாத்கார மாகக் கற்பழித்துவிட்டார். அப்பெண் துரையின் படுக் கையிலே இறந்து விட்டது. கோர்ட்டிலும் அது ருஜுப் படுத்தப்பட்டது. அதற்காக நீதிபதி அவருக்கு விதித்த தண்டனே பதினைந்து ரூபாய் அபராதம்! மலாயாவிலும் தென்னுப்பிரிக்காவிலும் நடந்த இதைப் போன்ற எத் தனேயோ சம்பவங்களேக் கூற முடியும். ஆனுல் இந்தக்

குற்றச்சாட்டோ வேண்டுமென்று—ஒரு கனவானை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடன் தொடரப்பட்ட ஒரு பொய்க் கேஸ். நீதிபதியவர்கள் இதில் சற்றுக் கடுமையாயிருந்தாலல்லாது இது போன்று பல கன வான்களின் கௌரவத்திற்கு பங்கமேற்பட ஹேது வாகும்.

**மாஜிஸ்டிரேட்:**—இந்த வழக்கை நன்கு பரிசீலனை செய்து பார்த்ததிலிருந்தும், தோட்டக் கண்டக்டர், பியூன்கள் சாட்சியத்திலிருந்தும் இது வேண்டுமென்றே செய்யப் பட்ட ஒரு பொய்க்குற்றச் சாட்டாகவே தோன்று கிறது. உயர்ந்த அந்தஸ்தும், கண்ணியமும் பொருந்திய மிஸ்டர் ஹம்பக்ஸன் அவர்களை மானபங்கப்படுத்திய தற்காக வாதியைக் கடுமையாகத் தண்டிக்க சட்டத் தில் இடமிருந்தும், வாதியின் இளம் பருவத்தை உத்தே சித்து வாதிக்கு 3 மாத சாதாரண சிறைத்தண்டனை விதிக்கிறேன். (போகிறார்)

**மீனு:**—(**அதிர்ச்சி யடைந்து**) அடப்பாவி! நீதி கேட்டு நின்ற எனக்கா சிறைத்தண்டனை!

**[கான்ஸ்டபிள் இழுத்துச் செல்கிறான். மனமுடைந்த அருணாசலத்தைக் கைலாசக் கோனார் அழைத்துச் செல்கிறார். தாயைப் பிரிந்த கன்றின் குரல்போல் 'அப்பா' என்ற குரல் ஒலித்து ஒலித்துக் காற்றில் கரைகிறது.]**

## காட்சி 18. சென்னை—கல்லூரி

**[கல்லூரி சொற்பொழிவுப் போட்டியில் மெனிக்கா பேசிக் கொண்டிருக்கிறாள்,]**

**மெனிக்கா:**—...........'பெண்டாட்டிப் பிள்ளைகளைப் போய்ப் பார்க்க முடியவில்லையே' என்று எத்தனை ஆயிரக்கணக் கான மக்கள் கடல் கடந்த நாடுகளிலே கண்கலங்கி வாடுகிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண் டும். நான் ஒரு சிங்கள மாணவி. ஆனால் பிறந்தது தான் லங்கா மாதாவின் மடியிலேயே தவிர சுவாசித்த தெல்லாம் பாரதத்தாயின் பரிசுத்தக் காற்றைத்தான்!— குடித்ததெல்லாம் தமிழ் அன்னையின் அருட்பாலைத் தான்! சிங்களத்தைவிட எனக்கு தமிழில்தான் அதிக பாண்டித்யமிருக்கிறது. என்றாலும் என் தாய் நாட்டி லிருந்து பிரிந்திருக்கிறேன் என்ற எண்ணம் என்னை ஏங்கச் செய்யாமலிருப்பதில்லை, ஒன்று மட்டும் நான் நிச்சயமாகச் சொல்வேன், எனது தாய் தந்தையரிட மிருந்து பிரிந்து அத்தை குடும்பத்துடன் வசித்து வருகி றேன் என்ற எண்ணத்தைத் தவிர மற்றப்படி இந்தியா விலிருக்கையில் — குறிப்பாக தென்னிந்தியாவிலிருக் கையில் எனக்கு வேறு எவ்வித விதேச எண்ணமும் ஏற்படுவதே இல்லை. இலங்கையும் தமிழகமும் சகல துறைகளிலும் அப்படி ஒன்று பட்டிருப்பதுதான் கார ணம். வணக்கம். (அமர்கிறாள்—கரகோஷம்.)

**தலைவர்:**—கடைசியாக அ. சந்திரன் பேசுவார்.

**சந்திரன்:**—(காதைத்துளைக்கும் கரகோஷத்திற்கிடையே கம் பீரமாக எழுந்து நின்று வணங்குகிறான். மீண்டும் கர கோஷம்) தலைவரவர்களே, தோழியர்களே, தோழர் களே, வணக்கம், நமது கல்லூரி சொற்பொழிவுப் போட்டி உங்களையெல்லாம் ஒருங்கே சந்திக்கவும், பேசவும் மாத்திரமின்றி பல வருடங்களாக என் மன

தைப் புண்படுத்தி வரும் ஒரு வேதனையை வாய்விட்டுக் கதறவும் வாய்ப் பமைத்துத் தந்திருக்கிறது—நன்றி.

வானம் ஏமாற்ற, வறுமை வற்புறுத்த, வளம் படைத்தோர் கையை அகலவிரிக்க, பொறுப்பற்ற அன்னியராட்சி செறுக்குற்று வீற்றிருக்க, வாழையடி வாழையாய் இந்தப் புண்ணிய பூமியிலே தோன்றியவர்கள், ஆழக்கடல் கடந்து அயல் நாடுகளிலே—அடிமைத் தொழில் புரியச் செல்கிறார்களே, அந்த அபாக்கியர்களின் அவதிப் படத்தைத்தான் உங்கள் அகத்திரைகளிலே ஓட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடல் கடக்கிறான் தமிழன்!—தன் நாட்டுச் செல்வங்களுக்கு கடல் கடந்த நாடுகளிலே சந்தைகள் ஏற்படுத்த அல்ல; தன் நாட்டுக்குத் தேவைப்படும் பண்டங்களைக் கொண்டுவந்து சேர்க்க அல்ல; தன் நாட்டுக் கலையையும் கலாச்சாரத்தையும், தர்மத்தையும் நாகரீகத்தையும் பரப்புவதற்கல்ல; உல்லாச யாத்திரை சென்று உலக அறிவு பெறுவதற்கல்ல!—அடிமைப்பட, அவதிப்பட, அவமானப்பட, அங்கலாய்க்க!

இத்தகைய அரிய தொழில் புரிய அவர்கள் ஏன் கடல்கடந்து செல்லவேண்டும்? — சொந்த நாட்டிலேயே செய்யக் கூடாதா?—என்று நீங்கள் கேட்பீர்கள். நியாயம்தான். ஆனால் அன்னை பூமியிலே அன்னிய ஆட்சிக் கும்மாளமடிக்கிறது. தாய்நாட்டில் நாய் போல் உழைத்தாலும் வாய்திறந்து கூலி கேட்கும் உரிமையில்லை. வியர்வைக்குப் பதில் ரத்தத்தையே கொட்டி உழைத்தாலும் வீட்டின் அடுப்பு சமைப்பதற்கல்ல—பூனை படுத்து உறங்குவதற்குத்தான் என்ற புனித உண்மை அவர்களுக்குப் பூரணமாகத் தெரியும்.

பலரை உழைக்க வைத்து சிலரை வாழவைக்கும் பகவத் கீதைகளுக்குத்தான் தங்கள் நாட்டிலே பவிசு உண்டு என்பதை அவர்கள் அறிவார்கள். 'கடமையைச் செய்—பலனை எதிர்பாராதே' என்று பகவானே திருவாய் மலர்ந்தருளியிருக்கையில், கேவலம் வயலை உழுது பயிர்செய்துவிட்டு வாய்திறந்து கூலிகேட்பது அவமானம் என்று அவர்களுக்குச் சொல்லிவைக்கப் பட்டிருக்கிறது. பலன்தராத பணி எத்தனை நாட்களுக்குத்தான் செய்வார்கள்?....சர்வ வல்லமையுள்ள பசி அவர்களின் தாய்நாட்டுப் பற்றிற்குச் சவுக்கடி கொடுக்கிறது. கப்பல் ஏறுகிறார்கள்—கலங்கிய கண்களுடன்; கட்டிய மனைவி, பெற்ற பிள்ளைகளைப் பிரியும் பாசத்துடிப்புடன்; திரும்பிவந்து வாழ்வோமோ அல்லது சென்ற நாடுகளிலேயே மாள்வோமோ என்ற ஏக்கத்துடன்!

(கூட்டத்திலிருந்து, 'அவமானம்' என்ற கூக்குரல்)

அவர்கள் தனியாகவா கப்பலேறுகிறார்கள்? இல்லை. அவர்கள் கப்பலேறும் பொழுது இந்தியாவின் மானமுந்தான் கப்பலேறுகிறது! பழம் பெருமையைப்பாடிப் பாடி பாழடைந்துவரும் பாரதத்தின் தன் மானம் 'அடிமை வாழ்வு' என்ற கொடியாக மாறி அந்தக் கப்பல்களின் உச்சிக் கம்பங்களிலே பறக்கிறது!

இதோ, என் சரித்திரத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். என் தந்தை சிவப்போ கருப்போ எனக்குத் தெரியாது. வயதும் 16 ஆகிவிட்டது. அவரின் திருமுகம் கண்டறியேன். (குரல் கம்முகிறது—கண்ணீர்

வழிந்தோடுகிறது.] நான் பிறந்தது முதல் இது வரை ஒரு தடவையாவது 'அப்பா' என்று அன்பொழுக அழைத்ததேயில்லை! அன்னை என்னைக் கருவுற்ற 3-ம் மாதமே இலங்கையிலிருந்து அன்னையை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தாராம் ஆறு-மாதங்களில் திருப்பி அழைத்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டு! ஆனால் 16 வருடங்களாகியும் வரமுடியாமல் தவிக்கிறார், ராவணன் தீவிலே! யாழினும் இனிய எனது மழலை மொழிகேட்க, தளிர் மலர் போன்ற எனது தளர்நடைகாண, என்னை அள்ளி யெடுத்தணைத்து ஆர்ப்பரிக்க அவர் உள்ளமும் உடலும் துடிதுடித்திருக்காதா? 'அப்பா எனக்கு உங்களைத் தேடுகிறது. ஓடி வாருங்கள்' என்று என் மலர்க்கையால் நான் எழுதிய முதல் கடிதம் கண்டதும் அவர் உள்ளத்திலே புரட்சிப் புயல் கொந்தளித்திருக்காதா? அப்பாமட்டுமல்ல, என் அன்புச் சகோதரி மீனாட்சியும் அங்கே தான். அவள் கதியை நினைத்தால்....(விம்முதல்)

அன்பர்களே, உணர்ச்சி உந்துகிறது. வார்த்தைகள் வெடிக்க மறுக்கின்றன. ஒன்றே ஒன்று மட்டும் உங்களை வேண்டிக் கொள்கிறேன். வருங்காலத் தமிழ் மகன் கடல் கடந்து அனாதியாய், கூலியாய் அடிமை வாழ்வு வாழ கனவுகூடக் காணக்கூடாது. தாய் நாட்டில் மறைந்து கிடக்கும் மாபெரும் சக்திகளைக் கிளறி மானவாழ்வு வாழவேண்டும், வணக்கம்.

**[கட்டிடம் அதிரும் கரகோஷம், தலைவரும் நீதிபதியும் கலந்தாலோசித்து ரிஸல்ட் அறிவிக்கப்படுகிறது.]**

**தலைவர்:**—மாணவ அன்பர்களே, பெரியோர்களே, இன்று நடைபெற்ற சொற்பொழிவுப் போட்டியைப்போல் உணர்ச்சியும், கருத்தும் நிறைந்த போட்டி நமது கலா சாலையின் சரித்திரத்திலேயே நடைபெற்றதில்லை.

இப்போட்டியின் முதற் பரிசாகிய தங்கப்பதக்கம் நமது மெட்ரிக் மாணவர் திரு சந்திரன் அவர்களுக்கும் (கரகோஷம்) இரண்டாம் பரிசு வெள்ளிக் கிண்ணம் அதே வகுப்பைச் சேர்ந்த சிங்கள மாணவி செல்வி மெனிக்காவிற்தும் வழங்கப்படுகிறது. (மீண்டும் கரகோஷம்—பாராட்டுகள்) இப்பொழுது செல்வி மெனிக்கா அவர்கள் நமக்கு பரத நாட்டியமும், கண்டிய நடனமும் ஆடிக்காட்டி மகிழ்விப்பார்கள்.

**[அற்புதமாக ஆடி அனைவரின் பாராட்டையும் பெறுகிருள் மெனிக்கா. கூட்டம் கலைகிறது. எல்லோரையும் போல் மெனிக்காவைப் பாராட்ட சந்திரனும், சந்திரனைப் பாராட்ட மெனிக்காவும் விரைந்துவருகிருர்கள் அன்புப்பார்வை அர்த்தம் விளங்க பரிமாறப்படுகிறது.]**

**மெனிக்கா:**—கன்கிராஜுலேஷன்ஸ், மிஸ்டர் சந்திரன்,

**சந்திரன்:**—ஸேம் டு யூ, மிஸ் மெனிக்கா.

**மெனிக்கா:**—அப்பா இருப்பது இலங்கையில் எந்த ஊரோ?

**சந்திரன்:**—கொழும்புதான்.

**மெனிக்கா:**—கொழும்பா........உம்ம்....விலாசம்?

**சந்திரன்:**—பங்களா விலாசமானல் பளிச்சென்று சொல்லி விடலாம். நெஞ்சொடிய ரிக்ஷா இழுக்கும்.... ....(உணர்ச்சியால் நிறுத்துகிருன்).

**மெனிக்கா:**—ரிக்ஷாவா!

**சந்திரன்:**—ஆச்சரியமாயிக்கிறதா, மெனிக்கா!........மிருகங்

கள் இழுக்கும் வண்டி மெதுவாகச் சென்றாலும் சகித்துக் கொள்ளும் உங்கள் நாட்டார் மனிதன் நெஞ்சொடிய இழுக்கும் ரிக்‌ஷா வண்டி சற்று வேகங்குறைந்தாலும் பொறுக்க மாட்டார்களாமே!.......(உணர்ச்சி மேலிட்டு அழுதே விடுகிருன்.)

**மெனிக்கா:**—மன்னித்து விடுங்கள் மிஸ்டர் சந்திரன், உங்கள் மனதைப் புண்படுத்திவிட்டேன்.

**சந்திரன்:**—(சமாளித்துக் கொண்டு) இல்லை, இல்லை. நான் தான் உங்கள் மனதைப் புண் படுத்தும் முறையில் உழறிவிட்டேன். வெடிக்கும் இதயம், அடக்கிக் கொள்ள முடியவில்லை. மன்னியுங்கள்.

**[ஒன்றிய உள்ளங்களோடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து நிற்கும் பரவச நிலையை முறைத்துப் பார்த்து விட்டுச் செல்கிருன் அவள் அத்தை மகன் குணசிங்க.]**

## காட்சி 19 கொழும்பு ஜெயில்

**[ஜெயிலில் தனிமையாகப் புலம்பிக் கொண்டிருக்கிருள் மீனுட்சி]**

மீனு:—ஹூம்....நீதிமன்றம்! அந்த வஞ்சகக்காரனின் லஞ்சப் பணத்தை நெஞ்சில் நினைத்துக்கொண்டு வழங்கும் நீதி வேறு எப்படியிருக்கும்? ஓநாயிடமிருந்து தப்பியோடிய ஆட்டுக்குட்டி புலியின் குகையில் ஒளிந்து கொண்ட கதையாகத்தான் முடிந்துவிட்டது என் கதி.......

**குரல்:**—அப்படி இங்கே என்ன கஷ்டம் தந்துவிட்டோம் மீனுச்சி?

[கம்பீரமாக கம்பிக் கதவைத் திறந்துகொண்டே கேட்டான் ஜெயிலர்]

**மீனு:**—(மௌனமாக எழுந்து நின்ருள்)

**ஜெயிலர்:**—மீனு, புத்திசாலிகளுக்கும் சந்தர்ப்பவாதிகளுக்குந்தான் இந்த உலகம். மதுக்கிண்ணம் நிரம்பியிருப்பது பருகுவதற்காகத்தானே. வாலிபம் வானவில். கணநேரத்தில் அல்லாவிட்டாலும் சொற்பகாலத்தில் மறைந்துவிடும். அப்புறம் கதறி அழுதாலும் திரும்பி வராது.

**மீனு:**—உங்கள் பேச்சு................

**ஜெயிலர்:**—.......மனிதாபிமானம் நிறைந்தது. கிடைப்பதற்கரிதான அழகுச் செல்வத்தைக் குறைவின்றிப் பெற்றிருந்தும் ஏன் இப்படி கம்பிகளுக்குப் பின்னே காட்டு நிலாபோல் காய்ந்து தேய்கிருய் என்றுதான்......

**மீனு:**—நீதி உங்கள் வீதிகளில்கூட நடமாடக் கூடாது என்று நினைத்து அதை ஜெயிலில் அடைத்துப்பூட்டி அந்தப் பூட்டைப் பாதுகாக்கும் தீனதயாளுவாகிய உமக்குக்கூட பெண்களிடம் அனுதாபம் ஏற்படுவது விநோதந்தான்.

**ஜெயிலர்:**—பெண்களா!........அவர்கள்தானே என் பைபிள்! எத்தனைப் பெண்ணேடுகளைப் புரட்டிப் பார்த்திருக்கிறேன் தெரியுமா? பணத்துக்காகப் பல்லிழிக்கும் பதிவிரதை, கண்டால் கண்சிமிட்டும்காரிகை, கொஞ்சம் கிராக்கிகாட்டி கிட்டே நெருங்கும் கிரகலெச்சிமிகள், தொட்டால் துவளும் துடியிடைகள், 'நீங்கள்தான் என் தெய்வம், உங்களையல்லாது இந்த அடியாளுக்கு

வேறு ஏது சுகம்? ' என்று குறைந்தது அரை டஜன் பேர்வழிகளிடமாவது தனித்தனியே சொல்லிவைக்கும் தர்ம பத்தினிகள்.......... ஹஹ்ஹஹ்ஹஹா....

**மீனா:**—தாய்க்குலத்தை இந்தக் கண்கொண்டு பார்க்கும்உங்களிடம் தாயன்பு தலைகாட்டாமலிருப்பதில் ஆச்சரியம் என்ன இருக்கமுடியும்?

**ஜெயிலர்:**—உண்மையைச் சொன்னாய். ஒவ்வொரு பெண்ணையும் ஒரு 'தாயாக' மாற்றிவிடவேண்டுமென்பது தான் என் ஆசை. (குறும்பாகச் சிரிக்கிறான்)

**மீனா:**—வம்பளக்கவேண்டாம்

**ஜெயிலர்:**—மன்னிக்கணும் மீனாதேவி. காரியத்தைக் கவனிப்போம்........மீனா....

**(காம உணர்ச்சியால் தாழிடப்பட்ட தொண்டையிலிருந்து வெடித்த 'மீனா' என்ற சொல்லோடு அவள் கையை எட்டிப்பிடிக்கிறான். பளாரென்று கன்னத்திலறைகிறாள்)**

**மீனா:**—பொறுப்புள்ள ஓர் உத்தியோகஸ்தனின் செய்கையா இது? (காரி உமிழ்கிறாள்)

**ஜெயிலர்:**—(அசட்டுச் சிரிப்புடன்) உத்தியோகத்தில் மட்டுந்தானா பொறுப்பு இருக்கவேண்டும். துன்பப்படும் உன் போன்ற ஒரு ஜீவனைத் தேற்றுவதும் தர்மம்தானே.

**மீனா:**—போ வெளியே. இங்கே யாரும் துயரப்படவுமில்லை துணை தேடவுமில்லை.

**ஜெயிலர்:**—யோசித்துப்பார் மீனா. நீ ஏற்கெனவே களங்கப் படுத்தப்பட்டவள். உன் வாழ்க்கை இனி பாழ்தான்.

**மீனு:**—உன்போன்ற அயோக்கியர்களின் ஏகபோக உரிமைதானு வாழ்க்கை?

**ஜெயிலர்:**—சமூகத்திலே ஆண் அலுமினியப்பாத்திரம். ஆயிரம் தடவை தவறிவிழுந்தாலும் நெழியும்—நேராக்கிக் கொள்ளலாம். ஆனுல் பெண் மண்பாத்திரம். ஒரு தடவை விழுந்தாலும் உடைந்து போகும். அப்புறம் ஒன்றுக்கும் உதவாது.

**மீனு:**—இப்படி ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி பேசிப்பேசிதான் உங்கள் நெஞ்சிலே தழும்பேறிப் போய்விட்டது.

**ஜெயிலர்:**—தழும்பு என்று சொல்வதைவிட தாகம் என்று சொல்லடி சரஸாங்கி.

[கட்டிப் பிடிக்கப்போகிருன்—எட்டிப்பிடித்துக் கொள்கிருள் அவன் கால்களை]

**மீனு:**—அண்ணு, நீங்கள் மக்களின் ஊழியன். சட்டத்தின் பிரதிநிதி. தவறக்கூடாது நீதி.

**ஜெயிலர்:**—அன்னிய நாட்டானுகிய ஹம்பக்ஸனுக்கு அளித்தாயே இன்பம்........நான் பக்கத்து நாட்டான்தானே.... என்முன்னேர்களும் இந்தியர்கள்தானே.

**மீனு:**—உன்போன்ற இழிஞர்களின் கையிலே ஆட்சியிருக்கும்வரை நாடு என்னவோ உருப்படப்போவதில்லை.

**ஜெயிலர்:**—நாடு எக்கேடுகெட்டுப் போகட்டும். நமது காரியம் இப்பொழுது முடியட்டும். (கட்டித்தழுவுகிருன். மூர்ச்சித்துச் சாய்கிருள் மீனுட்சி. கீழே தள்ளிவிட்டு) சனியன். சரியானசமயத்தில் மயக்கம்........டேய் 105, டொக்டரை கூட்டிக்கொண்டுவா.

[சிறிதுநேரத்தில் டாக்டர் வந்து பரிசோதித்து மூர்ச்சை தெளிவிக்கிருர்.]

**டாக்டர்:**—(சிரித்துக்கொண்டே) எவ்வளவு காலத்தண்டனை ஸார் இந்தப் பெண்ணுக்கு?

**ஜெயிலர்:**—மூன்று மாதங்கள். இன்னும் இருபது நாள் தான் பாக்கியிருக்கு.

**டாக்டர்:**—பாவம்....(மீனுவைப் பார்த்து) இனி நீ எந்தக் குற்றமும் செய்யக் கூடாதம்மா. நீ தாயாகப் போகிருய்,

**மீனு:**—ஹா!....தா....ய்....ய்....(மீண்டும் மூர்ச்சையாகிருள்.)

**ஜெயிலர்:**—நிஜமாகவா டொக்டர்?

**டாக்டர்:**—ஓ யெஸ். பிரக்னெனன்ட்,

**ஜெயிலர்:**—ஹஹ்ஹஹ்ஹ—லெட் அஸ் வெல்கம் ஹம்பக்ஸன் தி ஸெகண்ட்.

**டாக்டர்:**—(ஒன்றும் விளங்காமல்) வாட் டூ யு மீன்?

**ஜெயிலர்:**—தோட்டத்துரை ஹம்பக்ஸனுடைய வாரீசு டொக்டர்.

**டாக்டர்:**—ஐ ஸீ....(இருவரும் சிரித்துக் கொண்டே போகிருர்கள்)

## காட்சி 18. அருணுசலத்தின் குடிசை

[இரவு களைத்துப்போய்வந்து அருணுசலம் உட்கார்ந்ததும் கைலாசக் கோனுர் வருகிருர்)

**கைலாசம்:**—அருணுசலம்....இந்தாப்பா....உனக்கு ரெண்டு கடுதாசி வந்திருக்கு.

**அருணசலம்:**—கடுதாசியா. கொஞ்சம் தயவுபண்ணி வாசிச்சிச் சொல்லிட மாட்டீங்களா.

**கைலாசம்:**—அதென்னப்பா அப்புடி சொல்ரே. அந்தக் கொளந்தே மீனுச்சியும் இல்லியே, உனக்கு வாசிச்சிச் சொல்லணுமேண்ணுதானே தூங்காம முளிச்சிக்கிட்டு இருக்கேன். (வாசிக்கிருர்)

"அன்புள்ள அப்பாவுக்கு,வணக்கம். நான் நன்ருகப் படித்து வருகிறேன். மெட்ரிக் பரீட்சைக்குப் பணம் கட்டவேண்டும். அதோடு பரீட்சை முடிந்தது. எப்படியும் இலங்கைக்கு வந்து தங்களையும் அக்காவையும் பார்த்து விடுவதென்று தீர்மானித்திருக்கிறேன். தயவு செய்து இக்கடிதம் கண்டதும் உடனே ரூபாய் ஐம்பது அனுப்பிவையுங்கள். தாமதிக்க வேண்டாம். இம்மாதம் 25-ம் திகதிக்குள் பணம் கட்டியாக வேண்டும். இல்லாவிட்டால் பரீட்சை எழுதமுடியாது அப்புறம் இது நாள் வரை படித்ததெல்லாம் வீண் போய்விடும். தவருமல் அனுப்பிவைப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
மகன் ராமச்சந்திரன்"

(இரண்டாவது கடிதம்)

"அன்புள்ள அப்பா அவர்கள் சமுகத்துக்கு உங்கள் அபாக்கியவதி மகள் மீனுட்சி நமஸ்காரம் செய்து எழுதிக் கொள்வது, எனது நன்னடத்தையை உத்தேசித்து மொத்தத் தண்டனையில் 5 நாட்கள் தள்ளி நேற்றே என்னை விடுதலை செய்து விட்டார்கள். ஆனால் நான் இந்த உடலாகிய ஜெயிலிலிருந்து என் உயிருக்கே விடுதலை யளிக்கத் தீர்மானித்து விட்டேன்.

அனேசமாக இந்தக் கடிதத்தை நீங்கள் வாசிக்கக் கேட்டு உங்கள் கண்கள் இந்த அபாக்யவதிக்காக கடைசிக் கண்ணீரைக் கொட்டிக் கொண்டிருக்கையில் என் உயிர் விடுதலை பெற்றிருக்கும். என்னைத் தேட எவ்வித முயற்சியும் செய்யவேண்டாம் மறு ஜென்மம் என்று ஒன்று நேர்ந்தால் அம்மாவையும் தம்பியையும் சந்திக்கிறேன்.

எனது இந்த திடீர் முடிவிற்குக்காரணம்—நீங்கள் கடல் கடந்து வந்து கடும் பனியில் உழைத்ததற்காக அந்தத் தோட்டத்துரை உங்கள் மகள் வயிற்றிலே வார்த்த பால்! அந்தப் பாவச் சின்னம் தன்னைப் பகிரங்கப்படுத்த பக்குவமாகி வருகிறதாம் என் வயிற்றிலே—ஆமாம் அப்பா, உங்கள் மகள் கர்ப்பிணியாம்! ......கடைசியாக நான் வேண்டுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். மன்னிப்பு: உங்களிடமிருந்து, எனது துரதிர்ஷ்டத் தாயிடமிருந்து, என் அருமைத் தம்பியிடமிருந்து, என் ஆசை அத்தானிடமிருந்து நமஸ்காரம்

"மீனாட்சி"

(எதிர் எதிரே உட்கார்ந்திருந்தும் அருணாசலமும் கைலாசக் கோனாரும் ஒருவரையொருவர் பார்க்க முடியாதபடி திரை போட்டிருந்தது கண்ணீர்-மௌனக் கண்ணீர்! (இரத்தக் கண்ணீர்.)

**காட்சி 21. கொழும்பு மரத்தடி**

[அந்தி மயங்கும் வேளையில் இரு ரிக்ஷாக்காரர்கள் தங்கள் தங்கள் ரிக்ஷாக்களிலிருந்தபடி பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

**கந்தையா:**—என்னண்ணே, அருணசலம், ரொம்ப சடவா இருக்கியே ?

**அருணசலம்:**—என்ன கந்தையா பண்ரது. வெளையாட்டுப் போல நம்ப ராமச்சந்திரன் மதருஸ்ல படிக்கப் போட்டது இப்பவுல்ல தெரியுது........

**கந்தையா:**—நம்மளுக்கு என்னத்துக்கண்ணே, எப்பேயும் பிய்யேயும் ? நோனுமாருகூட தஸ்புஸ்ண்ணு பேசவா ? எதாச்சும் ஏரு கலப்பய வாங்கிக்குடுக்காமே........

**அருணசலம்:**—கந்தையா, நாம்பதான் தற்குரியாப் போயிட்டோம். மனுசனுப் பொறந்தும் மாடுபோல வண்டியிழுக்கிறோம். நம்ப புள்ளேகளாவது நாலெழுத்து படிச்சி நாலுபேரப்போல நல்லாருக்கவேண்டாமா ?........ மீனச்சி கெதிதான் அப்புடியாச்சி......ராமச்சந்திரன் மெட்டிக்கலசம் படிக்கானும். பரிச்சை எழுதணுமாம். சர்க்காருக்குப் பணம் கெட்டணுமாம். 50 ரூவா உடனே வேணும்னு எழுதியிருக்கான்.........உம்ம்........ என்ன பண்றதுண்ணே தெரியலே. மொதல்லியே இது தெரிஞ்சிருந்தாலும் எப்படியாவது வாயக்கட்டி வவுத்தக்கட்டி சேத்து வச்சிருப்பேன்.......உம்ம்.......

**குரல்:**—ஏ, ரிக்ஷா !.......ஏ, ரிக்ஷா !........

**கந்தை:**—வர்ரேந் தொரே.... ..நீ போரியா அண்ணே ?

**அருண:**—இல்லேப்பா. நீ தாம் போயிட்டுவா.

[கந்தையா ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு ஓடுகிறன்—அருணசலம் யோசித்து ஒரு முடிவுக்கு வருகிறன்...............]

**மனச்சாட்சி:**—சீ. மாற்று அந்த முடிவை.

**அருணு:**—முடியாது. ஏன் மாத்தவேண்டும்? நான் கட்டின மனக்கோட்டயெல்லாம் இடிஞ்சி விழவா? கடல்தாண்டிவந்து, அரப்பட்டினி கெடந்து, குண்டு வீச்சிக்கும் பயப்படாம நாயா ஒளச்சி என் சந்திரனைப் படிக்க வச்சேன். அது பலந்தரவேண்டிய காலத்திலே, பரிச்சப்பணம் கட்டாட்டா........ஐயோ! எல்லாம் வீணுப் போயிடும்!........பாழாப்போயிடும்........

**ம. சாட்சி:**—அதுக்காக கொள்ளையடிக்கவா போரே?

**அருணு:**—எதையுஞ் செய்வேன்....எப்படியும் பணம் அனுப பிச்சாகணும்.... சந்திரன் பரிச்ச எழுதியாகணும்.

**ம. சாட்சி:**—புண் வீச்சத்தைப்புனுகு பூசி மறைக்கப்பார்க்காதே, உன் மகன் படித்துப் பட்டம்பெற, நீ பிறர் பொருளைக் கொள்ளையடிக்கப்போகிருயா?

**அருணு:**—ஒண்ணும் சொல்லாதே. பணம் போகணும்— உடனே போகணும். இல்லாட்டா என் சந்திரனுடை மனம் ஒடஞ்சிப்போகும். பரிச்சை எழுதமுடியாது. படிச்சதெல்லாம் வீணுப்போகும்.......பணம் போகணும்........பணம்போகணும். உடனே போகணும். (ஆவேசம் வந்தவனைப்போல் ஓடுகிருன்.)

## காட்சி 22: தர்மலிங்கம் மளிகைக்கடை

(தர்மலிங்கம் மளிகைக்கடையைப் பூட்டிக் கொண்டு இரவு 10 மணிக்கு தன் குமாஸ்தா சுப்புவுடன் வெளியே வரப்போகும் சமயம் வாசலண்டை ஒருவன் ஒதுங்கி நிற்பதைப் பார்த்து விட்டு............)

**தர்மலிங்கம்:**—யாருடா அது ?

**சுப்பு:**—யாருடா, எதுங்க ?

**தர்மலி:**—உளராதடா. உலக்கையன், (நிற்பவனிடம்) நீயாருடா ?

**நிற்பவன்:**—அனுதைங்க, சாமி. ஏதாச்சும் அஞ்சி, பத்து சதம்... ....

**தர்மலி:**—இதுக்கு முன்னுலே யெல்லாம் அஞ்சி, பத்து ருபாணுல்ல கேப்பே. மூஞ்சியப்பாருடா.

**சுப்பு:**—(ஓடிப்போய் அவன் மூஞ்சியைப் பார்த்துவிட்டு) திருடன் மாதிரி மு ளிக்கிருங்க.

**தர்மலி:**—நீ சுத்த உலக்கையண்டா. அது இருக்கே........ எது இருக்கே?

**சுப்பு:**—அது இருக்கே.

**தர்மலி:**—களவு இருக்கே ? அதுக்குக்கூட உலுசாமர்த்தியம் வேணுண்டா. எது ?

**சுப்பு:**—ஆமாங்க.

**தர்மலி:**—சரி. அது நல்லாப் பூட்டியிருக்குதானே ?

**சுப்பு:**—ஆமாங்க.

**தர்மலி:**—எது ?

**சுப்பு:**—கதவதானுங்களே ?

**தர்மலி:**—உலக்கையண்டா நீ, இரும்புப்பெட்டிடா.

**சுப்பு:**—ஆமாங்க. சாவிபோட்டுப் பூட்டி, K. L. எழுத்தையும் திருப்பி வச்சிட்டேனுங்க.

(போகிருர்கள்...........நடுநிசிவேளையில் அருணசலம் பூட்டை உடைக்க முயற்சிக்கையில் பீட் போலீஸாரால் பிடிக்கப்படுகிருன். சொந்தக்கா

ருக்கு ஆள் அனுப்பப்பட்டு தர்மலிங்கம்வந்து அருணசலத்தைக் கூர்ந்து கவனித்துவிட்டு சிரிக்கிறார்.)

**தர்மலி:**—உலக்கையன். நாந்தான் சொன்னேனே, திருடுரத்துக்கும் வலுசாமர்த்தியம் வேணும்னு. எது வேணும்னு?

**போலீஸ்:**—சாமானெல்லாம் சரியாயிருக்காண்ணு பாருங்க, (சுப்புவிடம்) இரும்புப் பெட்டி கடைக்குள்ளேயா இருக்கு?

**சுப்பு:**—வேர என்ன, தெருவிலயா இருக்கும்? (எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

**போலீஸ்:**—(சுப்புவை முறைத்துப் பார்த்துவிட்டு—அருணசலத்திடம்) நடடா, ஸ்டேஷனுக்கு. (போகிறார்கள்).

## காட்சி 23 — சென்னை—கடற்கரை

**சந்திரன்:**—(தனிமையில் ஹூம். படிக்கத்துடிப்பவனைப் பார்த்து பணம் பல்லிழித்துப் பரிகாசம் செய்கிறது, சர்வ முட்டாளிடம் சரண் புகுந்திருக்கிறது. என்ன உலகம் இது?

**மெனிக்கா:**—(பின்னல் மெதுவாக வந்து நின்று) பக்தா இதுதான் அசல் உலகம், அன்னக்காவடி அரசன் வேஷத்திலும், பகட்டுக்காரி பதிவிரதை வேஷத்திலும் தோன்றி சல்லாபிக்கும் ஸல்லூலாயிட் ஸினிமா உலகமல்ல இது:—(சந்திரன் மௌனமாயிருப்பதைப் பார்த்துவிட்டு) என்ன சந்திரன், கோபமா?

**சந்திரன்**—உள்ளம் அழும்பொழுது உதடு சிரிக்குமா.... மெனிக்கா....

**மெனிக்கா:**—சந்திரன்!

**சந்திரன்:**—பரீட்சைக்குப் பணம் கட்டியாகணும். நாளும் நெருங்கிவிட்டது....

**மெனிக்கா :**—அட ராமச்சந்திரா! நான் பயந்தே போயிட்டே னே. இதுக்குத்தானு? அதுதான் பணமும் கட்டப் போகிருேம்—பரீச்சையும் எழுதப்போகிருேமே.

**சந்திரன் :**—மெனிக்கா !....

**மெனிக்கா :**—லிஸ்ன் பிளிஸ். தேட் இஸ் ஓவர் நவ்.

**சந்திரன் :**—செல்வத்தில் புரழும் நீ அறியமாட்டாய்........

**மெனிககா :**—செல்வத்தில் புரண்டாலும் செறுக்குற்ற உள் ளம் படைத்தவள் என்று நினைப்பீர்களானுல் நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை யென்றுதான் அர்த்தம்.

**சந்திரன் :**—உன்னை அறிவேன். ஆனுல் அப்பாவின் நிலை மையை நான் எப்படி அறிவேன் ?

**மெனிக்கா :**—சந்திரன், உங்களுக்காக நான் பணம் கட்டுகி றேனே யென்று நீங்கள் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது. நாள் நெருங்கி விட்டது. நாளைக்குக் கட்டா விட்டால் பிரயோஜனமில்லை. என்னை மன்னியுங்கள்.

**சந்திரன் :**—மெனிக்கா !....

**மெனிக்கா :**—ஐயோ, போதுமே. அப்பா கட்டாயம் பணம் அனுப்பத்தான் போகிருர். கொஞ்சம் காலதாமதமா கலாம். அவ்வளவுதான். வந்ததும் திருப்பித் தந்துவிடு ங்களேன். போதுமா ?........அப்பப்பா, கலைகண்ட அலைகளைப் பாருங்கள். அந்தச் சந்திரனைக் கண்டதும் கடலலைகள் ஆர்ப்பரிக்கின்றன. இந்தச் சந்திரனைக் கண்டால் மெனிக்கா ஆனந்தக் கூத்தாடுகிருள்........

**ஜீவன்:**—(பின்னுலிருந்து) பேஷ். பேஷ். எனக்குமட்டும் ஸினி

மாவில் நடிக்க ஒரு சான்ஸ் கிடைத்தால், இந்தவசனங்களை எப்படி ரஸித்துப் பேசுவேன் தெரியுமா ?

**சந்தி** :—வாடாப்பா, ஜீவன் — தப்புத்தப்பு — ஸினிமா மஜ்னூன்—நீ இங்கேயும் வந்துட்டியா ?

**ஜீவன்** :—இந்தாப்பா. நீ வானலோகத்திலே இரு. அப்பவும் நீ ஒழிக்கமுடியாது. நீ இருக்கிற இடந்தான் வெளிச்சமா இருக்குமே ! நீ சந்திரனில்லே! (சிரிக்கிறார்கள்.)

**மெனிக்கா** :—ஆமா, மிஸ்டர் ஜீவன் எப்பவும் ஸினிமாவில் சேரணும் சேரணும்னு ஜெபம் செய்கிறாரே ஒரு நாளைக்கி ஸ்டுடியோவுக்கே போய்ப்பார்த்தால் என்ன ?

**ஜீவன்** :—அப்படிச் சொல்லுங்க ஸிஸ்டர்! இதைத்தான் நானும் ரெண்டு வருஷமா சொல்லிகிட்டேவர்ரேன். ஏழை சொல்லு அம்பலத்துக்கு ஏறுமா ?

**சந்தி** :—நீ ஸினிமாவிலே சேர்ரத்துக்கு என்னை என்னடா செய்யச் சொல்ரே ?

**ஜீவன்** :—நீ ஒண்ணும் செய்ய வேண்டாம்பா, வில்லன் விக்ரமன் என்னமோ உன் பிரண்டிண்ணிபே, அவுருகிட்ட சொல்லி ஒரு சான்ஸ் வாங்கித்தர்ரது? ஏன் ஸிஸ்டர் ?

**மெனிக்கா** :—பாவம், அவருக்கு அப்படித்தான் ஒரு உதவி செய்யுங்களேன்....இது என்னவோ அவருக்கு நல்ல காலம் போலத்தோணுது. ஸ்டார் அடிக்குது !

**ஜீவன்** :—அப்புடிச் சொல்லுங்க ஸிஸ்டர் ! அப்புடிச் சொல்லுங்க ஸிஸ்டர். எனக்கு கட்டாயம் ஸ்டார் அடிக்குது! ஸ்டார் அடிக்குது !...

**சந்தி:**—சரிடாப்பா. வர்ர ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீ கணபதி ஸ்டுடியோவுக்கு நமது விஜயம்.

**ஜீவன்** :—(சந்திரனைத் தூக்கியெடுத்து சுற்றிக்கொண்டே) ஒகே. ஒகே....'இனி நானே ஸினிமா உலக ஜோதி'... (பாடுகிறுன்)

**சந்திரன்:**—அடடடே. போதும், நிறுத்துடா. நீ பாட்ரத்த எந்த பட முதலாளியாவது கேட்டுடப் போருரு. அப்புறம் ஸ்ரீ கணபதி ஸ்டுடியோவுக்கு அடிக்கவேண்டிய யோகம் தவறிப்போகும். (சிரிக்கிருர்கள்)

## காட்சி 24 கொழும்பு—ஜெயில்

**[ஜெயிலிலே ரிமாண்டிலிருக்கும் அருணுசலத்திடம் 'காலி ஜிம்கானு' நிருபர் வருகிருர். ஜெயில் அதிகாரி அறிமுகப் படுத்துகிருர்]**

**நிருபர்**—ஹீ... ஹீ...வணக்கம் ஸார். நீங்கள் மகா அதிர்ஷ்டசாலி!

**அருணு:**—கேலி செய்யாதிங்க, சாமி.

**நிருபர்:**—இல்லே ஸார். உங்களுக்கு 'காலி ஜிம்கானு' முதற் பரிசு ரூபாய் ரெண்டுலட்சத்து அறுபத்தேழாயிரம் அடிச்சிருக்குது, ஸார். (அருணுசலம் விழிக்கிருன்.)

**ஜெயிலர்:**—ஆமாப்பா. நிஜந்தான்.

**அருணு:**—(வியப்புடன்) நெசம்மாவா! ..

**நிருபர்:**—இதோ பாருங்க. நீங்க இங்கே இருக்கேள், தெரிஞ்சிருக்காதேண்ணுதான் உடனே இங்கே வந்தேன்.

**அருணு:**—எவ்வளவுங்க?

நிருபர்:—ரெண்டுலட்சத்து அறுபத்தேழாயிரம்!....

அருணா:—ஹஹ்ஹஹ்ஹாஹா !....அதிர்ஷ்டம் அடிச்சுது— ஆனு ஜெயிலுக்குள்ளே தள்ளின பிறகு ரெண்டு லெச்சம் இருக்கட்டும், ஐம்பது ரூவா ஐந்து நாளைக்கி முன்னே ஜெயிலுக்கு வெளியிலே கெடச்சிருந்தா இப்படி கம்பி எண்ண வந்திருப்பேனு?....உம்ம்....

நிருபர்:—கன்கிராஜுலேஷன்ஸ். ஹீ....ஹீ....வர்ரேன் ஸார்.

## காட்சி 25 தர்மலிங்கம் வீடு

தர்மலி:— (கையில் பத்திரிகையுடன் பரபரப்பாக) சுப்பு !.... அடே, உலக்கையன் !.... பாத்தியாடா....நான் அண்ணிக்கே சொன்னேனேடா. கேட்டியா?....எண்ணிக்கே?

சுப்பு:—அண்ணிக்கே சொன்னீங்க?

தர்மலி:—என்னடா சொன்னேன் ?

சுப்பு:—ஒண்ணும் சொல்லலீங்களே...

தர்மலி:—அந்த ரிக்ஷாக்காரன் அருணசலம்—எந்த அருணசலம் ?

சுப்பு:—அவந்தாங்க. நம்ப கடையிலே திருடவந்தானே அந்த அருணசலந்தானே ?

தர்மலி:—போடா உலக்கையன். அவன் திருட வரலேடா பங்காளியா சேர வந்தாண்டா !

சுப்பு:—என்னு எசமான் ! களவெடுத்துட்டு, ரிமாண்டு ஜெயிலுல இருக்கான். நாள வெசாரணக்கி நீங்களும் போவணும்னு ராத்திரிகூட சொல்லிக்கிட்டு இருந்தீங்க....

தர்மலி:—நிறுத்துடா உலக்கையன். அவன் இன்னிக்கி லெச்சாதிபதிடா ! லெச்சாதிபதி !

**சுப்பு** :—என்ன சொல்றீங்க........

**தர்மலி** :—அருணசலம்—மாஜி ரிக்ஷாக்காரன்—தர்மலிங்கம் அன்கோவில் களவு செய்ய எத்தனித்து விளக்க மறியலில் இருப்பவன்—காலிஜிம்கான முதற் பரிசு ரூபாய் ரெண்டுலட்சத்து அறுபத்தேழாயிரத்துக்கு முதலாளி !.... ஹஹ்ஹஹாஹாஹா....நானே பிணையிலே எடுப்பேன்—'ஸம்திங்'—சர்வ வல்லமையுள்ள 'ஸம்திங்' போலீஸை சரிப்படுத்தும். அருணசலம் விடுதலை! கேஸ் தள்ளுபடி! அருணசலம் என் பங்காளியாவான்! ரேஸிலும் குடியிலும் நான் இழந்த பணத்திற்குப் பதிலாக அருணசலத்தின் அதிர்ஷ்டப் பணம் உதவும்! ஹஹ்ஹாஹாஹா!.... சுப்பு, கொண்டுவா ஒரு டேக்ஸி. (டேக்ஸி புறப் பட்டுப் போகிறது.)

## காட்சி 26 சென்னை—ஸ்டுடியோ

**[ஸ்டுடியோ முன்னல் ஒரு டேக்ஸிவந்து நிற்கிறது. அதிலிருந்து சந்திரன், மெனிக்கா ஜீவன் மூவரும் இறங்குகிருர்கள் — உள்ளே ஒரு ஹாலில் நடிகர் தெரிவு நடைபெறுகிறது.]**

**டைரக்டர்** :—குமாரி ரோஜா, வாங்க இப்படி.

(45 வயதுள்ள ஒரு பூதாகாரப் பெண் வருகிருள்.)

**டைரக்டர்** :—(திடுக்கிட்டு) எங்கேம்மா, உங்க பேத்தியை? (எல்லோரும் சிரிக்கிருர்கள்)

**குமாரி** :—அதென்னுங்க, அப்புடிக் கேக்கிறீங்க. கேலி பண்ணீங்களா?

**டைரக்** :—அடச்சீ, கேலியா ! நீ யாரம்மா ?

**குமாரி** :—நாந்தானுங்க குமாரி ரோஜா. (சிரிப்பு)

**டைரக் :**—உம்ம்....சரி. சரி. போயிட்டு வாங்க.

**குமாரி :**—என்னுங்க, பாடச்சொல்லி, ஆடச்சொல்லி பாக்க லீங்களா ?

**டைரக் :**—சேச்சே. அதெல்லாம் தெரியாத குட்டிக்களுக்குத் தானே. உங்களைத்தான் பார்த்த உடனேயே வெளங்கிப் போச்சே.

**குமாரி:**—(மகிழ்ச்சியோடு) அப்போ, என்னப் பாத்த ஒடனே புடிச்சிடிச்சா?

**டைரக்:**—ஆமா. புடிச்சிடிச்சி—அடிவயித்துலே, தீ! ஓடிப்போ (போகிருள்) மிஸ் கோகிலம், யாரம்மா?

**[சுமார் 20 வயதுப் பெண்—கரிய நிறம் — கீச்சுக் குரல்—வருகிருள்.**

**டரக்டர் :**—நீங்கதான் மிஸ் கோகிலமா ?

**கோகிலம் :**—(கீச்சுக் குரலில்) நாமாங்க.

**டைரக் :**—அட, ராமா (ஒரு தடியன் மீசையை முறுக்கிக் கொண்டுவந்து நிற்கிருன்.) நீர் யாரய்யா? இந்த மிஸ்ஸூடைய ஹஸ்பெண்டா? (எல்லோரும் 'கொல்'லென்று சிரிக்கிருர்கள்.)

**ராமன் :**—வில்லன் பார்ட்டுக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கேனுங்க.

**டைரக் :**—வில்லனும்! குரங்கன்! ஏய்யா, கூப்புடும் முன்னே வந்தே ?

**ராமன் :**—நீங்க தானுங்களே 'ராமா'ண்ணு கூப்பிட்டீங்க வந்தேன்.

**டைரக் :**—சர்த்தான். இப்ப போங்கோண்ணு சொல்ரேன்—போயிடுங்க. (போகிருன்). மிஸ் கோகிலம், நீங்களும்

போகலாம். நீங்க நிறத்துலேதான் கோகிலமா இருக்கீங்க. எங்களுக்கு குரலிலேதான் கோகிலமா வேணும். (மற்றோரின் சிரிப்பு)...... மிஸ்டர் ஷண்முக நாதன், யாரய்யா அது?........இப்படி வாங்க. (ஒரு கோண மூஞ்சிப் பேர்வழி வருகிறான்.) நீங்கள்தான் ஷண்முக நாதனா? அடக்கண்ராவியே. ஆறுமுகம்தான் இல்லே: இருக்கிற ஒருமுகமாவது கோணாமல் நேராக இருக்கக்கூடாதா? நீங்கள்ளாம் எங்கேயாவது கண்ணுக்குத் தெரியாத இடமா, ரேடியோ கீடியோவில்போயி நடிங்க. ஒங்க லெச்சணங்கள மேடையிலே காட்டினீங்களோ மலம்பிஞ்சி மழையாப் பொழிஞ்சிடும்........

— மற்றோர் புறத்தில் —

**ஜீவன்:**—ஸார். ஸார்.. நீங்கதானே வில்லன் விக்ரமன்.

**விக்ரமன்:**—ஆமா, அதுக்கென்ன?

**ஜீவன்:**—எனக்கும் ஸினிமாவுல நடிக்க ஒரு சான்ஸ்........

**விக்ரமன்:**—ஓ, அதுக்கென்ன. சம்பூரண ராமாயணத்துல நான் வில்லன் ராவணனாக நடிக்கும்போது உங்களுக்கு கட்டாயம் சான்ஸ் வாங்கித்தர்றேன்,

**ஜீவன்:**—(சந்தோஷத்துடன்) ராமனாகவா?

**விக்ர:**—சேச்சே. அனுமானாக. மூஞ்சியப்பாரு.

**ஜீவன்:**—(ஏமாற்றம்—அவமானத்துடன்) உன் ஆந்த மூஞ்சிக்கி எம்மூஞ்சி ஒண்ணும் மோசமில்லே.

**விக்ர:**—என்னடா சொன்னே! (ஜீவனின் கன்னத்தில் அறைகிறான்.)

**சந்தி:**—(ஓடிவந்துகொண்டே) அடடே, என்னடாது. இன்னும் ஸெலக்ஷனே ஆகலே, அதுக்குள்ளேயும் வில்லன்கூட பைட்டிங் ஸீனே பழக ஆரம்பிச்சிட்டியே!

**விக்ர:**—ஓ, மிஸ்டர் சந்திரனு !

**சந்தி:**—ஆமாஸார். உங்களோடு அறிமுகப்படுத்திவைக்க வேண்டும் என்றுதான் இவனை அழைத்துக்கொண்டு வந்தேன். அதுக்குள்ளே அவனேவந்து அறிமுகமாகி விட்டானே (சிரிப்பு).

**மெனிக்கா:**—மிஸ்டர் விக்ரமன், இவரை எப்படியும் ஸினிமாவிலே சேர்த்துவைக்கவேண்டியது உங்கள் பொறுப்பு. ஸினிமா வானிலே ரொம்ப நல்லாஜொலிப்பார்.

**விக்ரமன்:**—சேர்த்துவிட்டாப் போச்சு. ஆமா, ஏது ஜோஸ்யமே சொல்ல ஆரம்பிச்சிட்டீங்களே !

**மெனிக்கா:**—நான் ஜோஸ்யம் சொன்னுல் உடனே பலிக்கும் மிஸ்டர் விக்ரமன். ஸ்டுடியோவிற்குப் போகணும்ணு மிஸ்டர் ஜீவன் சொன்னுர். கட்டாயம் போங்க, ஸ்டார் அடிக்கும்ணு சொன்னேன். பாருங்க, நீங்க ஒரு பிரபலமான ஸ்டார். இப்பத்தானே இவர் கன்னத்தில் அடிச்சீங்க. (எல்லோரும் சிரித்துக்கொண்டே போகிருர்கள்.

## காட்சி 27. யாழ்ப்பாணத்திலே ஒரு குடிசை

**மீனுட்சி:**—(தனிமையில்)ஒவ்வொரு பெண்ணும் என்றுவரும் அந்த இன்சொல் கேட்கும் நாள் என்று ஏங்கிநிற்கும் சொல்........பெண்மையின் வாழ்விலே பெருமையைப் பூக்கவைக்கும் வார்த்தை. என் காதில் ஏன் அப்படி நாராசம்போல் பாய்ந்தது ?...........என் ஆசை அத்தானின் அமுதத்தைச் சுமக்கவேண்டிய அடிவயிறு அந்த விதேசி கக்கிய விஷத்தைச் சுமக்கிறது. கன்ன

லும், செந்நெல்லும் விளையவேண்டிய பூமியிலே கள்ளியும் நெருஞ்சியும் வளர்கின்றன. என் அத்தானின் மனைவி என்ற பதவிக்கு விவாகம் என்ற பட்டம் பெறுதலால் நான் இதுவரை தாய்மை என்ற மாளிகையிலே குடியேறுமலிருந்தேன். ஆனால் அந்த வெண் பிசாசு என் ஆசைச் செடியில் அனலைக் கொட்டிவிட்டான். என் நம்பிக்கைப் பூங்காவை வெம்பிக் கருகச் செய்து விட்டான். என் அத்தான் எழுப்பிய லட்சியக் கோட்டைகளை என் கண்முன்னலேயே இடித்து, தகர்த்து, மண்ணேடு மண்ணாக்கிவிட்டான். இனி இந்த பாவச்சின்னம் வளரும், என்னைப் பரிகாசப் படுகுழியில் தள்ளும். நான் பதறித்துடிப்பேன்—ஆனால் இதற்கெல்லாம் காரணமாயிருந்த அந்தப்பாதகன் பார்த்துச் சிரிப்பான். நான் கோ வெனக்கதறுவதும் அவன் கொக்கரித்துச் சிரிப்பதுமா? அவனும், அவன் சந்ததியும் நிர்மூலமாகவேண்டும். அதுவரை நான் வாழ்வேன்.......ஆம், அப்பாவுக்கு எழுதிவிட்டேன் தான் - சாகிறேன் என்று. அதுவும் நல்லதே. அவர் இந்த அவமானத்தை நினைத்து அல்லலுறக்கூடாது. ஆனால் என் அத்தான்?..........நான் நிரபராதி, அத்தான்.... நிரபராதி. வாருங்கள், நமது காதல் வாழ்விற்கு சாதல் வாழ்த்துக்கூறியவனுக்கு சமாதி கட்டுவோம். சமாதியா?—கூடாது. அந்தப்பாவி புதையுண்ட இடம்கூட மக்கள் கண்ணில் படக்கூடாது. அவனையும் அவன் கூட்டத்தாரையும் பூண்டோடு ஒழித்துக் கட்டவேண்டும்..........அத்தான், உங்கள் மீனுவைப் பாருங்கள் நீங்கள் பளிங்குக்கண்ணாடி என்று வர்ணித்த கன்னங்கள் அழுது அழுது வடிந்த கண்ணீரால் பழுதடைந்து

விட்டன. நீங்கள் மான்விழிகள் என்று வர்ணித்த கண்கள் கான்மலர்போல் காய்ந்துக் கருகிவிட்டன. அமைதியும், ஆனந்தமும் ஆட்சி செலுத்திய மனதிலே பயங்கரப் பூதங்கள் தாண்டவமாடுவதைக்காண வாருங்கள்......அத்தான்......அத்தான்............

## காட்சி 28: கொழும்பு—தர்மலிங்கம் மளிகைக்கடை

['தர்மலிங்கம் அன் கோ' போர்டு இறக்கப்பட்டு 'அருணசலம் தர்மலிங்கம் அன் கோ' என்ற புது போர்டு ஏறுகிறது. புதுக்கணக்கு ஆடம்பரமாக ஆரம்பிக்கப்படுகிறது. ஒலி பெருக்கி பணம் செய்யும் லீலைகளை விளக்கும் ஒரு பாட்டை அலறுகிறது. பத்திரிகை நிருபர்கள் புதுப்பணக்காரர் அருணசலத்தை போட்டோ எடுப்பதும் கேள்விகள் கேட்பதுமாயிருக்கிறார்கள்.]

**நிருபர்** :—உங்களுக்கு எந்தெந்த புஸ்தகங்கள் பிடிக்கும்?

**சுப்பு** :—அதென்னுங்க இப்படிக் கேக்கிறீங்க! மொதலாளிங்களுக்கு செக்புஸ்தகமும் லெட்ஜர் புஸ்தகமும்தான் ரொம்பப்பிடிக்கும்.

**நிருபர் : 2**—உங்களுடைய உருக்கமான சுயசரிதையை எங்கள் பத்திரிகையில் மட்டும் பிரசுரிக்க உரிமை தரணும்.

**நிருபர்:3**—இந்த லெட்சக் கணக்கான அதிர்ஷ்டப் பணத்திலே ஏதாவது ஒரு பாகத்தை தர்மத்துக்குக் கொடுக்கும் உத்தேசம் உங்களுக்கு உண்டோ?

**சுப்பு:**—அதை அப்படியே மொத்தமா தந்துடுங்கோண்ணு கேக்கிர உத்தேசம் உங்களுக்கு உண்டோ? (சிரிப்பு)

[கொண்டாட்டம் தொடர்ந்து நடை பெறுகிறது.]

## காட்சி 29 சென்னை—கடற்கரை

[கடற்கரைக்கு வரும் மெனிக்காவை மறித்து வைத்து வார்த்தையாடுகிறான் குணசிங்கம்.]

**குணசிங்கம்**—........மெனிக்கா ஆணவங் காட்டாதே, அத்தைமகன் என்ற உரிமைமட்டுமல்ல. உன் வருங் கால வாழ்க்கைத் துணைவன் என்ற உரிமையோடு தான் பேசுகிறேன். நீ அந்த ரிக்ஷாக்காரன் மகனு டன் இவ்வளவு அன்னியோன்னியமாகப் பழகுவது நம்முடைய குடும்ப கௌரவத்துக்கே அவமானத்தைத் தேடித்தருவதாக முடியும்.

**மெனிக்கா:**—குணசிங்கம், நீங்கள் உங்களுக்கு சம்பந்த மில்லாத விஷயங்களில் தலையிட்டு அனுவசியமாக அவ மானப்பட வேண்டாமென்று மீண்டும் கண்டிக் கிறேன்.

**குண:**—கண்டிக்க என்ன அவசியமிருக்கிறது ?—உன் சரசப் பேச்சுக்கே நான் சரணுகதி தானே.

**மெனிக்கா:**—வழி விடும். நான் போகவேண்டும்.

**குண:**—நாம் போகவேண்டும் என்று சொல். அந்த அலை கடல் முன் அமர்ந்து ஆனந்தமாக அமுத கீதமிசைப் போம். உன் உருவமும் பருவமும் என் உள்ளத்தை யும் உடலையும் ஊஞ்சலாட்ட, உன் தங்கம் நிகர் அங் கத்தைத் தழுவத்தானே மெனிக்கா நான் துடி துடிக் கிறேன்.

**மெனிக்கா:**—சீ, கல்வி உன்னை ஒரு கனவானுக்கி யிருக்கு மென்று நினைத்தே இதுவரை உன்னேடு கண்யமாக உரையாடினேன்....ஆனல் அது உன்னை முற்றிலும் ஒரு கடையனுகவே மாற்றிவிட்டது.

**குண:**—....இல்லை. உன் காதலனாக மாற்றிவிட்டது.

**மெனிக்கா:**—ஆம்

**குண:**—(மகிழ்ச்சி பொங்க) மெனிக்கா! அப்படிச் சொல் என் இதயராணி!

**மெனிக்கா:**—நீ என் காதகனேதான்.

**குண:**—(பற்களைக் கடித்துக்கொண்டு) மெனிக்கா!

**மெனிக்கா:**—(போய்க்கொண்டே) மெனிக்கா........கர்வம் பிடித்த காண்டாமிருகம்.

**குண:**—நடையைக் கட்டுகிறாயே, நாசுக்காக. சடையைத் தொட சந்தர்ப்பம் தருகிறாயோ!

[சடையைப்பிடித்து இழுக்கிறான். மெனிக்கா திமிறிஓடப்பார்க்கிறாள். கட்டிப் பிடிக்கிறான் குணசிங்கம். சைக்கிளில் வந்த ஜீவன் தடுக்கவே இருவரும் கட்டிப்புரள்கிறார்கள். சந்திரன் வந்து விலக்குகிறான், சந்திரனுடனும் சண்டைக்கு நிற்கிறான் குணசிங்கம்.]

**குண:**—(அடிபட்ட வேதனையில்) மெனிக்கா, அயோக்யச் சிறுக்கி. ஒருத்தனுக்கு ரெண்டுபேரை மயக்கி வச்சிருக்கும் விபச்சாரி! அன்னிய நாட்டானுடன் சேர்ந்து உன் இனத்தானையே அவமானப் படுத்திட்டே. உன்னை சும்மா விடமாட்டேன், அணுஅணுவா சித்திர வதை செய்து கொல்லாட்டா பாரு.

[சிரித்துவிட்டுப் போகிறார்கள். ஆத்திரமடைகிறான் குணசிங்கம்.]

## காட்சி 30. கொழும்பு—ஹோட்டல்

[தர்மலிங்கம் தூண்டுதலால் ரேஸ், குடி, சூதாட்டம், டான்ஸ் முதலியவைகளில் ஈடுபட்டுத் திரிகிறான் அருணாசலம்—ஒரு ஹோட்டல் 'டான்ஸிங்ஹா'

லுக்குள் இருவம் நுழைகிறார்கள். மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு தர்மலிங்கம் ஒரு பறங்கிப் பெண்ணோடும், அருணாசலம் ஒரு யாழ்ப்பாணப் பெண்ணோடும் ஆடுகிறார்கள்........]

**அருணா:**—(ஆடிக்கொண்டே யாழ்ப்பாணப் பெண்ணுடன் பேசுகிறான்) மேடம்........

**யா: பெண்:**—டோண்ட் கால் மி லைக் தேட்—அப்படிக் கூப்பிடாதீங்க.

**அருணா:**—நான்தானே அந்தப் பழைய 'ராட்டன் எக்' ஞாபகமிருக்கா ?

**யா: பெண்**—வாட் யூ ஸே ?

**அருணா:**—கொழும்பிலே ரிக்ஷா இழுக்க இங்கிலிஷ் தெரிஞ்சிருக்கணும்னு சொன்னியே........அதே ரிக்ஷாக்கார அருணாசலம்தான் நான்.

**யா: பெண்:**—டோன்ட் ஸே தேட்....டோன்ட் ஸே தேட்.... (மயக்கம்போட்டுச் சாய்கிறாள்.)

**அருணா:**—எல்லாம் காலத்தின் கோலம்—இல்லை, பணத்தின் லீலை !

## காட்சி 31 ஆலங்குடி-அருணாசலம் வீடு

[அருணாசலத்தின் படத்திற்கு மாலைசூட்டி பூசைசெய்து கொண்டிருக்கிறாள் தங்கம். விடுமுறைக்காக வரும் சந்திரன் அப்படியே அவளைத்தூக்கி யெடுத்து சுற்றுகிறான்........]

**சந்திரன்:**—ஓ, டீயர்!........மம்மி டீயர்!........மம்மி டீயர்!—

**தங்கம்:**—(ஆனந்தத்துடன்) எப்படா வந்தே, ராமச்சந்திரா !

**சந்தி:**—மூக்கச் சிந்துடா. அம்மா நான் பரிச்ச ரொம்ப நல்லா எழுதிட்டேம்மா.

**தங்கம்:**—(ஆனந்தக் கண்ணீரோடு) என் வயித்திலே பாலே வாரடா, ராஜா. நீ படிக்கணும், உத்தியோகம் பாக்கணும், கவலயில்லாம வாளணும்னுதானேடா உங்கப்பா அந்த ராவணஞ் சீமையிலே ரெத்தத்த வேர்வயாக் கொட்டி ஒளைக்காங்க. உம். ஆறு மாசத்துல அழைச்சிக்கிடுரேன்னு சொன்னுங்க. 16—17 வருசம் ஆகப் போகுதே அவுங்க மொகத்தப்பார்த்து....உன் அருமை அக்காவையும் பலிகொடுத்துட்டேமே. (அழுகிருள்)

**சந்திரன்:**—அம்மா, நம்ம குடும்பம் மட்டுந்தான் இப்புடிண்ணு நெனெக்கிரே? தமிழ்நாட்டுக் குடும்பத்துல சரி பாதி இப்புடித்தாம்மா. அவுங்க வாழ்நாளுலே கால்பாகம் தமிழ்நாட்டிலேயும் முக்கால் பாகம் இலங்கையிலோ, பர்மாவிலோ, மலாயாவிலோ, பிஜிபிலோ, தென்னுபிரிக்காவிலோத்தாம்மா கழியுது!

**தங்கம்:**—(கண்ணீரைத்துடைத்துக்கொண்டே) ராமச்சந்திரா நீ கடைசியா எழுதுன கடுதாசிக்காவது ஒங்கப்பா பதில் போட்டாங்களாப்பா?

**சந்தி :**—அம்மா........(கண் கலங்குகிருன்)

**தங்கம் :**—(பதறிப்போய்) என்னடா, ராஜா!

**சந்தி :**—........உங்கிட்டே சொன்னு நீ பொறுக்கமாட்டியேண்ணுட்டுத்தான் இதுவரை மூடிவச்சேன்........

**தங்கம் :**—என்னடா சொல்ரே?

**சந்திரன்:**—பணம் வந்ததும் அப்பாவோட குணமே மாறிப் போச்சாம்மா. அந்த சண்டாளப்பாவி—பங்காளியா வாச்சானே அவன் பெரிய குடிகாரனும். ரேஸ் கிறுக்கனும்—சூதாடியாம்........

**தங்கம்:**—ஆ !

**சந்தி:**—அப்பாவையும் அதுலே தள்ளிட்டானும். அப்பா குடிச்சிட்டு கொழும்பு ரோட்டுல கூத்தடிக்கிருரும்மா........

**தங்கம்:**—(பதிபக்தி மேலோங்க) நிறுத்து........பாவி............ யார் குடிகாரன் ? என் சாமியா குடிகாரன்?............ சூதாடி ? [பைத்தியம் பிடித்தவள் போல் சந்திரன் கன்னத்தில் பளார் பளாரென்று அறைகிருள். சந்திரன் மௌனமாகக் கண்ணீர் வடிக்கிருன். உணர்வுபெற்ற தங்கம் அவனை மார் போடணைத்துக் கொள்கிருள்.]

இல்லேடா ராமச்சந்திரா........எல்லாம் பொய்டா........ எல்லாம் பொய்........உங்கப்பா தங்கமானவங்க.......... குடிக்கமாட்டாங்க.......சூதாடமாட்டாங்க........ குடிக்க மாட்டாங்க. [சோர்ந்து விழப்போகிருள்—தாங்கிக் கொள்கிருன் சந்திரன். கண்ணீர்ப் பெருக்கெடுத்தோட மெதுவாக அருணுசலத்தின் படத்தின் முன்போய் நின்று பேசுகிருள்.]

சாமி, 16 வருஷமா நீங்க என்னை மறந்திட்டாலும் நான் சாவுமட்டும் ஒங்கள மறக்கமாட்டேன்.......... ஒங்களுக்கு பிரைஸ் அடிச்சிதுண்ணு கேட்டதும் தாயும் மகனும் குதிச்சிக் கூத்தாடினேம். பணம் வந்துட்டதுக்காக இல்லே; நீங்க பறந்து வருவீங்க,

பாத்து சந்தோசமா வாளலாம்னுட்டுதான்...........ஆனு, இண்ணிக்கி உங்கள குடிகாரன், சூதாடிண்ணு ஒலகம் சொல்லுது—ஒங்க அரும மகனே சொல்ருன்........ (கதறுகிருள்· சந்திரனும் கதறுவதைப் பார்த்து விட்டு...) அழாதே, ராஜா, உங்கப்பா குடிகாரரில்லே ....சூதாடியில்ல........அவுங்க மாசில்லாத தங்கம்....எல்லாம் பொறாமக்காரங்க சொல்ர பொய்....

**சந்திரன்:**—அம்மா, உலக மெல்லாம் ஒன்ருகக் குற்றம் சாட்டினுலும் உன் பதிபக்தி அதை ஒப்புக் கொள்ளாதும்மா. ஆனுலும், உண்மை அதுதாம்மா....எங்கூடப் படிச்ச என் சினேகிதி கொழும்புலேருந்து எல்லாம் விவரமாக எழுதியிருக்கா. இன்னும் கொஞ்ச நாள் நாம்ப சும்மாயிருந்தா நிலமை மிஞ்சிப் போயிடும்மா.... வந்த பணமும் போயிட்டா அப்புறம் நாம்ப அப்பாவப் பாக்கவே முடியாதும்மா....

**தங்கம்:**—அப்புடிச் சொல்லாதேடா......அப்புடிச் சொல்லாதே...

**சந்திரன்:**—இந்த லீவுலே நான் கொழும்புக்குப் போயி, அப்பாவையும் பாத்து அழைச்சிட்டே வந்துட்டா என்னும்மா?

**தங்கம்:**—என்ன சொன்னே!....நீ லங்கைக்கிப் போரியா?!" ராமச்சந்திரா, அது மட்டும் சொல்லாதடா. வேண்டாண்டா. அந்தப் பாவி மவன் சீமய நெனச்சாலே என் நெஞ்சி வெடிக்குதுடா. அதுதானே என்னயும் எஞ் சாமியய்யும் பிரிச்சி வச்சிருக்கிற பிசாசு! எஞ் செல்வம் மீனுச்சிய விழுங்கிவிட்ட பூதம்! (அழுகிருள்)

**சந்திரன் :**—நான் என்ன, அங்கே கூலிவேலை செய்யவா போறேன்? அப்பாவை அழைத்துக்கொண்டு உடனே திரும்பிடுறேன். இப்படி நாம் சும்மாவே இருந்தா, அப்பாவ எப்பம்மா பார்க்கிறது?...சொல்லும்மா........ சரீண்ணு சொல்லும்மா.......

**தங்கம் :**—(யோசித்துவிட்டு) என்னை ஏமாத்தமாட்டியே?

**சந்தி :**—பாத்தியா....உன் சந்திரனை....

**தங்கம் :**—நம்புரேண்டா. ஆனு அந்த மோகினித் தீவ நெனைக்கயிலேத்தான் என் குலையெல்லாம் நடுங்குது—இப்புடித்தானே உங்கப்பாவும் ஆறு மாசத்துலே கூப்புடறதாகச் சொன்னுங்க....

**சந்திரன் :**—எனக்கு ஒரே ஒரு மாசம் மட்டும் தவணை கொடம்மா. சரிதானே....

**தங்கம் :**—பகவன்தான் உங்கப்பாவையும் உன்னையும் பாக்க எனக்கு கருண செய்யணும்....பெரயாணத்துலே சாக்கிரதயா இருக்கணும். திருட்டுப்பயலுக ஊராம்........ மஞ்சத்துண்டுக்கு கழுத்தே அறுப்பானுகளாம்........

**சந்திரன் :**—ஓ. கே. மம்மி....தேங்யூ!....

## காட்சி 32 ரயில் வண்டி.

**[ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது — சந்திரன் சிந்தனையிலாழ்ந்திருக்கிருன்,]**

**பிச்சைக்காரப் பெண் :**—ஐய்யா....சாமி....

**சந்திரன் :**—ஓகோ. நீங்ககூட திரைகடல் ஓடித்தான் திரவியம் தேடுறீங்களா?

**ஒருவன் :**—இந்தியாவின் பெருமையைப் பிரச்சாரம் செய்யப்

போகும் தூதுவர்கள், ஸார், இவுங்க.

**[எல்லோரும் சிரிக்கிறார்கள். பிச்சைக்காரப்பெண் இதையெல்லாம் லட்சியம் செய்யாமல் பாடுகிறாள்.]**

**பி. பெண் :**—செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே........

**சந்திரன் :**—ஹூம். தேன்வந்து காதிலே பாய வேண்டாம் வெறும் கஞ்சித்தண்ணி வந்து வாயிலே பாஞ்சாப் போதும். நீ இப்படி துடிதுடிக்கும் இளமையையும், வம்பர்களின் கிண்டலேயும் லட்சியம் செய்யாமல் பரட்டைத் தலேயுடன் பல்லிழித்துப் பாடுவாயா ?.... வீண் பெருமைக்கு மட்டும் பஞ்சமில்லே இந்தியாவிலே.

**பி. பெண் :**—எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே........

**சந்திரன் :**—தந்தையர் நாடாம்! என் தந்தைக்கு எந்த நாடு என்பதையே என்னால் புரிந்து கொள்ள முடியல்லே. பாரதநாடு என் தந்தையின் நாடாக இருந்தால் 17 வருசமாக இப்படித் தீவாந்தர வாசம் செய்ய அவர் என்ன முடிதுறந்த மன்னரா ?

**[பிச்சைக்காரப் பெண் பாடிக்கொண்டே மறுவண்டிக்குப் போய்விடுகிறாள். எதிர்ஸீட் ஆசாமி சந்திரனே ஒரு புதிர்போல் பார்த்துவிட்டு....]**

**எதிர்ஸீட் :**—மன்னிக்கணும். ஏன் ஸார், நீங்க என்னமோ வாழ்க்கையிலே....

**சந்திரன் :**—........வ ழு க் கி விழுந்துட்டேன். சோதனைக்கு

ஆளாகிட்டேன்னு நினைக்கிறீங்களா? பணத்திமிரிலே இருக்கும் எவனுவது இதை வாய்விட்டுச் சொல்வானு? ....16 வருஷமாக இலங்கையிலேயே தங்கி உழைக்கும் தந்தையைப் பார்க்கத்தான் போகிறேன். உம்.

**எதிர்ஸீட்:**—16 வருசமா!....உம்ம்...நேர்மையா உழைக்கிற வங்க 160 வருசத்துக்கும் சம்பாதிக்க முடியாது.... பாருங்க, இந்த வண்டியிலேயே பெரிய லெச்சாதி பதிகள் மாதிரி நாலு காடப் பசங்க வர்ராங்க. ரெண்டு நாளையிலே ஆயிரம் ஆயிரம்மாக பணம் அடிச்சிக் கிட்டு திரும்பிடுவானுக.

**சந்தி:**—இதென்ன ஸார், புதிராயிருக்கு! பெரிய எஸ்டேட் ஓனர்களோ?

**எதிர்ஸீட்:**—(சிரிப்புடன்) எஸ்டேட் ஓனர்ஸில்லே. இலெ கடத்துரவங்க.

**சந்தி:**—அப்படீன்னு?

**எதிர்ஸீட்:**—(காதில்) கஞ்சா கடத்துரவங்க.

**சந்தி:**—ஆ! அது துரோக மில்லையா!

**எதிர்ஸீட்:**—துரோகம்தான். ஆனு இதையெல்லாம் யாரு பார்க்கிறு இந்தக் காலத்துலே. பேரு கிருபாகரன், தொழிலு கசாப்புக்கடை!

**சந்திரன்:**—நீங்க மட்டும் எனக்கு ஒரு சின்ன ஒத்தாசை செய்தீங்கண்ணு இந்தத் துரோக முயற்சியை உடனே தடுத்திடலாம்.

**எதிர்ஸீட்:**—(சிரிப்புடன்) என்ன ஸார். இது உங்களுக்கே வேடிக்கையாயில்லே. இதைத் தடுத்திட்டாப்புல இந்த கடத்தல் தொழிலையே ஒழித்துக் கட்டிடலாங்கிற

எண்ணமா ?

**சந்தி:**—நண்பரே, ஒழித்துக் கட்டமுடியாவிட்டாலும் ஒரு சம்பவத்தையாவது தடுக்கலாமல்லவா ? பாதையில் கிடக்கும் ஒரு முள்ளை அகற்றுவதன் மூலமும் அது ஒருவன் காலில் தைக்காமலாவது தடுக்கலாமல்லவா ?

**எதிர்ஸீட்:**—ஓ. கே நான் தயார்.

**சந்திரன்:**—நன்றி. (வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.)

## காட்சி 33 கப்பல்

(கப்பலில் வைத்து 'கஸ்டம்ஸ்' சோதனை நடைபெறுகிறது. தங்கள் பெட்டிகளைத் திறந்து காட்டியபின் சந்திரனும் எதிர்ஸீட் நண்பனும் இன்ஸ்பெக்டரிடம் ஏதோ சொல்கிறார்கள். கஞ்சா கடத்தும் நபர்களைக் கவனிக்கிறார்கள்....)

**நபர்:**—(மற்றவனிடம் ரகஸ்யமாக) ஜாக்கிரதை ! (பக்கத்தில் சந்திரன் நிற்பதைப்பார்த்து விட்டு) காடப்பசங்க, மணி பர்ஸை அடிச்சிடப் போருங்க.

(சோதனையில் இருவர் பிடிபட இருவர் தப்பிக் கொள்கிறார்கள். கப்பலிலிருந்து இறங்குவதற்காக சந்திரன் பெட்டி படுக்கையை எடுக்க வருகிறான்.)

**கூலி:**—தொரே

**சந்திரன்:**—அட, என்னுப்பா இப்பதானே எல்லாம் திறந்துசோதிச்சாங்க. நீ மறுபடியும் தொரேங்கிறியே.

**கூலி:**—நான் கூலிங்க. இந்தச் சீமயிலே கால்சட்டை போட்டவங்களை யெல்லாம் 'தொரே' ண்ணு தானுங்க கூப்புட்றது.

**சந்திரன் :**—(சிரித்துவிட்டு) ஓ, அப்படியா....உன் பெயரென்னுப்பா.

**கூலி :**—தியாகராசாங்க.

**சந்திரன் :**—ஆமாமா, பாரதி பாடினைப்போல நீயும் பாரத நாட்டு ராசாதானே. ஆனு அதுலேயும் நீ தியாகராசா. அதுதான் சொந்தநாட்டையும் தியாகம் பண்ணிப் புட்டு இப்படி தீவாந்தரவாசம் அனுபவிக்கிரே.

[பேசிக்கொண்டே ரயில்வண்டியண்டை வருகிருர்கள்]

**கூலி:**—ஸெகண்ட் கிளாஸுக்குத்தானுங்களே?

**சந்திரன்:**—இல்லேப்பா. காந்தி கிளாஸுக்குத்தான்.

**கூலி:**—அதென்னங்க கிளாஸு?

**சந்தி:**—அதுதாம்பா, தேடு கிளாஸ்.

## காட்சி 34 தர்மலிங்கம் வீடு

**[அருணுசலம் குடித்துவிட்டு ஈஸிசேரில் சாய்ந்து கிடக்கிருன் தர்மலிங்கம் சொல்லச்சொல்ல சுப்பு கடிதம் எழுதுகிருன்.]**

**தர்மலிங்கம்:**—என்னுடா, எல்லாம் எழுதியாச்சா? எது?

**சுப்பு:**—ஆமாங்க.

**தர்மலிங்கம்:**—சரி. படிச்சிச் சொல்லு.

**சுப்பு:**—(படிக்கிருன்)

கனம் ஐயா ஆறுமுகம் அவர்களுக்கு...

**அருணு:**—விளக்குமாத்துக்குப் பட்டுக்குஞ்சலமாம். 'கனம்' வேறயா....—

**சுப்பு:**—தாங்கள் தரவேண்டிய பாக்கி ருபாய் முன்னூரையும் இம்மாதம் 10-ம் தேதிக்குள் கட்டாயம் செலுத்திவிட வேண்டியது...

அருணு:—தரித்திரம் தர்ரதாவது நாம்ப வாங்குறதாவது. அது தான் அவனுக்கு மொய்யெழுதியாச்சே.

தர்மலி :—உம்ம். மேலே படிடா.

சுப்பு :—தவறினுல் உடனே கோர்ட்டில் நடவடிக்கை யெடுக்கப்படும்........

அருணு :—இந்த பூச்சாண்டியெல்லாம அவன் கிட்ட பலிக்காது. ஜெயிலெல்லாந்தான் அவனுக்கு அத்தை வீடு மாதிரியாச்சே........

[இச்சமயம் வாசலில் ரிக்ஷா ஒன்றுவந்து நிற்கிறது. ரெத்தவெள்ளத்தில் மிதக்கும் சந்திரனை உள்ளே தூக்கி வருகிறுன் ரிக்ஷாக்காரன். ரிக்ஷாவிலிருக்கும் பெட்டி மேல் 'சந்திரன்' என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து விட்டு கத்துகிறுர் தர்மலிங்கம்]........

தர்மலி :—சந்திரன் !........சந்திரன் !........

அருணு:—(ஓடிவந்து) சந்திரனு!....என் மகனு!....சந்திரன்!.... சந்திரன்!....

(சந்திரனை உள்ளே தூக்கிக்கொண்டு போகிறுர்கள் டாக்டருக்கு கார் அனுப்பப்படுகிறது.)

தர்மலி :—என்னப்பா இதெல்லாம் ?

ரிக்ஷாக்காரன்:—இந்தியா கோச்சிலேருந்துவந்து என்வண்டியிலே குந்தினுருங்க. இந்த வெலாசத்துக்கு உடச் சொன்னுரு. சந்தி முக்குத் திரும்பும்போது ஆரோ ரெண்டுப் பாவிங்க பின்னுலேவந்து மண்டய ஒடச்சிட்டு 'கஞ்சா கடத்துனு ஒனக்கென்னடா? ஒங்கப்

பன் ஊட்டு சொத்தா'ண்ணு கேட்டுக்கிட்டே ஓடிட் டானுங்க. எனக்கு ஒண்ணும் வெளங்கலீங்க.......

## காட்சி 35 தர்மலிங்கம் வீடு

(தலையில் கட்டுடன் படுத்திருக்கிறான் சந்திரன், மருந்து ஊற்றிக் கொடுக்கிறாள் பார்வதி—தர்மலிங்கத்தின் ஒரே மகள்.]

**சந்தி:**—(மருந்தை வாங்கிக்கொண்டே) பார்வதி, நீ மட்டும் இப்படி இரவு பகல் விழித்திருந்து என்னைக் கவனித்தி ருக்காவிட்டால்....அன்றைய ஜன்னியிலேயே நான் இறந்திருப்பேன்.

**பார்வதி:**—(லஜ்ஜையுடன்) கடமையைச் செய்தேன். அதற் காக இவ்வளவு முகஸ்துதியா? நான் இதற்கெல்லாம் அருகதை யுடையவளா?

**சந்தி:**—அடேயப்பா, 'ஆம்' என்று சொல்லவேண்டிய இடங்களில் 'இல்லை' யென்று சொல்லி, 'ஆம்' என்னும் பொருளை அப்படியே தெரிவிக்கும் அபாரசக்தி இந்தப் பெண்களுக்குத்தானிருக்கிறது.

**பார்வதி:**—ஹியர்... ஹியர்...பெரிய லெக்சரே அடிச்சிட் டீங்களே.......நீங்க ஒரு தப்பு பண்ணிட்டீங்க—அம் மாவையும் கூடவே அழைச்சிட்டு வந்திருக்கணும்.

**சந்தி:**—இல்லை, பார்வதி. அப்பாவை அழைத்துக்கொண்டு போகவே வந்தேன்.

**பார்வதி:**—பார்த்தீங்களா. அப்போ, எங்களையெல்லாம் அழைச்சிட்டுப்போகமாட்டீங்க. உங்க அப்பாவை மட்டுந்தான்........

**சந்தி:**—அதற்கென்ன, பார்வதி. எல்லோருமே ஒரு 'ட்ரிப்' போயிட்டுத்திரும்பிட்டாப்போச்சி...... என்னமோ கொஞ்ச நாட்கள்தான் பழகினேம். அதற்துள் என் மனதைக் கவர்ந்துட்டே........

**பார்வதி:**—நீங்க எனக்குப் புதியவரல்ல மிஸ்டர் சந்திரன். எங்கப்பாவும் உங்கப்பாவும் என்று கூட்டாக வியாபாரம் ஆரம்பிச்சாங்களோ அன்றே இங்கே உங்கள் பேருக்கு நாமினேஷன் பேப்பர் தாக்கல்செய்தாச்சு. (பார்வதி அர்த்தத்தோடு சிரிக்கிருள். சந்திரன் விஷயம் புரியாமல் விழிக்கிருன்.)

**பார்வதி :**—பொடி நோனு.......பொடி நோனு.......

**பொடி :**—எனவா நோனு........(வருகிருள்)

**பார்வதி :**—பொட்டாக் ஹோர்லிக்ஸ் அரங் வரேன்.

**பொடி :**—ஹொந்தாய் நோனு. (போகிருள்)

**சந்தி :**—இன்று கொஞ்சம் வெளியே போய்வரவேண்டும். ஐந்தாறு நாட்கள் படுக்கையிலேயே கிடந்து உடம்பெல்லாம் நோவுது.

**பார்வதி :**—அப்போ 'கால்பேஸ்' பக்கம் போய்வரலாமா?

**சந்தி :**—(திடுக்கிட்டு) இல்....லே...பார்வதி. நான் சற்று தனியாகப் போய் வரத்தான் விரும்புகிறேன்.

**பார்வதி :**— (ஏமாற்றத்துடன்) அப்போ காரை எடுத்துக் கொண்டுபோங்கள்......டிரைவர்! டிரைவர்!.... (டிரைவர் வருகிருன்) எவ்வளவு நேரமா கத்துரேன்.

**டிரைவர் :**—தண்ணி போட்டுக்கிட்டு இருந்தேங்க.

**பார்வதி :**—சரிதான். இந்த வீட்டுல தண்ணிபோடுரத்துக்கு நீ ஒருத்தன்தான் பாக்கி. இது குடிகார மடந்தானே.

**டிரைவர் :**—ஐயோ, மேடம். தப்பா நெனச்சிக்காதிங்க. காருக்கு தண்ணிபோட்டுக்கிட்டிருந்தேண்ணு சொன்னேன்.

**பார்வதி :**—தொரே கொஞ்சம் வெளியே போராங்க. கார் கொண்டுவா.

**டிரைவர் :**—நல்லதுங்க.

**சந்தி :**—உன் சேவைக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன் பார்வதி.

[பார்வதி உள்ளே போகிருள். பொடிநோனு ஹோர்லிக்ஸ் கொண்டு வருகிருள். தண்ணீர் கேட்க நினைத்த சந்திரன் சிங்களம் தெரியாமல்...........]

**சந்தி :**—இங்கே....... இங்கே.......

**பொடி :**—கோ மாத்தயா?....முனத ஓண ?

**சந்திரன் :**—(வாயில் கைவைத்துக் காட்டுகிருன்)

**பொடி :**—(சிரிப்புடன்) வத்துரு. (ஓடுகிருள்)

**சந்திரன் :**—வத்துரு—கங்காரு. நல்ல பாஷை !

## காட்சி 36 மெனிக்காவின் பங்களா

[காரிலிருந்து இறங்கிவந்த சந்திரன் 'காலிங்பெல்லை' அமுக்குகிருன். கட்டிலில் புரண்டுகொண்டே கிடக்கும் மெனிக்காவுக்கு இது எரிச்சலை உண்டு பண்ணுகிறது]

**மெனிக்கா :**—அய்யோ சனியன்கள். கொஞ்சம் நிம்மதியாயிருக்க விடுறதில்லே. (மறுபடியும் புரளுகிருள், சந்திரன் இன்னும் 'பெல்'லை அமுக்குகிருன்.) ஆயா.......

ஆயா....இவ எங்கே போய்த் தொலேஞ்சாளோ!.......
(எழும்பி உடையை சரிப்படுத்திக்கொண்டே வருகிருள். கண்ணுடிக்கதவு ஊடாக சந்திரன் நிற்பதைப் பார்த்து விட்டு ஓடி வந்து கதவைத் திறந்து சந்திரன்மேல் விழுகிருள். ஒருகண மௌனம். அப்புறம் சந்திரனே உள்ளே அழைத்துச் செல்கிருள்.

**சந்திரன் :**—எந்த நேரமும் தூக்கந்தானு மெனிக்கா?

**மெனிக்கா :**—எல்லாம் உங்கள் நினேவால்தான்.

**சந்தி :**—ஆஹாஹா. என் பொய்யின் பிறப்பிடமே! ரொம்ப நல்லாருக்கே. என் நினேவால்தான் நிம்மதியா தூங்குகிருயா ?........பெண்கள் பொய் சொன்னல் உடனே பிடிபடுகிருர்கள்.

**மெனிக்கா:**—விழித்துக்கொண்டிருந்தால் அம்மாவும், பிரன்ட்ஸும் 'மெட்ருஸ் எப்படி? இட்லி எப்படி? சாம்பார் எப்ப'டிண்ணு பிராணனே வாங்கிட்ரு. உங்களேப்பற்றி நினேக்கவே விடமாட்டேங்ரு. அதுக்காகத்தான் இப்படி தூங்குகிறமாதிரி பிரிட்டன்ட் பண்ணிட்டு உங்களேப்பற்றி நினேத்துக்கொண்டே கிடந்தேன்........ஆமா இதென்ன கட்டு?

**சந்திரன் :**—காதல்பாதை கரடுமுரடானதுண்ணு சொல்லிவச்சவன் முட்டாளா?

**மெனிக்கா :**—(கட்டை அவிழ்த்துப் பார்த்துவிட்டு) ஆ.......

**சந்திரன் :**—இப்போதான் ஆறிப்போச்சுதே. நான் கொழும்புக்குவந்தே ஒருவாரமாகிறது மெனிக்கா. இந்தச் சனியன்தான் உடனே உன்னே வந்துபார்க்க முடியாதபடி தடுத்துவிட்டது.

**மெனிக்கா:**—(கண்ணீருடன்) எனக்கு சொல்லியனுப்பி யிருக்கக்கூடாதா? இரவுபகல் விழித்திருந்து சேவை செய்யும் பாக்கியமாவது........

**சந்தி:**—இன்னெரு தடவை மண்டையை உடைச்சுண்டாப் போச்சி.

**மெனிக்கா:**—ஆமா. அசட்டுப்பிசட்டென்று.......

**சந்திரன்.**—நீதானே கவலைப்படரே—என் மண்டையை உடைத்து சேவைசெய்யும் பாக்கியத்தை உனக்குத் தரலியேண்ணு.

**மெனிக்காவின் தாய்:**—(வந்துகோண்டே) டோட்டி........

**மெனிக்கா:**—மம்மி... மம்மி....கமாண்....இவர்தான் என் பிரண்ட் மிஸ்டர் சந்திரன் (சந்திரனிடம்) மைமதர்.

(சந்திரன் கைகூப்பி வணங்குகிருன். அவன் கை யைப்பிடித்து குலுக்குகிருள் மெனிக்காவின் தாய்.)

**தாய்:**—ஹல்லோ....ஹவ்டுயுடு? ....டோட்டி ஆல்வேய்ஸ் ஸ்பீக்ஸ் ஆப் யூ.......போய்........பேய்.......கூல் டிரிங்ஸ் அரெங் வரென்.....எக்ஸ்கியூஸ் மி மிஸ்டர் சந்திரன்.......டோட்டி....

**மெனிக்கா:**—அதெல்லாம் நான் கவனிச்சுக்கிறேன் மம்மி (தாயார் போகிருள்)

**சந்திரன்:**—ஆமா, இதென்ன உங்கம்மா உன்ன தோட்டி தொண்டமான்னு கூப்புடுரு?

**மெனிக்கா:**—(சிரிப்புடன்) இந்த இலங்கைத்தீவே ஒரு குட்டி லண்டன்ங்கிறதுதான் இங்குள்ளவங்க எண்ணம். பிரிட்டனுக்கு சரியான வாரீசு.

**சந்திரன்:**—ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்ன்னு சொல்லு.

**தாய்:**—(வந்துகொண்டே) டோட்டி, ஐ ஆம் கோயிங் டு லேடீஸ் கிளப். வாட் அபவுட் யூ?

**மெனிக்கா:**—நீங்க போய் வாங்க மம்மி. நாங்க பேசிண்டிருக்கோம்.

**தாய்:**—ஓ....கே....பை. பை......சியர்யூ மிஸ்டர் சந்திரன்.

**சந்தி:**—சியர்யூ....... (தாய் போனபின்) வேறென்ன விசேஷம் மேடம்?—ஐ ஆம் ஸொரி—நோனு? (சிரிப்பு.)

**மெனிக்கா:**—அதிருக்கட்டும். இலங்கை எப்படியிருக்கிறது?

**சந்திரன்:**—சதா கடல் நீரிலேயே மிதந்து கொண்டு கிடப்பதனுலே லங்காதேவிக்கு கொஞ்சம் ஜலதோஷம் புடிச்சிருக்கு...அப்புறம் தமிழை சிதைத்து, ஸமஸ்கிருதத்தக் கலந்து, என்னுன்னெமோ பண்ணி சிங்களம்னு பேசுறீங்க.

**மெனிக்கா**:—(சிரிப்புடன்) நானும் அடிக்கடி இப்படித்தான் எண்ணுவதுண்டு. சிங்களத்திற்கும் தமிழுக்கும் பேச்சிலும் சரி எழுத்திலும்சரி அவ்வளவு வித்தியாசமில்லே. தமிழில் இடையிலே ஸமஸ்கிருதம் கலந்து கொண்டது போல சிங்களத்திலும் ஸமஸ்கிருதமும் பாலியும் புகுந்து கொண்டன, அவ்வளவுதான். எழுத்துக்களேத்தான் பாருங்கள்:—அய்னு, — ஆய்னு, — கைனு, ஐ, காய்னு, ஜ, பைனு, ஶ, பாய்னு, ஷ, வயனு ஏ, வாயனு, ஐ, எல்லாமே தமிழ் வடிவந்தான். (பேப்பரில் எழுதிக்காட்டுகிருள். தான் நினைத்திருந்ததைவிட அதிக ஒற்றுமையிருப்பதைக் கண்டு ஆச்சரியப் படுகிருன் சந்திரன்.)

**சந்திரன்:**—சரி. எப்படியோ இன்னும் நாலைந்து வருசத்திற்கு இந்த தீவாந்தர வாசந்தான் போலிருக்கு.

**மெனிக்கா:**—(ஆசையோடு) அப்படியா!

**சந்திரன்:**—அப்பா ஒரேயடியா இன்டரும், பிய்யேயும் இங்கேயே படிக்கணும்ங்குறர். தொழிலுலேயும் அவருக்கு ஒத்தாசையாயிருக்குமாம்.

**மெனிக்கா:**—அதுவும் சரிதானே சந்திரன். அந்தப்பாவி தர்மலிங்கம் அப்பாவைக் கெடுத்துடாதபடிக்கும் பார்த்துக்கிடலாம்.

**சந்தி:**—அம்மாவின் ஞாபகந்தான்........

**மெனிக்கா:**—இந்தியாவில் தான் என்ன? ஆலங் நடியிலயா படிச்சீங்க? மதருஸ்லேதானே தங்கியிருந்தீங்க. அப்படி நெனச்சிக்கிடுரது. லீவுலே போயிட்டுவந்துடணும்.

**சந்தி:**—உம்ம்....பார்ப்போம். நீதான் கண்ணி போட்டுட்டியே.

**மெனிக்கா:**—ஆமா, நீங்கதான் என்றைக்கு என் கழுத்திலே கண்ணிய மாட்டப்போறீங்களோ....உம்ம்........

**சந்திரன்:**—எதிர்பார்த்துக்கொண்டு இருப்பதுதானே மெனிக்கா இன்பத்தின் சுரங்கம்.

[இந்தசமயம் ரேடியோவில்— 'இன்பக்காவியமாகும் வாழ்வே காதலினலே........இருமனம் ஒன்ருய்க்கூடும் நாளிலே'—என்ற பாட்டு ஒலிக்கிறது. இருவரும் கலகலவென்று சிரிக்கிருர்கள்.]

**மெனிக்கா:**—சந்திரன், எங்கே உங்கள் மாஸ்டர் பீஸ்?

**சந்திரன்:**—'அங்கமெல்லாம் பசும் பொன் தங்கம்'–பாட்டா? உம்ம்....... அ ப் ப டி யா ன ல், தேவியின் ஆடிய பாதங்கள்?

**மெனிக்கா:**—(ஆடிக்கொண்டே) ததிங்கிணத்தோம்!........ ததிங்கிணத்தோம்!..........ததிங்கிணத்தோம்........

[சந்திரன் பாடுகிருன்---மெனிக்கா மெய்மறந்து ஆடுகிருள். இதையெல்லாம் வாசலில் வந்து நின்று கவனிக்கிருன் குணசிங்கம். ஆடிமுடிந்ததும் ஓடி வந்து சந்திரனின்மேல் விழுகிருள் மெனிக்கா. சந்திரன் கைகொட்டுகிருன். இன்னொரு கைதட்டல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்க்கிருர்கள்.]

**குண:**—ஆஹாஹா........பேஷ். பேஷ். அய்பன் அமுதகீத மிசைத்தான்—அம்மை மெய்மறந்து ஆடினுள். அண்ட சராசரமும் ததிங்கிணத்தோம் போட்டது. மயில் பாடியது. குயில் ஆடியது. கழுதை கர்வபங்கமடைந்தது.

**மெனிக்கா:**—(ஆத்திரத்துடன்) குணசிங்கம்!

**குண:**—'ஏன் வந்தாய், எங்கள் விபச்சாரத்தை விளம்பரப் படுத்த'—என்று கேட்கிருயா? பேஷ். மெனிக்கா, அபிநயம்பிடிக்க மாத்திரமல்ல ஆளைப்பிடிக்கவும் தெரியும் என்று காட்டினுய்—அவ்வளவுதானே. அதற்காகவா அந்த அப்பாவி அப்படி மிரளுகிருன்?

**சந்தி:**—குணசிங்கம்!

**குண:**—ஓ! மிஸ்டர் சந்திரனு! ஐ அம் ஸொரி. எப்ப வந்தீங்க? நான் யாரோ ஒரு அயோக்கியப் பயல் என்றல்லவா நினைத்தேன்.

**மெனிக்கா:**—குணசிங்கம், நாவை அடக்கிப்பேசு.

**குண:**—(நாக்கை உள்ளே இழுத்துக்கொண்டு பேச முயற்சித்து கிண்டல் செய்கிருன்)

**மெனிக்கா:**—(ஆத்திரத்துடன்) கெட் அவுட்!

**குணசிங்கம்:**—வெடிக்காதே மேடம், கொஞ்சம் நல்ல அவுட் கிடைக்கலியா?

**மெனிக்கா:**—நீயாகப் போகிருயா........

**குண:**—தூக்கிக்கொண்டு போகட்டுமா? என்று கேட்கிருயா? ஹஹ்ஹஹ்ஹா........உம்ம்........அப்புறம் மிஸ்டர் சந்திரன், காதல் கடல் கடந்து வந்திருக்குதுண்ணு சொல்லுங்க.

**மெனிக்கா:**—குணசிங்கம்!

**குண:**—யெஸ் மேடம்.

**மெனிக்கா:**—வெளியே போ.

**குண:**—ஓ. கே. (சந்திரனைப்பார்த்து) ஏய் ரிக்ஷா, 'கால்பே' ஸுக்கு என்னப்பா கேக்குறே?

[சந்திரன் நாணத்தால் தலைகுனிகிருன். ஆத்திரத்தை அடக்கமுடியாத மெனிக்கா 'ட்ரே'யைத் தூக்கி குணசிங்கத்தின் தலையில் தாக்குகிருள். வாசலில் கார் சப்தம் கேட்டு மெதுவாக நழுவி விடுகிருன் குணசிங்கம்].

## காட்சி: 37 யாழ்ப்பாணத்தில் ஒரு குடிசை.

[மீனுட்சி சுருட்டுசுற்றிக் கொண்டிருக்கிருள். தொட்டிலில் கிடக்கும் குழந்தை அழுகிறது. எழுந்து சென்று குழந்தையைக் கையிலெடுத்து........]

**மீனுட்சி:**—அரும்பு இதயத்தை இரும்பாக்கித்தான் பார்க்கிறேன். ஆனுலும் நீ அழும்போதெல்லாம் என் இதயத்தின் ஏதோ ஓர் மூலையில் என்னவோ செய்யத்தான் செய்கிறது. அடக்கமுடியவில்லை..........என்ன பார்க்கி

ருய்? எவனே செய்த துரோகத்திற்காக என்னை வெறுக்கிருயே அம்மா என்று கேட்கிருயா? நீ என் அத்தானை அப்பாவாகக்கொண்டு பிறந்திருக்கவேண்டும், என் அன்பையும் அனுதாபத்தையும்பெற. உன்னை என் இதயகமலத்தில் ஏந்தி வளர்த்திருப்பேன். அதற்கும் கூடி போட்டி போட்டிருப்பார் என் ஆசை அத்தான். அவருடைய அன்புச்சின்னமாக, அவரின் மதி முகம் காட்டும் மாயக்கண்ணுடியாக நீ இருந்திருக்க வேண்டும்—உன்னை நான் பெருமையுடன் எடுத்தணைத்துப் புளகாங்கிதமடைய. ஆனல் நீயோ........அவமானத்தின் அடிக்கோடு! பாவச்சின்னம்! விபச்சாரப் பிரச்சாரம்! உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அந்த உலுத்தனின் பூதபிம்பம்தான் என் மனதிலே பயங்கரமாகத்தோன்றுகிறது. உனக்குப்பாலூட்டும் பொழுதெல்லாம் பாம்புக்குட்டிக்குப் பால் வார்க்கிறேன் என்ற விரக்திதான் ஏற்படுகிறது. என்னையுமறியாமல் உன்னை வெறுக்கிறேன்... ....

**[வாசலில் காலடி சப்தம் கேட்க நிமிர்ந்து பார்க்கிருள். கமலா தம்பி முத்து வருகிருள்.]**

**கமலா:**—என்ன தங்கச்சி கருட்டெல்லாம் நல்ல, வடிவா சுற்றினீரோ?

**மீனு:**—சுற்றியிருக்கிறேன் அக்கா....உட்காருங்கள்.

**கமலா:**—கனக்க சுற்றினீர்தானே (சுருட்டு ஒற்றைக் கையிலெடுத்துப் பார்த்துவிட்டு.) ஓ........ரெம்ப வடிவா இருக்கே....அது கிடக்க, நான் உம்மட்ட ரெம்ப நாளா கதைக்கணும்னு பெற்றிய விருப்பம். நீர் எப்பவும் இப்படி கவலேயோடு இருக்கிறது பிழை. என்னைப்

பாரும், எங்க தோப்பனுர்—சுதுமலே சுந்திரத்தாருக்கு பெற்றிய மானம் இருந்தது. மெய்யே. இப்ப நான் சுருட்டு மடக்கி சீவனம் செய்யினம். உதுகளே யெல்லாம் மறந்து விடவேணும். மெய்யே...இந்தாரும், இந்தப் போயிலேயைக் கெதியா மடக்கி முடியும் பாக்கலாம். நான் பேந்து வர்ரேன். (போகிருள்.)

## காட்சி 38 தர்மலிங்கம் வீடு

**(எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிருர்கள். ரேடியோவில் செய்தி சொல்லப்படுகிறது.)**

**ரேடியோ:**—ரேடியோ சிலோன். 1949-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதி செவ்வாய்க்கிழமை-செய்திகள். மொழி பெயர்த்து வாசிப்பது கடுகுமணி காட்டு சிங்கம்:—

இன்று முதல் அமுலுக்கு வரும் இலங்கை குடியேற்ற வெளியேற்ற சட்டத்தின்படி 1944 முதல் 1949 அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரை தொடர்ந்து இலங்கையிலிருந்து வந்ததை தஸ்தாவேஜு பூர்வமாக நிரூபிக்கக் கூடிய இந்தியர் பாகிஸ்தானியர்கள் மட்டுமே தற்கால வாச பர்மிட்கள் பெற்று இலங்கையில் தங்க அனுமதிக்கப் படுவார்கள். இவ்வித தற்கால வாச பர்மிட் களுக்காக மனுச் செய்ய விரும்புவோர் முதலில் தங்கள் நாட்டு ஹைகமிஷனர்களிடமிருந்து பாஸ் போர்ட்டுகள் பெற்று, பின்னர், குடியேற்ற வெளியேற்ற இலாக்கா வெளியிட்டிருக்கும் பாரங்களேப் பூர்த்தி செய்து போதிய அத்தாட்சி

களுடன் குடியேற்ற வெளியேற்றக் கட்டுப் பாட்டதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதிகாரி தமது உசிதாசாரத்தை உபயோகித்து தற்கால வாசப்பர்மிட்டுகள் வழங்குவார்........''

**தர்மலிங்கம்:**—உலக்கையன்கள். குடியேத்தமும்வெளியேத்த மும். நல்லவேளே பொறக்கவும் சாகவும் பர்மிட் வே ணும்னு சொல்லாம இருக்கானுகளே. எது?

**சுப்பு:**—அதுவுந்தான் அரிசிப் பொஸ்தகம் இல்லாம சாக முடியாதுங்களே. பொணத்த சுடக்கூட பொஸ்த்த கத்தக் காட்டாட்டா உத்தரவு கொடைக்காதுங்களே.

**தர்மலிங்கம்:**—அண்ணுச்சிக்கி ஒரு தொந்தரவும் இருக்கா துண்ணு நினைக்கிறேன்........

**அருணு:**—என்னப்பா சந்திரன், உம்பாடு எப்படி?

**சந்தி:**—நாந்தான் 43 லேயே வந்துட்டேனேப்பா. ஆனுலும் ஒன்று.' அந்த உசிதாசாரம்ணு ஒண்ணு சொல்ருனே அது மகா சக்தி வாய்ந்ததாயிருக்கும். அம்பது வருஷ மா இங்கேயே வசித்திருந்தாலுங்கூட கண்ட்ரோலர் விரும்பலேண்ணு முடிஞ்சிது.

**அருணு:**—உம்ம்....இதுனுல எத்தன ஏளேங்களுக்கு என் னென்ன கஷ்டம் வரப்போகுதோ!

**சுப்பு:**—ஏளேங்களுக்குக் கஷ்டம் வரும் கிளார்க்குங்களுக் கும், ஓபீஸருங்களுக்கும் சரியான சான்ஸ்வரும்.

**தர்மலிங்கம்:**—அது என்னுடாது?

**பார்வதி:**—சரிதானேப்பா. "பிளாக் மார்க்கெட்" சிறப்பா நடக்கும். என்ன சுப்பு?

**சுப்பு:**—ஹீ....ஹீ....ஹீ....ஆமாங்க.

**அருணு:**—சந்திரன், ஒங்கம்மா எழுதின கடுதாசியயெல்லாம் பத்திரமா வச்சிக்கோ. ரொம்பமுக்கியம்.

**சுப்பு:**—அதெல்லாம் ஒண்ணும் வேண்டாங்க. நீங்க 43 லே ஜெயிலுக்குப்போன ஒரு ரெக்காடே போதுமே.

[சந்திரனும் அருணுசலமும் தலே குனிகிருர்கள்]

**தர்மலி:**—வாய மூடுரு, உலக்கையன். டேய் சுப்பு, வேலேக் காரப் பசங்களுக்கு இவ்வளவு எ ட ங் குடுக்குரதே சுத்த தப்பு, எது ?

**சுப்பு:**—ஆமாங்க.

## காட்சி 39. சென்னே—ஜீவனின்நாடக சபா

**[ஜீவனின் மறுமலர்ச்சி நாடக சபா. ஜீவன் கோட், சூட், ஹேட், டையுடன் தோழில் காவடி சுமந்து வருகிருன். கூடவே சகாக்கள் மேளதாளத்துடன் வருகிருர்கள்.]**

**ஒருவன்:**—தம்பி, இது என்னக்காவடி ?

**ஜீவன்:**—அண்ணே, இது அன்னக்காவடி (கொட்டு மேளம் முழங்கி நிற்கிறது.)

ஹர ஹரா கிரேட் காட் !

**மற்றவர்கள்:**—நேம் பார்வதீஸ் ஹஸ்பெண்ட் ! (மேளம்)

**ஜீவன்:**—(ஆடிக்கொண்டே பாடுகிருன்)

பழனிமலே ஆண்டவனே, அன்னக்காவடி
பசியெடுத்தால் தூக்குகின்ருேம் அன்னக்காவடி
கழனியிலே விளேச்சலில்லே அன்னக்காவடி
கங்கையிலே தண்ணியில்லே, அன்னக்காவடி

**(மற்றவர்களும் சேர்ந்து பாடுகிருர்கள்—மேளதாள முழக்கம்)**

புளியங்கொட்ட இட்டிலிக்கும் பஞ்சம் வந்தாச்சு

புடுங்கித்திங்க இலையும்மில்லே-மரம் பட்டுப்போச்சு
கிளிஞ்ச கந்தைத் துணிக்குக்கூட ரேஷன் வந்தாச்சு
கிருபை செய் நீ ஏழுமலே அன்னக்காவடி

(மேளதாளம்—பின்பாட்டு)

அரைவயிற்றுப் பட்டினிகள் நம்ப நாட்டிலே
ஆடுது நம் அன்னக்காவடி அமெரிக்காவிலே.
தேனும் பாலும் ஓடுது நம் தியாக பூமியிலே ( ? )
தேசந்தோறும் ஆடுது நம் அன்னக்காவடி

(மேளதாளம்—பின் பாட்டு)

**ஒருவன்:**—தம்பி, எங்கெங்கெ யெல்லாமோ சுத்திப் பாத்துட்டு வந்ததாக.......

**ஜீவன்:**—....ஆமாமா. தேவையில்லாத விவகாரத்தை யெல்லாம் தீர்த்து வைக்கிறதுதான் அரசியல்ன்னு நெனைக்கிற இந்தக்காலத்துலே நம்ப சொந்த சகோதரன் ராவணன் சீமை எப்படியிருக்குதுண்ணு போய்ப் பார்த்துட்டு வந்தேன்.

**ஒருவன்:**—அதப்பத்தி கொஞ்சம்............

**ஜீவன்:**—சொல்றத்துக்கு என்னு தம்பி இருக்கு. அந்த வயித்தெரிச்சலே நெனைச்சா....அந்தக்காலத்துலே

தேயிலைத் தோட்டக் கங்காணி—நம்ப
சின்னயி புருஷனும் நொண்டி சப்பாணி
வாயிலே வந்த பொய்யைச் சொல்லி—ஏற்றிச்
சென்றனும் இலங்கைக்கு மக்களைத் தோணி............

ஈயும் கொசுவும் கடிக்க—மக்கள்
என்றும் குளிரில் நடுங்கித் துடிக்க
நாய்போல துரைகள் கடிக்க....அந்த

நயவஞ்சகங் கண்டு கண்ணீர்வடிக்க........
ஆயிரங்கோடி வந்தாலும்—சொந்த
தாய்நாடுபோல் பிற நாடாகுமாமோ
நாயிலும் கேடான வாழ்வு—வாழ
நம் தமிழ் நாட்டார் கடல் தாண்டலாமோ ?

**ஒருவன்:**—கடல்தாண்டிப் போயி வாழக் கூடாதுதாந் தம்பி. போயிட்டபொறவு இப்ப திடீருண்ணு எப்புடி வரச் சொல்லுறது ? அங்கே இருக்கிறவங்க நெலமையா வது நல்லாருக்கா ?

**ஜீவன்:**—நல்லாருக்காண்ணு கேக்குறே? 'தாய்நாடு தாய் நாடு'ண்ணு கத்துருங்க. ஆன அப்புடிப்பட்ட தாய் நாட்டுக்குப் போங்கோண்ணு அடிச்சி வெரட்டின லும் வரத்துணியமாட்டேங்குருங்க. இங்குள்ள நெலம அப்புடிப்பயங்கரமாகத் தோணுது அவுங்களுக்கு.

**முதல்வன்:**—இந்தப் பாவி மவன் சீமையிலே பஞ்சமும் அப்புடித்தானே தம்பி இருக்கு.

**ஜீவன்:**—இந்தா, அப்புடி லேசாச்சொல்லிப்புடாதே. இவுங் களெல்லாம் இலங்கையிலே ராஜாங்கமா நடத்து ருங்க ?—நாய்படாத பாடுபட்டு உழைக்கிருங்க. தங்கம் வெளையிற நெலங்களெல்லாம் இங்கே தரிசாகக்கெடக் குது.

**(பாட்டு)—புதுப்பெண்ணின் (மெட்டு)**

விஸா கெடைக்காம கஷ்டப்பட்டு வந்தவங்க
சொந்த நாட்டின் வளம பெருக்கித்தாங்க—கள்ளத்
தோணி ஏறிப் போகாதீங்க (விஸா)

தங்கம் விளையும் வயல்கள் இங்கே—தரிசாகக் கிடக்கை
யில்
லங்கைக் காட்டினிலே—நடுக்குங்குளிரினிலே
அங்கம் புண்ணுகி வளம் பொங்க உழைத்துமே
சிங்கள மக்கள், சிலர்—செய் நன்றி
மறந்ததனுல்...... (விஸா)

(கரகோஷத்திடையே திரைவிழுகிறது)

## காட்சி 40 தர்மலிங்கம்வீடு

(சாப்பாட்டுக்குப்பின் தர்மலிங்கமும் அருணுசலமும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். சுப்பு வெற்றிலைமடித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிருன்.)

**தர்மலிங்கம்:**—டேய் சுப்பு, நம்ப கடையிலே பங்காளியா சேர்ந்ததுலேருந்து நம்ப அருணுசலம் அண்ணுச்சியோட மதிப்பு எவ்வளவு ஒசந்துட்டுது பாத்தியாடா ? எது ?

**சுப்பு:**—நல்லா சொன்னீங்க. ரிக்ஷா வண்டி மொதலாளிய பத்தித்தாங்க எல்லாரும் பேசுருங்க.

**தர்மலி:**—போடா உலக்கையன். அண்ணுச்சிய இந்த வருஷம் முனிசிப்பல் எலக்‌ஷனுக்கு நிறுத்தப்போரேண்டா. எது ?

**சுப்பு:**—ஒரு ஓட்டுக்கூட விழாதுங்க.

**தர்மலி:**—அடச் சீ, உலக்கையன். யாருக்கடா ஒரு ஓட்டுக் கூட விழாது ?

**சுப்பு:**—எதிரிக்கிங்க.

**அருணு:**—ஆமாமா. எல்லோரும் அப்படித்தாஞ் சொல்ரு. ஆனு, எனக்குத்தான் இப்ப என்னத்துக்குண்ணு

தோணுது........எல்லாம் நம்ம சந்திரனுக்குக் கல்யா ணத்த முடிச்சிப் பார்த்துட்டுத்தான்...........(இருமல்) உம்ம். அதுமட்டும் இந்தப் பாவிப்பயமவன் வியாதி என்ன செய்யுதோ....(இருமல்)

**தர்மலி:**—அதெல்லாம் ஒண்ணும் செய்யாது அண்ணுச்சி.... நம்ப பார்வதியும் சந்திரனும் எந்த நேரமும் பிரியாம அன்பா இருக்காங்க....ஹீ....ஹீ....ஹீ....

**அருணு:**—எப்பவும் பிரியாம இருக்கப்போறவங்கதானே. (இருமல்)

**தர்மலி:**—ஹீ....ஹீ....நம்ப பார்வதி பேச்சும், அழகும்....

**சுப்பு:**—ரொம்பக் கருத்திருக்குதுங்க.

**தர்மலி:**—முட்டாள்....உலக்கையன். யாருடா கருத்திருக்கா?

**சுப்பு:**—நம்ப குழந்தையோட பேச்சப்பத்திச் சொன்னீங்களே, அதுலே ரொம்ப கருத்திருக்குதுண்ணு சொன்னேங்க.

**தர்மலி:**—ஹஹ்ஹஹ்ஹாஹா....அவ மகா புத்திசாலியில்லே ....அப்போ ஆறுமுகம் அண்ணுச்சி, எப்போ கல்யாணத்த வச்சிக்கிறதா உத்தேசம் ?........தங்கத்த எப்போ வரவழைக்கிறது?

**சுப்பு:**—அது என்னுத்துக்குங்க தங்கம். இருக்கிற நகையே அம்மாவும் ஐயாவும் சேர்ந்து மாட்டிக்கிட்டாலும் குறையாதே.

**தர்மலி:**—ஹஹ்ஹஹ்ஹாஹா....நம்ப சந்திரனுடைய அம்மா தங்கத்தைச் சொன்னேன்டா.

**அருணு:**—அதுக்கென்ன, பிள்ளையாண்டானையும் ஒரு வார்த்தை கேட்டுட்டு நாள் குறிப்பிட்டுட்டாப் போச்சி(இருமல்)

**தர்மலி:**—கேக்குரத்துக்கு என்ன இருக்கு. பீ. ஏ. பரீட்சையும் எழுதியாச்சி. மறுக்கவா போருன். யாரு ?

**குரல்:**—கட்டாயம் மறுக்கத்தான் பேகிருன். [யாவரும் திடுக்கிட்டு நோக்குகிருர்கள்—குணசிங்கம் வருகிருன்]

**தர்ம:**—என்னப்பா, குணசிங்கம். விஷயம் விளங்காம நீ பாட்டுக்கு உளறிவைக்கிரே? எது ?

**குணசி:**—விஷயம் நல்லா வெளங்கித்தான் சொல்ரேன். உங்க ரெண்டு பேருக்கும் தான் சந்திரன் டிமிக்கி கொடுக்கலாம். என்னிடம் பலிக்காது.

**அருணு:**—என்னப்பா டிமிக்கி—ஜிமிக்கிண்ணு பயங்காட்ரே? அது என் சந்திரனில்லே.

**குணசி:**—வாஸ்தவந்தான். உங்க சந்திரனில்லேதான் மெனிக்கா சந்திரன்.

**தர்மலி:**—என்ன சந்திரன்?—புளியங்கா சந்திரனு?

**குணசி:**—நான் சொல்றேண்ணு வருத்தப்படாதீங்க. அந்தப் பெண்ணு பார்வதி பாவம் சந்திரன், சந்திரன்னு சந்தியா வந்தனம் பண்ணிட்டிருக்கே, நீங்க ரெண்டுபேரும் வேர பெரிய பெரிய எண்ண மெல்லாம் எண்ணிக்கிட்டிருக்கீங்களேன்னுதான் சொல்ல வந்தேன். இல்லாட்டா யாரு எப்படிப் போனு எனக் கென்ன ?

**அருணு:**—கொஞ்சம் வெவரமாத்தான் சொல்லேம்பா. (இருமல)

**குணசி:**—மேஜிஸ்டிரேட் பியதாஸ—அவருதான் உங்க மாமா—அவரு மகள் மெனிக்காவும் உங்க சந்திரனும் மதருஸ்லேயே கிளாஸ்மேட். எங்கப்பா அங்கே வியாபாரம் செய்றதுனலே எங்கசகூடவேத்தான் இருந்து

படிச்சிது. நானுந்தான் கிளாஸ்மெட். ஆனு அவுங்க ரெண்டு பேரும் எத்தனையோ படி மேலே போயிட்டாங்க....

**சுப்பு:**—இவுரு ஏறமாட்டாம கீழ்ப்படியிலேயே நிக்கிருரு.

**தர்மலி:**— நீ சும்மாருடா, உலக்கையன். உம்ம்.... அப்புறம்? அப்புறம்?....

**குணசி:**—ரெண்டு பேரும் மதருஸ்லே வச்சே கல்யாணம் செய்துக்கிறதாக சத்தியம் கித்தியமெல்லாம் பண்ணியிருக்காங்க. சந்திரன் தாயையும், உடனே திரும்பி வர்ரதாக தாய்க்குக் கொடுத்த வாக்கையும் மறந்துட்டு இங்கே படிக்கச் சம்மதித்ததே அந்தக் குட்டிக்காகத்தான்.

**அருணு:**—என்னுலே நம்பவே முடியல்லே....என் சந்திரனுவது....(இருமல்)

**குணசி:**—நான் என்ன சொன்னுலும் நீங்க நம்பப் போரதே. இல்லே....(கார்சப்தம் கேட்டது.)

**தர்மலி:**—ஏன், சந்திரனையே கேட்டுப் பாத்துட்டாப் போவுது.

[சந்திரன் வருகிருன்—குணசிங்கம் நழுவப்பார்க்கிருன்]

**குணசி :**—அப்போ நான் வரட்டுமா ?

**சந்திரன் :**—என்ன மிஸ்டர் குணசிங்கம், அதுக்குள்ளே கிளம்பிட்டீங்க?

**குணசி :**—எக்ஸ்யூஸ் மி மிஸ்டர் சந்திரன். கொஞ்சம் வேலையிருக்கு. (போகிருன்)

**அருணு:**—சந்திரன், அம்மாவுக்கு ஒரு தந்தி கொடுத்து ரெடியா இருக்கச் சொல்லு, நம்ப விஸாவுக்கு எல்லா

ரெக்காட்டையும் தயார் பண்ணு. (இருமல்) ஒரு வாரத்துக்குள்ளே நாம்ப போயி அவளெ அழைச்சிட்டு வந்துடணும்.

**சந்தி:**—என்னப்பா அவ்வளவு அவசரம்?

**அருணு:**—அவசரமில்லையா பின்னே? கல்யாணத்திற்கு நாளெல்லாம் குறிப்பிட்டாச்சி.

**சந்தி:**—கல்யாணமா?....யாருக்கப்பா?

**சுப்பு.**—என்னுங்க, இப்படிக் கேக்குறீங்க? இந்த வூட்டுலே கல்யாண வயசுலே பார்வதியம்மாளையும் உங்களையும் தவிர வேர (தன் வழுக்கைத்தலையைத் தடவிக்கெண்டு) நானு இருக்கேன்?

**சந்தி.**—அப்பா....

**அருணு.**—அவன் சொல்ரது சரிதாம்பா. இனிமே நானும் பிள்ளைவாளும் ரிடயர் ஆகவேண்டியதுதான். (இருமல்) நீயும் பார்வதியும்தான் கடய நடத்தணும் (இருமல்)

**சந்தி.**—அதுக்கு இப்ப என்னப்பா அவசரம்?

**அருணு.**—(இருமல்) எதையும் காலாகாலத்துலேசெய்துட்டாத் தாம்பா நல்லது. பாரு, காலி ஜிம்கானு பிரைஸ் ரெண்டு லெச்சத்தயும் சொச்சத்தையும் கடையிலே போடப் போயித்தான் இப்ப மொதலும் நயமுமா வளந்துக்கிட்டே போவுது. (இருமல்) கையிலே வச்சிக்கிட்டிருந்தா?........எவனுவது காடப் பசங்களில்லே அடிச்சிட்டுப் போயிருப்பான். (இருமல்) சுப்பு, தந்தி 'போம்' ஒண்ணு கொண்டுவா.

**சந்தி.**....அவசரப்படாதீங்கப்பா. முதல்லே என்னோட ஒரு தடவை ஊருக்கு வந்துட்டுத் திரும்புங்க. அந்த தூர

திஷ்ட ஜென்மம் அழுத கண்ணும், சிந்திய மூக்குமாக இருக்கிருள்....நான் 'லா' படிக்கத் தீர்மானிச்சிருக்கேன் அப்புறம் பார்க்கலாம் கல்யாணத்தை.

**தர்மலி:**—லா காலேஜிலே கல்யாணத்துக்குப் பொரவு சேரக்கூடாதுண்ணு சட்டம் போட்டிருக்கா, என்ன? எது?

**சந்திரன்:**—(மௌனம்-பார்வதி யாவற்றையும் மேடையிலிருந்து கவனிக்கிருள்.)

**அருணு:**—அதெல்லாம் சரிப்படாது. சந்திரன், கல்யாணத்தை இந்த மாதக் கடேசிலே நடத்திட்டு அப்புறம் தாராளமா (இருமல்) லா காலேஜிலே சேர்ந்து படி,

**சந்திரன்:**—அப்பா!......

**அருணு:**—எல்லாம் எனக்குத் தெரியும்டா...சொர்ண விக்ரஹம் மாதிரி நம்ப பார்வதி இரவுபகலா பணிவிடை செய்யுது. (இருமல்) என்னமோ மெனிக்காவையும் போணிக்காவையும் சுத்திக்கிட்டு அலையருணுமில்லே,—சிங்களக் குட்டிய....

**சந்திரன்:**—(விஷயம் விளங்கி விட்டது கண்டு) அப்பா! நீங்க அனுவசியமாக மனஸ்தாபத்தை உண்டுபண்ரீங்க.

**அருணு:**—என்னடா பூச்சாண்டி காட்டுரே! (இருமல்) நான் சொல்றபடி நடந்துதான் ஆகணும்.

**சந்திரன்:**—எனக்கும் விருப்பு-வெறுப்பு உண்டு என்பதை...

**அருணு:**—....உணராதவனில்லே நான். ஆனுல் விருப்பு-வெறுப்பு மட்டும் இருந்துட்டாப் போதாது. (இருமல்) நல்லது கெட்டதை அறிய புத்தியும் வேணும்.

**சந்திரன்:**—அதுக்காகத்தானே படிக்க வச்சீங்க.

**அருணு:**—ஆமாடா, சந்திரன். உனக்குத்தெரியாதா?(இருமல்) இன்னிக்கி இருக்கிற பணவசதியிலே படிக்க வச்சி ருந்தாலும் பிரமாதமில்லே. ஆனு, நெஞ்சொடிய ரிக்ஷா இழுத்து, கூலிப் பெட்டி சுமந்து, அரப்பட்டினி கெடந்து, பணம் அனுப்பிச்சி படிக்க வச்சேண்டா. அதுக்கெல்லாம் பலனை எதிர்பாராமலா இருந்திருப்பேன்? (இருமல்)

**சந்திரன்:**—பலனை எதிர்பார்க்க உங்களுக்குப் பரிபூரண உரிமையுண்டு. ஆனுல் இவ்வளவு தியாகமும் செய்து எந்த மகனைப் படிக்கவைத்து இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தீர்களோ அந்த மகனின் ஜீவமரணப் பிரச்சினையில் தலையிட்டு அவன் வாழ்வையே குட்டிச் சுவாராக்கி விடுவதில்தானு நீங்கள் பலனை எதிர் பார்க்க வேண்டும்?

**அருணு:**—(இருமல்) என் தியாகமெல்லாம் தெரிஞ்ச நீ தானுடா சந்திரன் இப்புடிப் பேசுரே? (சந்திரன் மௌனம்) பார்வதி நம்ப பிள்ளைவாளின் ஒரே மகள். இந்தக் கடையின் சமபங்காளி (இருமல்) படிப்பிலும் அழகிலும், அந்தஸ்த்திலும் ஒனக்கு சரியான ஜோடி (இருமல்) ஒம்மேலே உசுரையே வச்சிருக்கு.

**சந்திரன்:**—இருக்கலாம். ஆனுல் என்மனமும் அவளை அப் படியே விரும்ப வேண்டுமே?

**அருணு:**—(திடுக்கிட்டு) என்னசொன்னே அப்படீண்ணு நீ இத்தனைநாளும் அவகூட நெஞ்சிலே நஞ்சக் கட்டிக்கிட்டுத்தானு பழகினே? (இருமல்) பாவி!

**சந்திரன்:**—பழகினேன். நெருங்கிப்பழகினேன். அன்புடன், ஆசையுடன், நன்றியுடன் பழகினேன் — காதலனைப்

போலல்ல, சகோதரனைப்போல. கல்யாணம் செய்து கொள்ள மட்டும்தானு ஓர் ஆண் ஒரு பெண்ணுடன் பழகலாம்?-அன்பு காட்டலாம்? தங்கையென் றெண்ணி, தாய் என்றெண்ணி, சகோதரி என் றெண்ணி, சிநேகிதி என்றெண்ணி, மனிதப் பிறவி என்றெண்ணி பழகுவதும் அன்பு காட்டுவதும் குற்ற மா? பாபமா? தம்பி, தங்கையோடு பிறக்காத நான் என் சகோதர பாசத்தையெல்லாம் பார்வதிமேல் கொட்டினேன்—என் சொந்த தங்கையென்றெண்ணி. அதன் பலன் இப்படியா ஆகவேண்டும்.

**தர்மலி:**—அது தான் படிச்சபிள்ளைக்கு அழகு. கலியாணம் ஆகுரத்துக்கு முன்னே எந்தப் பொண்ணையும் தங் கைண்ணுதான் நினைக்கணும். அதுக்காக கலியாணம் செய்து கொள்ளக் கூடாதுண்ணு அர்த்தம்? எது?

**அருணு:**—நீங்க சும்மா இருங்க புள்ளே (இருமல்) ஒண் ணும் யோசிக்காதீங்க. பார்வதி-சந்திரன் கல்யாணம் நடக்கத்தாம் போகுது. அதுவும் இந்த மாசக்கடேசி லேயே நடக்கப் போவுது.

**சந்தி:**—இந்த ஒரு விஷயத்துலே மட்டும் உங்க எண்ணம் நடக்காது.

**அருணு:**—ஹூம். அருணுசலம் நெனச்சது அடுத்த நிமிஷமே நடுந்திடுண்டா. (இருமல்)

**சந்தி:**—அது வேறு விஷயத்திலே இருக்கலாம்........

**அருணு:**—அயோக்ய நாயே. அதிகப் பெரசங்கமா பண்ரே! (இருமல்) எனக்குக் கோபம் வந்தா.....

**[இருமிக்கொண்டே எழுந்து நின்று தடாரென்று கீழே சாய்கிறுன். அப்பா என்றலறுகிறுன் சந்திரன். தூக்**

கிக் கொண்டுபோய் கட்டிலில் கடத்துகிருர்கள். டாக்டருக்கு ஆள் அனுப்பப்படுகிறது.]

## காட்சி 41 தர்மலிங்கம் வீட்டு மாடி

**குணசிங்கம்:**—அருணுசலம் பொளேக்க மாட்டான். க்ஷய ரோகம் கொன்னுடும். சரியான சந்தர்ப்பம். நீங்க மட்டும் கொஞ்சம் சாமர்த்தியமா காரியம் நடத்தினீங் கண்ணு, அருணுசலம் பணத்திற்கு அரோகராத்தான்!

**தர்மலி:**—பணம் இருக்கட்டும் தம்பி, நம்ப பார்வதி அந்தப் பய ஞாபகமாகவே இருக்கு. ஆளாணுயோக்கியமும், அந்தஸ்தும் உள்ளவன்தான் எது?........ஆனு மொரட்டுப் பய. ஒரே பிடிவாதமா அந்த மெனிக்காவைத்தான் கல்யாணம் செய்வேனுண்ணு ஒத்தக்காலுலே நிக்கிருன்.......ஆமா, பய சரிப்பட்டு வராட்டா சொத்தையும் முல்ல பாகம் பிரிச்சிக்கொடுக்கணும்.

**குணசி:**—கழுதே பிரிச்சி எடுத்துக்கிட்டுப் போகட்டுமே.

**தர்மலி:**—அப்புடி லேசா சொல்லிடப் புடாது. குடியிலேயும், ரேஸிலேயும் நான் தொலேச்சது போக என் கணக்குலே மண்ணுங்கட்டியாயிருக்கப் போவுது? எது? பயலும் போயி—பணமும் போயிடுமே!....எது போயிடும்?

**குணசி:**—ஒண்ணும் போகாது. ஒரு திட்டம் போட்டுத்தரேன். அப்புடியே அமுல் நடத்தினீங்கண்ணு, பணமும் போகாது, பயலும் போகமாட்டான்.

**தர்மலி:**—(அலட்சியமாக) என்னு அது?

**குணசி:**—கணக்க ஒரு மாதிரியா சோடிக்கணும்.

**சுப்பு:**—கலர் கடுதாசி வாங்கிட்டு வரட்டுங்களா?

**தர்மலி:**—பேசாமலிருடா, உலக்கையன்....எப்புடி சோடிக் கணும்?

**குணசி:**—....உங்க பற்றெல்லாம் அருணுசலம் பேருக்கு மாற்றணும்—அவ்வளவுதான். ஸிம்பிள் மேட்டர். அவன் கணக்குலே மொத்தத்திலே அதிகப் பற்று காட்டணும்...

**தர்மலி:**—அருணுசலம் காட்டிக் கொடுத்துட்டா?

**குணசி:**—எமன்கிட்டேயா! அவன்தான் சாகப் போருனே.

**தர்மலி:**—பலே. சரியான யோசனே. ஆமா, பய எப்புடி....

**குணசி:**—'நமக்குக் கிடைப்பான்' என்று கேட்கிறீங்களா? கடனேத்தீர்க்க அவனிடம் பணம் ஏது? இருக்கா?

**தர்மலி:**—இல்லே.

**குணசி:**—கடன் தீரும் மட்டும் நம்ப கடையிலே சம்பளத்துக்கு வேலே பார்க்கட்டும். அவ்வளவு நாளேக்குள்ளே பய நாடி தன்னுலே அசந்திடும். அசர வச்சிடலாம்.

**தர்மலி:**—ஹஹ்ஹாஹா....குணசிங்கம், நீ தான் என் அந்தரங்கக் காரியதரிசி. எந்தரங்க?

**குணசி:**—பாண்டுரங்க.

**தர்மலி:**—சுப்பு........டேய், உலக்கையன், — குணசிங்கத்திற்கு மோர்கொடுடா. என்னமோர்?

**சுப்பு:**—என்ன மோருங்க?

**குணசி:**—(சுப்பு விடம்) அதுதாம்பா ஒண்ஸ்மோர்.

[எல்லோரும் சிரிக்கிருர்கள்]

## காட்சி 42 தர்மலிங்கம் வீடு

**அருணுசலம்:**—(மரணப்படுக்கையில்—சந்திரனின் முகத்

தைத் தடவிக்கொண்டே இருமல் முனகலுடன் பேசு கிறான்.) உன்னைப்போல் சோதி வீசக்கூடிய சந்திரன் கெடச்சிருந்தும் என் மன இருட்டு நீங்காமல் போ யிட்டுதே........அந்த மாசு மறுவில்லாத தங்கத்துக்குச் செய்த துரோகந்தான் இப்புடிப் பாடாபடுத்து துப்பா........நீ என்னை மன்னிச்சிடுவே........உங்கம்மா வாலே மன்னிக்க முடியாத துரோகம் நான் அவளுக்கு செய்துட்டேன்........அந்தத்துரோகி பேச்சி முத்துக் கங்காணியோட பேச்ச நம்பி 24 வருஷமா என் தங் கத்தோட வாழ்க்கய குட்டிச் சுவராக்கிட்டேன்...... வாளப்பொறந்தவ வாடிவசங்குரு அக்கரச்சீமையிலே... குருடன்கூட பொண்டாட்டி நீட்டுர கம்பப்புடிச்சிக் கிட்டு பிரியாம வாளுறான்.......பிச்சக்காரன் ஊர் ஊராத்திரிஞ்சாலும் பொண்டாட்டி புள்ளையோட திரி யிறான்.......இந்தப்பாவி—கடல்கடந்த துரோகியோட கடேசிமூச்சி இப்புடிக் கலக்குது...இனி இந்தச் சண்டாளன் அந்த பத்தர மாத்துத் தங்கத்தோட மொகத்தப்பாக்கவே மா ட் டா ன்... பாக்...க...வே... மாட்....

[தலைசாய்ந்து உருளுகிறது—அலறுகிறான் சந்திரன்]

## காட்சி 43 ஆலங்குடி-அருணாசலம் வீடு

(தங்கம் வழக்கம்போல் அருணாசலம் படத்திற்கு பூஜை செய்துவிட்டு சந்திரனின் படத்தின்முன் நின்று பேசு கிறாள்.)

**தங்கம்:**—நான் மகாபாவிடா ராமச்சந்திரா. உங்கப்பாவுக்கு எம்மேல அன்பு இருக்கும்போது வந்து பாத்துட்டுப்

போக பணமில்லே. இப்போ பணம் இருக்கும்போது என் எண்ணமேயில்லே. நான்குடுத்துவச்சது அவ்வளவுதான்............ராமச்சந்திரா, நீகூட மறந்திட்டியா இந்தப்பாவிய.......

**ஜீவன்:** —(வந்துகொண்டே) பெரியம்மா.

**தங்கம்:**—(கண்களைத் துடைத்துக்கொண்டே) வாடாப்பா சீவன்! (கட்டிலில் இருவரும் அமர்கிறார்கள்.) உன் மொகத்தப் பாக்கும்போதெல்லாம் என் ராமச்சந்திரனோட மொகத்தப் பாக்குறாப்போல இருக்கு.......நீ மட்டும் இப்புடி அடிக்கடிவந்து என்னைக் கவனிக்கலேண்ணா........

**ஜீவன்** :—என்ன பெரியம்மா, இப்புடியெல்லாம் பேசுகிறீங்க, எங்கம்மா வேர நீங்கவேரயா? சொந்த தம்பி மாதிரி என்னைக்கவனிச்சவன் சந்திரன். அவன் ஊரில்லாதபோது உங்களைக் கவனிக்கிறபொறுப்பு எனக்கில்லையா ?

**தங்கம்** :—மாராசனா இருடாப்பா......ஆமா, இப்ப நீ என்ன தொழிலு செய்யுரே?

**ஜீவன்** :—நாடகக் கம்பெனிவச்சி நடத்துரேன், பெரியம்மா.

**தங்கம்** :—நாடகமா ?

**ஜீவன்** :—ஆமா. சினிமாவுல சேர எம்புட்டோ பாடுபட்டேன். அங்கேயெல்லாம் காக்கா புடிக்கிறவங்களுக்குத்தானே இடம். என்னைப்போல உள்ள குணச்சித்திர நடிகர்களெல்லாம் அவுங்களுக்குப் புடிக்குமா ? பழிவாங்க நாடகக்கம்பெனியே ஆரம்பிச்சுட்டேன்.

**தங்கம்** :—அதெல்லாம் நம்பளுக்கு என்னத்துக்கப்பா, கூத்தாடித் தொழிலு.

ஜீவன் :—அந்தக்கலேயின் பெருமை உங்களுக்குத் தெரியாது பெரியம்மா. மதருஸ்லே எங்க நாடகக்கம்பெனியோட நாடகம் நடக்கும்போது ஸினிமாக் கொட்டகையெல்லாம் தூங்கித்தான்விழும்.

தங்கம் :—சகுந்தல—துஷ்யந்தன் நாடகம் போடுவியாக்கும்........

ஜீவன் :—ஐய்யே. போயும் போயும் அந்த ஜகஜ்ஜாலப் புரட்டன் கதையையா இந்தக்காலத்துலே நடிக்கிறது! சகுந்தலேயைக் காதலித்தான்—கந்தர்வ விவாகம்செய்தான் — கர்ப்பிணியுமாக்கினுன் — கடேசியிலே கம்பியே நீட்டிட்டான். தேடிப்புடிச்சி அந்தப்பொண்ணு போனு, 'உன்னே நான் பார்த்ததே இல்லேயே'ங்கிருன் அந்த முழுப்பூசணிக்காக் கள்ளன்........

(இச்சமயம் வாசலில் தந்திச்சேவகன் கத்துகிருன். வாங்குவதற்காக வாசலுச்குச் செல்கிருர்கள்.)

தங்கம் :—(பதறிப்போய்) உடச்சிப்பாருடா, ராஜா !........பகவானே ! எல்லாம் நல்லசேதியாயிருக்கணும்........

(தந்தியை உடைத்துப் படித்த சீவன் கண்ணீர்வடிக்கிருன்)

தங்கம் :—(அலறித் துடித்து) ஏண்டா ராஜா, அழர்ரே?........ சொல்லுடா.......

ஜீவன் :—(கதறிக்கொண்டே) உங்க குங்குமம் அழிஞ்சிட்டுது, பெரியம்மா!

(வேரற்ற மரம்போல் சாய்கிருள் தங்கம்—அள்ளியெடுக்கிருன் ஜீவன்.)

## காட்சி 44 கொழும்பு—கடற்கரை

[தந்தையின் பிரிவால் துயருற்றிருக்கும் சந்திரனுக்கு ஆறுதல் கூறுகிருள் மெனிக்கா ...]

**மெனிக்கா:**—....உம்ம்...இவ்வளவும் நடந்திருக்காது, நீங்கள் என்னை மறந்துட்டு அப்பா சொன்னபடி பார்வதியை மணந்திருந்தால்...

**சந்தி:**—ஆமா, பார்வதி சாவித்திரி, அப்பாவைப் பிடிக்க வந்த எமனை கற்புக் கண்ணுலே சுட்டெரிச்சிருப்பா.

**மெனிக்கா:**—....இப்போ கனகலிங்கம் வற்புறுத்தினு?....

**சந்தி:**—வம்பு முற்றும்—பங்கு பிரித்துக் கொள்ளவேண்டி வரும்...இவரு தயார்.

**மெனிக்கா:**—என்னமோ சந்திரன், நன்ருக யோசித்துச் செய்யுங்கள். எல்லாம் இந்த அனியாயக் காரியால் தான் வந்தது என்று என்னை உலகம் பழிக்க விட்டு விடாதீர்கள்.

**சந்தி:**—இங்கேதான் உன் சுயநலம் தலைகாட்டுது. என்ன வந்தாலும் லட்சியத்தைக் கைவிடலாமா?

**[காலி ஜிம்கானு டிக்கட்விற்கும் பையன் பாடிக் கொண்டு வருகிருன்.]**

**பையன்:**—லாட்டிரீங்க லாட்டிரி — காலிஜிம்கானு லாட்டிரி
ரெண்டு ரூபாய்க்கி ரெண்டு லெச்சம் கொண்டு
வரும் லாட்டிரி (லாட்ரி)
கன்னமிட வந்தவனை—காலி ஜிம்கானு—கடைப்
பங்காளியாக்குமடி தங்கமே தங்கம்
(ரிக்ஷா) வண்டி இழுத்தவனை காலிஜிம்கானு—
லாட்டிரி
மண்டிக்கடை யேற்று மடி தங்கமே தங்கம்
(பள்ளியில்) குந்தியறியாதவனை காலிஜிம்கானு—
லாட்டிரி
மந்திரியுமாக்குமடி தங்கமே தங்கம்

(நடுச்) சந்திப் பிரசங்கியை காலிஜிம்கானு—
லாட்டிரி
தலைவனுய் மாற்றுமடி தங்கமே தங்கம்
லெச்சம் லெச்சம் பொன்தந்தாலும் தங்கமே தங்கம்—
உன்
லெச்சியத்தைக் கைவிடாதே தங்கமே தங்கம்
(பாடிக்கொண்டே போகிருன்.)

**சந்தி:**—எவ்வளவு உண்மை, என்னவந்தாலும் சரி. நாம் மட்டும் லட்சியத்தைக் கைவிடவே கூடாது. (மெனிக்காவின் கையைப் பிடித்துக்கொண்டு நடக்கிருன்.)

**காட்சி 45. தர்மலிங்கம் வீடு**

**தர்மலிங்கம்:**—....நானும் மயிலே மயிலே இறகு போடுண்ணு கேட்டுப்பார்த்துட்டேன். நீ மமதை காட்டுரே, எது? என் ஒரே பொண்ணு பிரியப்படுர புருஷனோட சந்தோஷமாயிருக்கணுமே, ஒங்கப்பனுக்கு கொடுத்த வாக்க காப்பாத்தணுமேன்னு வலிய வலிய கெஞ்சுரேன். யாரு?.......

**சந்தி:**—பெண்டாட்டி சொத்தாலேதான் பிழைக்கணும்னு நெனைக்கிர பேடியில்லே நான். ஒரு தடவை சொன்ன உயிர் போனலும் மாறப்போரதில்லே.

**சுப்பு**—...ஏமாறப் போரதில்லே...(கனகலிங்கம் அதட்டிப் பார்க்கிருர்) என், மாறப்போரதில்லேண்ணு கேக்குறேன்? பார்வதி அம்மாவுக்கு என்ன இல்லே? பணமா படிப்பா, அளகா, அந்தஸ்தா?

**தர்மலி:**—இந்தத் திமிர் புடிச்சவன் கூட இனி அஞ்சி நிமி

ஷங்கூட சரிப்பட்டு வராது. பிரிக்க வேண்டியதுதான் பாகத்த.

**சந்தி** :—விரிக்கச் சொல்லுங்க பேரேட்ட.

**தர்மலி** :—விரிக்கிறதுக்கு என்ன இருக்கு? அந்தக் குடி காரப்பய கணக்கை விரிச்சா சிரிக்கிறதுக்குத்தான் இருக்கு. எது?

**சந்தி** :—பிள்ளைவாள், அவரைப் பழிக்கவேண்டாம். மறு படியும் எச்சரிக்கிறேன்.

**குணசி** :—ரொம்ப ரோசக்காரருபுள்ளே போலிருக்கே!

**தர்மலி** :—மான மிருந்தா தூக்கி யெறியேண்டா ஒங்கப்பனு டைய அதிகப் பற்றுக்கடன் அய்யாயிரம் ரூபாய. எத?

**சந்தி**:—அடப்பாவிகளே, என் தந்தையா உங்களுக்குத்தர வேண்டும்? துரோகத்திற்கும் ஒரு எல்லையில்லையா?

**தர்மலி**:—சீ. பிச்சைக்கார நாயே. திருடவந்தவனைக் கூப் பிட்டு இரும்புப்பெட்டி சாவியைக் கையிலே கொடுத் ததுக்கா இந்த நன்றி! எது?

**சந்தி**:—(கண்கலங்கி) ஐயாயிரம் ரூபாய்! இரண்டரை லெட் சம் முதல்போட்டு உழைத்த பங்காளியின் பாகத்திற் குக் கடன் ஐயாயிரம் ரூபாய்! என்னிடம் பணம் இல்லையென்று தெரிந்துதானே இந்த நாடகம் ஆடுகி றீர்கள்?

**குணசி**:—பேரேடு பேசுதுப்பா, பேரேடு,

**தர்மலி**:—சந்திரன், பாகம் பிரிச்சாச்சி. கோபத்தக் கௌப் பாதே. எது?..... உம்ம்....என்ன முளிக்கிறே?

**சுப்பு**:—பொய்க்கணக்கு சோடிச்சி........மோசடி செஞ்சி— (திடுக்கிட்டு விழிக்கிறார்கள் தர்மலிங்கமும் குணசிங்க

மும்)........அப்புடீண்ணு நெனச்சி முளிக்கிறுரா இவரு?

**சந்தி:**—பணம்!........ஹூம்........அதுவும் ஐயாயிரம்!........ நான் என்ன செய்வேன்?

**தர்மலி:**—அப்பனப்போல கன்னம் வைப்பே, பிடிபடுவே ஜெயிலுக்குப்போவே.......

**குணசி:**—........ஆனு காலி ஜிம்கானு மட்டும் அடிக்காது, இந்தத்தடவை!

**தர்மலி:**—(சந்திரன் மௌனம் சாதிப்பதுகண்டு) என்ன சொல்றே?

**சந்தி:**—எங்கேயாவது வேலேசெய்து மாதாமாதம்...

**தர்மலி:**—அடாடாடா........உலக்கையன். இவுரு எங்கேயாவது வேலேசெய்து தருவாருண்ணு, கையில இருக்கிற வெண்ணேய விட்டுட்டு நெய்க்கு அழுர்ர முட்டாளில்லேப்பா நான். யாரு?.... அப்புறம் உன்னே இந்தியாவுலேல்ல தேடணும். எங்கே?

**குணசி:**—ஏன். அப்புடி உங்களுக்கு சந்தேகமிருந்தா உங்க கடையிலேயே வேலேசெய்து கடனேக் கழிச்சிட்டுப் போரான். அவனும் படிச்சவன். பாக்கிர ஜனங்களுக்கும் ஒண்ணும் வித்தியாசமா தோணுது........

**சந்திரன்:**—(கண்ணீரைக் கஷ்டப்பட்டு அடக்குகிருன். முகம் சிவக்கிறது.)

**தர்மலி:**—உம்ம்.......வேறென்னசெய்ய. அப்புடித்தான் செய்து தொலேக்கணும். ஆரஞ்சிப்பழம் மாதிரி ஐயாயிரம்முல்ல........போ. ஒழுங்கா உக்காந்து அந்த ரெண்டாம் நம்பர் கணக்க எழுது........உம்ம்....அதவிட முக்

கியம் நம்ப பார்வதிக்கு கொஞ்சம் டியூஷன் சொல்லிக்கொடு, எது ?

(கண்ணீருடன் போகிறுன் சந்திரன். கண்ணடிக்கிறுன் குணசிங்கம்.)

## காட்சி 46 ஆலங்குடி-அருணுசலம் வீடு

[தங்கம் கட்டிலில் படுத்திருக்கிருள்——கம்பளியால் மூடிக்கொண்டு. பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறுன் ஜீவன்.]

**தங்கம்:—**........இனிமே நான் பொளேக்க மாட்டேம்பா, சீவன். என் கண்மணிய ஒருதடவை பாத்துட்டாவது சாகிரேன்.......உம்ம்........ஒடனே வரச்சொல்லி தந்தியடிச்சிடுப்பா........அந்தப் பிசாசுப்பய சீமயிலே என் தங்கம் இனும ஒருநிமிசங்கூட இருக்கக்கூடாது........ அவனேப்பாத்துட்டுச் சாகாட்டா எம் பொணங்கூட வேகாது.......

**ஜீவன்:—**சும்மா அலட்டாதீங்க பெரியம்மா. உங்களுக்கு ஒண்ணும் செய்யாது. டாக்டர் நல்ல மருந்தா கொடுத்திருக்காரு. எதுக்கும் உங்க இஷ்டப்படி சந்திரனுக்கு உடனே புறப்பட்டு வாண்ணு தந்தியனுப்பிச்சுடுரேன்....இந்தாங்க. நீங்க மொதல்லே இந்த மருந்தக் குடிங்க. (மருந்தை ஊற்றிக் கொடுக்கிறுன்.)

**தங்கம்:—**இந்தப் பாவிக்கு இனி எந்த மருந்தும் பிரயோசனமில்லேப்பா. என் ராமச்சந்திரன்தாம்பா எனக்கு மருந்து. அவன பாக்கத்தான் இந்தப் பாவியோட மூச்சு இன்னும் இழுத்துக்கிட்டுக் கெடக்குது....

## காட்சி 47 — தர்மலிங்கம் வீடு

[சந்திரன் கணக்குகளைப் பதிந்து கொண்டிருக்கிறன். வேலைக்காரி பொடிநோனு வருகிருள்.]

**பொடி:**—மே...மே...

**சந்தி:**—மே. மே. மேயில்லே. ஜூன் ஜூலை ஆகஸ்ட்.... என்ன விஷயம்? சொல்லித் தொலையேன். சிங்களமும்....நீயும்—நானும்.

**பொடி:**—(சிரிக்கிருள்) முதலாழி கூப்புடான்.

**சந்தி:**—ஹொந்தாய். தொலிலாலி வர்ரான்....(இருவரும் சிரித்துக்கொண்டே போகிருர்கள். பெரிய ஹாலில் தர்மலிங்கம், குணசிங்கம், முத்தையா மூவரும் காரசாரமாகப் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.)

**தர்மலி:**—ஏண்டா, குறும்பு ஏறுதோ! எது? என்னமோ கள்ளக்கணக்கு வெள்ளக் கணக்குண்ணு அதிகப் பெரசங்கித்தனம் பண்றியாம். வேலக்காரப் பசங்களையெல்லாம் 8 மணி நேரத்துக்கு அதிகமா வேல செய்ய மாட்டோமுண்ணு லேபரு சட்டம் பேசச் சொல்றியாம், எது?

**சந்தி:**—அவர்களுடைய உரிமையைத்தான் கேட்கச் சொன்னேன்......

**தர்மலி:**—அடச்சீ, உலக்கையன், உரிமையாம், உரிமை. சல்லியோட அருமை தெரியாத பயலுக. உங்களுக்கு என்னடா உரிமையிருக்கு உரிமை பேச? எது? சமையல்காரனைக் கூடவா வெரட்டி அடிக்கணும்!

**சந்தி:**—சாதமெல்லாம் பொடிக்கல்லாயிருக்குதுன்னு....

**தர்மலி:**—சொல்லுவே. சொல்லுவே. உன் அந்தஸ்துக்கு சாப்பாட்டுல பொடிக்கல்லு இல்லாம ரத்தினக் கல்லா கெடக்கும்? எது?....கணக்கக் கூட எழுதமாட்டாரா முல்ல. இவரு!

**குணசிங்:**—ஏம்பா, சந்திரன். ஏதோ நம்ப கூட ஒண்ணுப் படிச்சவனுச்சே, சொந்த நாட்டுல பிழைக்க மதியில்லாம நம்ப நாட்டுல வந்து கஷ்டப் படுருனேண்ணு, தர்மலிங்கம் ஐயா கிட்டக் கெஞ்சி உன்னே வேலேக்கு சேர்த்துவச்சா....நீ நம்ப பேரய்யே கெடுத்துடுவே போலிருக்கே! வெரி ஸொரி. இதாப்பா படிச்சவனுக்கு லெச்சனம்?

**சந்தி:**—குணசிங்கம், நீயும் படித்தவனுச்சே. நீயே சொல்லு எந்த நாட்டிலே பிறந்து, வளர்ந்து, சம்பாதிக்கிருயோ அந்த நாட்டு சர்க்காரையே ஏமாற்ற கள்ளக் கணக்கு தயாரிக்கலாமா? இதற்கு நான் எப்படி உடந்தையாயிருக்க முடியும்?

**குண சிங்:**—ஹஹ்ஹா ஹாஹா....டர்ட்டி பொலிடிக்ஸ்!....சர்க்காருக்கும் சனங்களுக்கும் என்னப்பா சம்பந்தம்?

**சந்தி:**—சர்க்காரை ஏமாற்றுவதும் சனங்களே ஏமாற்றுவதும் ஒன்றுதானே.

**குண சிங்:**—அப்படியே வைத்துக் கொண்டாலும் எங்க நாட்டு ஜனங்களேத்தானே நாங்க ஏமாற்றுரேம். இதுலே உனக்கென்னப்பா நஷ்டம்?

**சந்தி:**—எதுவரை நான் இந்த நாட்டில் தங்கியிருக்கிறேனே அதுவரை இதுவே என் நாடு. (எல்லாவற்றையும் மாடியிலிருந்து கவனிக்கிருள் பார்வதி.)

**தர்மலி:**—பெரிய யோக்கியரு மகண்டாப்பா, இவுரு, உங்கப்பன் எங்கடையிலே கன்னமிட வந்தானே, அதுக்கு என்ன பேரு? எதுக்கு?

**சுப்பு:**—(வந்துகொண்டே) சந்திரன் ஐயாவுக்கு தந்தி வந்திருக்குதுங்க.

**தர்மலி:**—என்ன எழவு தந்திப்பா அது ?

[**சந்திரன் தந்தியைப் படித்துவிட்டு 'அம்மா' என்று கதறுகிறான்.**]

**குணசிங்:**—உம்ம்....இவன் யோக்கியதயப் பாக்கிறத்துக்கு மனம்மில்லாம அந்தக் கிழடும் மண்டயப் போட்டுட்டுது போலிருக்கு....

**சந்தி:**—(துடித்து—கண்ணீருடன்) அப்படிச் சொல்லாதே குணசிங்கம். உன் தாய் இப்படி அபாய நிலையிலிருந்தால் நீ இப்படிப் பேசுவாயா ?

**தர்மலி:**—அப்போ சாகல்லியா இன்னும் ? யாரு ?

**சந்தி:**—(விம்மிக்கொண்டே) ஐயா, கொஞ்சம் கருணை காட்டுங்க. அம்மாவுக்கு ரொம்ப ஆபத்தாம்.......உடனே வரும்படி....

**தர்மலி:**—....கனவிலேகூட நெனச்சிடாதே—கடன் தீர்ந்தாலொழிய. எது ?

**சந்தி:**—அப்பாவும் அக்காளும் போய்விட்டார்கள். அம்மாவையும் அப்பாவையும் பிரித்து வைத்திருந்த இலங்கைத் தீவிலேயே நானும் தங்கிவிட்டேன். அம்மா நிராதரவாகவிடப் பட்டுவிட்டாள். இப்பொழுது உயிருக்கே எமனுடன் மன்ருடிக் கொண்டிருக்கிருள். அவள் முகத்தில் விழித்து ஆத்மசாந்தியளிக்கவாவது கொஞ்சம் அனுமதியளியுங்கள். என் தந்தை தாய் நாட்டை

மறந்து கடல் கடந்த குற்றத்திற்காக மரணப்படுக்கையில் கிடந்து மன்றுடும் என் மாதாவின் ஆத்மாவை சித்திரவதை செய்யாதீர்கள்.

[கண்ணீர் வெள்ளம்—தர்மலிங்கம், குணசிங்கம் கண்களில் கூட]

**தர்மலி:**—...சந்திரன். நீ படித்தவன், ஆனுலும் விஷயத்தப் புரிஞ்சிக்கிட முடியலியே, எது?

**குணசிங்:**—இப்போதுகூட ஒருவார்த்தை சொல்லு—பார்வதியை கல்யாணம் செய்து கொள்ரதாக........

**தர்மலி:**—உடனே எல்லோருமே போய், உங்கம்மாவுக்கு வேண்டிய பணம் செலவு செய்து, சுகப்படுத்தி, இங்கேயே கூட்டிட்டு வந்துடலாம். என்ன?

**சந்திரன்:**—சமய சந்தர்ப்பம் தெரியாமல் நீங்கள் இப்படி ஏகத்தாளமாகப் பேசுவது சரியா? அங்கே என் தாய் பிணமாகிக் கொண்டிருக்கிருள்—இங்கே என் மணப் பேச்சைப் பேசுகிறீர்கள்! ஒரு காதில் சங்கோசை கேட்டுக் கொண்டிருக்கையில் மறுகாதில் ராஜமேளம் கொட்டுகிறீர்கள் !....எப்படியாவது ஒருமாதம் லீவு கொடுங்கள். என் அன்னையின் ஈமக்கடன்களையாவது முடித்துவிட்டு வந்துவிடுகிறேன். (அழுகையை அடக்கிக்கொண்டு) தாய்நாட்டுப் பாசத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரு பந்தமான என் அன்னையும் போய்விட்டால் (கதறி) நான் அனுதை! அப்புறம் என் வாழ்வையெல்லாம் இந்தத் தீவாந்தர வாசத்திலேயே கழித்துவிடவும் நான் தயார்...........

**தர்மலி:**—ஆணவக்காரப்பயல். அப்படியே டிமிக்கி கொடுத்துடலாம்னு பார்க்கிருன் என் கடனுக்கு. எதுக்கு?

**சந்தி:**—உங்கள் கடனை என் உடலை விற்ருவது கட்டி விடுவேன்....

**தர்ம:**—நீ திரும்பி வருவேங்கிறதுக்கு........

**குண சிங்:**—... ........அடச் சரித்தான்...சத்தியம் செய்து வாங்கிக்கிட்டு சனியனை அனுப்பி வையுங்க. வேற யென்ன செய்யிறது. மயான காண்டம் ஆரம்பிச்சிடு வான்.......

[சந்திரன் நன்றியோடு குணசிங்கத்தைப் பார்க்கிருன். அப்புறம் தர்மலிங்கத்தின் கையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சுகிருன்.......]

**சந்திரன்:**—மரணப்படுக்கையில் போராடிக்கொண்டிருக்கும் என் அன்னைமீது சத்தியமாகச் சொல்கிறேன், எப்படியும் திரும்பிவந்து உங்கள் கடனைத் தீர்த்து விடுவேன்.

**சுப்பு:**—சாவப் போறவங்க மேலே சத்தியம் பண்றீங்களே 'சாமிமேலே சத்தியமா'ன்னு சொல்லுங்க.

**குண சிங்:**—சரிதாம்பா.......சாமியெல்லாந்தான் சர்க்கரைப் பொங்கலாச்சே இந்தக் காலத்துப் பசங்களுக்கு....... என்னமோ யோக்கியமா, நாணயத்தோடே நடந்துக் கப்பா, சந்திரன்.

**சந்தி:**—நீ இந்த சரியான சந்தர்ப்பத்தில் செய்த உதவியை நான் மறக்கவே மாட்டேன் குணசிங்கம்.

**குண சிங்:**—அதெல்லாம் சரிதாம்பா, உனக்குத்தான் நான் இன்னும் எவ்வளவோ செய்யக் காத்திருக்கேனே.... உம், நாளைக்காலையிலே போய் விஸா எடுத்துக்க....

**சுப்பு:**—குணசிங்கம் மாத்தயா மொகத்துக்குத்தான் மொத லாளி உட்டாரு.

[சந்திரன் மௌனமாக உள்ளே போகிறான். குணசிங்கம் தர்மலிங்கத்தைப் பார்த்து கண்சிமிட்டி வெளியே இழுத்து வந்து அவர் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்லுகிறான். இருவரும் இடி இடி யென்று சிரிக்கிறார்கள்.]

**சந்திரன்:**—(அசதியோடு) சுப்பு, ஒரு கிளாஸ் தண்ணீர் கொடு.

**சுப்பு:**—ஒரு கிளாஸா? குடிக்கவா?

**சந்தி.**—(எரிச்சலுடன்) இல்லே. நீச்சலடிக்க. (சுப்பு சிரித்துக்கொண்டே போகிறான்.)

## காட்சி 47 தர்மலிங்கம் வீடு

[தனது தனியறையில் விஸாவுக்கு வேண்டிய ரிக்கார்டுகளை யெல்லாம் இரவில் ஒன்று சேர்த்து பாஸ்போர்டுடன் கட்டி வைத்திருந்ததை காலையில் காணாமல் பரபரப்படைந்த சந்திரன் பெட்டி,படுக்கையையெல்லாம் திரும்பத்திரும்ப அவிழ்த்தும், விரித்தும், உதறியும் தேடுகிறான். காணோம். பாஸ்போர்ட் மட்டும் மேஜைக்கடியில் கிடக்கிறது! விஷயத்தைப் புரிந்து கொண்டதும். 'கோ' வென்று குழந்தைபோல் கதறியேவிடுகிறான்....]

**சந்திரன்:**—துரோகிகள்! ஈவிரக்கமற்ற சண்டாளர்கள்! எனக்கு விஸா கிடைக்காமற் செய்வதற்காக என் தஸ்தாவேஜுகளை யெல்லாம் அபகரித்துக்கொண்டார்கள்.......அம்மா!........ஐயோ!.......அம்மா!........நீ அங்கே என்ன நிலைமையிலிருக்கிறாயோ!...... உன் உதடுகள்

என்னைச் சபித்துக்கொண்டிருக்காதா.......நான் நிரபராதியம்மா........நிரபராதி !........என் நிலையைக் கேட்டால் நீ என்னைக் கட்டாயம் மன்னித்துவிடுவாய்........ உன் கணவர் கடல்கடந்த குற்றத்திற்காக பாபமறியாத உன் பாலகன் அனுபவிக்கும் பயங்கரத் தண்டனையைப் பார்........இதைப் பார்ப்பதற்குக்கூட நீ உயிருடன் இருக்கிறயோ அல்லது இதுவரைப் பிணமாகி.........(கதறுகிருன்) ஐயோ !.........அம்மா !.......... இதோ வருகிறேன்...இதோ வருகிறேன்........ விஸா ! உன்னைவிடப் பெருசா !........புறப்படுகிறேன், இதோ ! விஸா வேண்டாம் !.......விஸா வேண்டாம் ! [**விஸா எடுப்பதற்காகப் பூர்த்திசெய்துவைத்திருந்தபாரத்தைக் கிழித்தெறியப்போகிருன்—பார்வதி வந்து பிடுங்கிக் கொள்கிருள்.**]

**பார்வதி**:—(கண்ணீரைத் துடைத்துக்கொணடே) வேண்டாம், சந்திரன். சாந்தப்படுத்திக்கொள்ளுங்கள்.

**சந்தி**:—சாந்தம் !........எரிமலையிலே அருவி !........கொல்லன் உலையிலே குளிர்காற்று !

**பார்வதி**:—எப்படியும் நீங்கள் விஸா எடுத்துக்கொண்டு போவதுதான் புத்திசாலித்தனம்.

**சந்தி**:—போதும். துரோகி ! கண்களைப் பிடுங்கிக்கொண்டு காட்சிகாண அழைக்கிருய் ! உயிரைக் கொன்றுவிட்டு உணவை ஊட்டுகிருய் ! விஸா பெற்றுத்தரக்கூடிய என் 'தஸ்தாவேஜு'களை யெல்லாம் ஒழித்துவைத்துக் கொண்டு என்னை விஸா எடுக்கச் சொல்கிருய் ! சண்டாளி !

**பார்வதி:**—என்ன ! தஸ்தாவேஜுகளைக்காணுேமா ! ஒன்றும் விளங்கவில்லையே !

**சந்தி:**—எப்படி விளங்கும் உனக்கு—என் வாழ்வில் குறுக்கிட்ட வஞ்சகி !

**பார்வதி:**—நீங்கள் இன்னும் இந்தப் பார்வதியை அறியவில்லையா சந்திரன் ?

**சந்தி:**—அறிவேன். நன்ருக அறிவேன். காமத்தின் கற் கோட்டை — நயவஞ்சகத்தின் நாதம் — சூழ்ச்சியின் சிகரம்—பாசாங்குப் பர்வதம்—நடிப்பு நட்சத்திரம் என்பதை நான் மிகவும் நன்ருக அறிவேன்.

**பார்வதி:**—(கண்ணீருடன்) புண்பட்ட இதயத்திலிருந்து வடியும் சீழ்தான் உங்கள் வார்த்தைகள் என்பதை நான் உணர்கிறேன். என்னை எவ்வளவு கெட்டவளாக நீங்கள் நினைத்துக்கொண்டாலும் சரி. தயவுசெய்து விஸாவிற்கு முயற்சியுங்கள்—அந்தப் பேதை மெனிக்காவின் வாழ்வு பாழாகாமலிருக்க.

**சந்தி:**—(ஆச்சரியத்துடன்) பார்வதி !

**பார்வதி:**—அண்ணு !........மன்னித்துவிடுங்கள் இந்தப்பாவியை. நான் இனி ஒருதலைக்காதலால் உழன்று திரிந்த பார்வதியல்ல, உங்கள் உண்மைக்காதலின் சக்தியை உணர்ந்த அபாக்கியவதி !

**சந்தி:**—(பார்வதியை மார்போடணைத்துக்கொண்டு) அன்புத்தங்கையே, மன்னித்துவிடு என்னை.

**பார்வதி:**—(கண்களைத் துடைத்துவிட்டு) பாக்கியவதியானேன். மன்னிப்புக் கோரிக்கொண்டிருக்கும் நேரமல்ல இது. மன்ருடுகிருள் நம் தாய் எமனுடன்.

விரைந்துசென்று, விவரங்கூறி விஸாபெற முயற்சியுங்கள். அதற்குள் தேடிப்பிடித்து அத்தாட்சிகள் கிடைத்துவிட்டால் அங்கு வருகிறேன் நான். கூடியமட்டும் முயற்சியுங்கள்........

**சந்தி:**—முயற்சிப்பதென்ன, விஷயத்தை விளக்கி விஸா எடுத்துக்கொண்டே வருகிறேன். (வேகமாகப் போகிருன்.)

## காட்சி 48

### குடியேற்ற வெளியேற்றக் காரியாலயம்.

[ஏராளமான இந்தியர்—ஆண், பெண், குழந்தைகள்—கூட்டம். இரவிலேயே 'கியூ'வில் படுத்திருந்து கொட்டாவீ விட்டுக்கொண்டு, **கொதிக்கும்** வெயிலிலே தவங்கிடக்கின்றனர். ரிக்ஷாவண்டிகள் நிறைந்த தஸ்தாவேஜுகள் வந்திறங்கிக் கொண்டிருக்கின்றன. பியூன்கள் தர்பார் பிரமாதப்படுகிறது, அந்த இடத்திலிருந்து மரியாதை மரியாதையாகக் கம்பிநீட்டிவிட்டது. நாயினும் இழிவான நிலைமை.]

**ஒருவன்:**—சண்டாளப்பாவிங்க. பொண்டாட்டி சாகக்கிடக்கிருள்னு தந்திவந்திருக்கு. போகத்துடிக்கிறேன் நான். 1935 லிருந்தே முட்டைக்கடை வைத்திருக்கிறேன். அப்புடியிருந்தும் 45–க்கு ரெக்காடு போதாதாம். அவனுக நாசமாப்போக. என் வயிறு எரியுதே........தேடிப் புடிச்சி, அத்தாட்சி காட்டி, விஸா எடுத்துக்கிட்டுப் போரத்துக்குள்ளே எம் பொண்டாட்டியோட கருமாதிகூட முடிஞ்சிடும்போலிருக்கே.......நான் என்ன செய்ய?.......உறுப்படுவானுகளா!

**கால்சட்டை:**—ஹஹ்ஹஹ்ஹாஹா!........ஸக்ஸஸ்!......தண் டரிங் ஸக்ஸஸ்!

**சாரம்:**—என்ன ஸார் இது! நீங்க நாலு மாசத்துக்குமுந்தி தானே மொதம்மொதலா இலங்கைக்கு வந்தீங்க?

**கால்சட்டை:**—ஓ யெஸ். அதுனுலேதான் இன்னும் மூணு வருஷம் தங்கியிருந்து நல்லா சம்பாதிச்சிக்கிட்டுப் போங்கோண்ணு விஸா தந்துட்டாங்க. நீங்கவந்து இரு பது வருஷமாச்சில்லே, பாத்ததுபோதும் போங்கோ ண்ணு சொல்லுருங்க. அவ்வளவுதான்! ஹஹ்ஹாஹா ஹா........குட்லக்!

**சாரம்:**—என்ன ஸார், ரெக்காடு காட்டினீங்க.

**கால்சட்டை:**—ஸம்திங்!....சர்வ வல்லமையுள்ள ஸம்திங்!....

✲ ✲

**குல்லா பேர்வழி:**—ஹூம்.... மூணுதடவை கல்யாணத்துக்கு நாள் வச்சி வச்சி மாத்திப் போட்டாச்சி. மொதல் தடவை—ஒரு வருஷத்துக்கு முந்தி தேதி குறிப்பிட்டத நெனச்சிக்கிட்டு ஒரு கூட்டாளி, கொழந்த ஏதும் உண்டுமான்னு எழுதி கேட்டிருக்காரு. இன்னும் கல் யாணமே நடக்கல்லே. நானும் ஒரு வருஷமாத்தான் விஸா ஆபீஸுக்கு அலேயிரேன். எப்ப வெஸா கிடச்சி எப்ப போயி நான் கல்யாணங்கட்றது! உம்ம்........

✲ ✲

**ஆபீஸர்:**—என்ன ஓய், இவ்வளவு பெரிய பையனேயும் உம் முடைய பாஸ் போர்ட்டுலேயே சேர்த்திருக்கீர்?

**மனுதார்:**—இல்லீங்க. நான் விஸாவுக்கு மனுச் செய்யும்

போது இவன் சின்னப்பையனுத்தாங்க இருந்தான்.

* *

**மணி:**—(ரிக்ஷா நிறைய மூட்டைமுடிச்சிகளை ஏற்றிக் கொண்டு வரும் சுப்பையாவைப் பார்த்துவிட்டு) அப்போ சுப்பையாப் பிள்ளே, ஊருக்குப் புறப்பட்டுட்டீங்க.

**சுப்பையா:**—ஆமா, இன்னும் ஒருவருஷத்துக்குள்ளேயாவது போய்ச் சேர்ந்துடுரேனுன்னு பார்ப்போம்.

**மணி:**—அதென்ன புள்ளே, அப்படிச் சொல்லுறீங்க!

**சுப்பையா:**—இப்பதானே விஸா ஆபீஸுக்குப் போரேன். இதெல்லாம் ஊருக்குக் கொண்டுபோற சாமானில்லே, விஸா எடுக்க ரெக்காடு.

**மணி:**—இவ்வளவுமா!

**சுப்பையா:**—இவ்வளவுமாண்ணு நீங்க மலைச்சிட்டீங்க. போதாதுண்ணு அவனுக லேசாச் சொல்லிடருன். ஒவ்வொருத்தன் வண்டி வண்டியாக் கொண்டாந்து தள்ளுருன்.

* *

**வேஷ்டி:**—உள்ளே கிளார்க்கா இருக்கேன். விஸா எடுத்துத் தர்ரேன்னு சொல்லி எழுபத்தஞ்சி ரூபாயும், பாஸ்போர்ட்டையும் வாங்கிக்கிட்டுப் போனுன் ஒரு கலசங்காரன். மாசம் ரெண்டாச்சி. விஸாவையும் காணும் பாஸ்போர்ட் ஹோகயா, ஆசாமி அப்ஸ்கான்டிங், கதி இல்லா, விசாரிக்கப்போனு, 'பளயாங்!' அட சட்டமே?

[சந்திரன் வருகிருன். அதே சமயம் ஆபீஸுக்குள்ளிருந்து வெளியேவருகிருன் குணசிங்கம். அவனிடம் ஓடுகிருன் சந்திரன்.]

**சந்தி:**—குணசிங்கம் !

**குணசிங்:**—என்னப்பா, விஸா எடுத்தாச்சா ?

**சந்தி:**—இல்லே. இன்னும் உள்ளேயே போகல்லே.

**குணசிங்:**—வேடிக்கையாயிருக்கே. ஒவ்வொருத்தன் லொரி லொரியா ரெக்காடுகளைக் கொண்டுவந்து குவிக்கிறான், அதே போதாதுண்ணு விரட்டியடிக்கிறாங்க. நீ என்னடாண்ணா என்னமோ வேடிக்கை பார்க்க . வந்தவன் மாதிரி வீசின கையா வந்திருக்கிறாயே !

**சந்தி:**—ரெக்கார்டெல்லாம் களவு போயிடிச்சிப்பா.

**குணசிங்:**—இதை ஆபீஸர் நம்பணுமே!.......உம், வா, ட்ரை பண்ணிப்பார்ப்போம்........

[குணசிங்கத்திற்கு 'சல்யூட்' அடித்து வழிவிடும் பியூன் சந்திரனைத்தடுக்கிறான். குணசிங்கம் திரும்பி வந்து சந்திரனை அழைத்துக்கொண்டு போகிறான். ஆபீஸர் குணசிங்கத்தைக் கண்டதும் மரியாதை காட்டி உட்காரவைக்கிறார்.]

**ஆபீஸர்:**—வாட் ஷேல் ஐ டு பார் யு மிஸ்டர் குணசிங்கம் ?

**குணசிங்:**—இவர் என் கிளாஸ்மேட். ரொம்ப நாளா சிலோன்லேயே இருக்கிறார். தாயாருக்கு 'ஸீரியஸ்'னு தந்தி வந்திருக்கு. ஊருக்குப் போயிட்டுத் திரும்பணும்ங்கிறார். ஆனா பேட்லக் பாருங்க, டாக்குமண்ட்ஸ் எல்லாம் லாஸ்ட் நைட் களவு போயிடிச்சி......

**ஆபீஸர்:**—ஐ ஆம் ஸொரி மிஸ்டர் குணசிங்கம். சரியான ரிக்காட்ஸ் இல்லாம கண்டிப்பாக டீ. ஆர். பி. கொடுக்க்கக்கூடாதுன்னு பிரிமியருடைய உத்தரவு.......

**சந்தி:**—ஏதோ முடிஞ்சா பிளீஸ் பண்ணுங்க, ஸார். எங்கம்

மாவுக்கு என்னைத் தவிர வேற கெதியேயில்லே ஸார்.... எங்கப்பாகூட இங்கேயே செத்துப் போயிட்டாரு ஸார். பிளீஸ்........பிளீஸ்........

**ஆபீஸர்:**—எக்ஸ்கியூஸ் மி ஜெண்டில்மேன். ஐ ஆம் வெரி ஸொரி. ரூல் இஸ் ரூல்........

**[ஏமாற்றத்துடன்வருகிறான் சந்திரன். ஆபீஸரைக் கண்ணடிக்கிறான் குணசிங்கம்.]**

## காட்சி 49 கொழும்பு வீதி

**[ஜெயிலிலிருந்து விடுதலையடைந்த முத்து மீசை, தாடியுடன் விரைந்து வந்து கொண்டிருக்கிறான். எதிரே ஒரு தோட்டத்தொழிலாளி ரிக்ஷா நிறைய சாமான்களை ஏற்றிக்கொண்டு வருவதைக் கூர்ந்துபார்த்து விட்டு......]**

**முத்து:**—அண்ணே !....ராமய்யாண்ணே........அண்ணே........ (ரிக்ஷா நிற்கிறது. ராமய்யா அடையாளம் விளங்காமல் விழிக்கிறான்.) என்னைத் தெரியல்லே ?....நாந்தான் அண்ணே முத்து !—நல்லகண்ணு மகன் !

**ராமையா:**—(ஆச்சரியத்தோடு) ஆரு !....நம்ம நல்லகண்ணு சின்னய்யா மவனா !....

**முத்து:**—ஆமா, ஆமா, இன்னிக்குத்தான் ஜெயிலிலேயிருந்து வாரேன்.

**ராமையா:**—ஜெயிலா !...என்னமோ பட்டாளத்துலே போயி சேர்ந்துட்டேன்னுல்லோப்பா பேச்சா கெடந்தது....தொரயும் சொன்னரே.

**முத்து:**—அந்தச் சண்டாளப் பாவி என்னை அனியாயமாக ஜெயிலிலே தள்ளிவிட்டு உங்களையெல்லாம் ஏமாற்றத்தான் அப்படிச்சொல்லி யிருக்கிறான்........அதிருக்கட்டும்

எங்கப்பா சொகமா ?

**ராமை :**—ஏதோ இருக்காரு.

**முத்து :**—மாமா ?....மீனுச்சி ?........

**ராமை :**—அடப்பாவி மவனே. அப்போ ஒண்ணுமே தெரியாதா ?........

**முத்து :**—(துடிதுடித்து) என்னுண்ணேஞ் சொல்ரே ?

**ராமை :**—நீ போன அண்ணிக்கேதான் அவுங்க ரெண்டுபேரையும் சீட்டுக்கிளிச்சி வெளியே அனுப்பிச்சிட்டானே அந்த நன்றி கெட்ட நாயி.

**முத்து :**—அப்புறம் ? இப்போ அவுங்க எங்கே ?

**ராமை :**—அந்த வயித்தெரிச்சல ஏந்தம்பி கேக்குரே. அந்தக் குட்டி மீனுச்சி வயித்திலே நஞ்சக் கொட்டி விரட்டிட்டானு.......பாவம், அந்தப் பொண்ணு 3 மாதம் கெர்ப்பம்ணு தெரிஞ்சதும் உசுரையே மாச்சுக் கிட்டுதே.

**முத்து :**—ஆ !....மீனுட்சி !....மீனுட்சி !....நீ தற்கொலே செய்து கொண்டாயா !...

**[பித்தனைப்போல் ஓடுகிருன்...ரிக்ஷா நகர்கிறது.]**

## காட்சி 50 — ரயில்வே ஸ்டேஷன்

**[கோட்டை ஸ்டேஷனில் புறப்படத் தயாராக நிற்கும் தலைமன்னர் வண்டியில் 3ம் வகுப்பு பெட்டியில் உட்கார்ந்திருக்கும் சந்தரனின் கையில் ஒரு கடிதம் தருகிருள் மெனிக்கா.]**

**மெனிக்கா :**—தப்பாக எண்ணிவிடாதீர்கள். எப்படியும் அம்மாவின் நோய் குணமாக வேண்டும். அதுதான் முக்கி

யம். இதில் 75 ரூபாய்தான் வைத்திருக்கிறேன். இன்னும் அதிகமாக தந்தனுப்பத்தான் விரும்பினேன். ஆனால் எக்ஸ்சேஞ் சட்டப்படி இதற்கு அதிகப்பணம் ரொக்கமாக கொண்டுபோக முடியாது. ஆகையால் தான் அதிகம் வைக்கவில்லை. தேவைப்படும்பொழுது எழுதுங்கள், உடனே அனுப்பித்தருகிறேன்.

**சந்தி :—**(நன்றியுடன்) மெனிக்கா!

**மெனிக்கா :—**மன்னியுங்கள். (பொங்கிவரும் கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு) தைரியமாகச் சென்று தாயாரைக் கவனமாகக் கவனித்து சுகப்படுத்துங்கள். எல்லாம் அனுகூலமாகவே முடியும்....

[ரயில் அசைகிறது. கண்ணீர் கரைபுரண்டோட கைத் துண்டை அசைத்து பிரியாவிடையளிக்கிருள் மெனிக்கா......]

## காட்சி 51 சென்னை-ஆஸ்பத்திரி

**[தங்கத்தின் நிலைமை படுமோசம். டாக்டரிடம் தன் சோகக் கதையைச் சொல்லுகிருன் சந்திரன்....]**

**சந்திரன் :—**...........ஒற்றுமையாக வாழ்ந்த குடும்பம் டாக்டர். ஒரு கைக்கூலி கங்காணியால் பிரிந்து—இடையே உயர்ந்து—மீண்டும் ஒரு நயவஞ்சகனின் சூழ்ச்சியால் சிதைந்து சின்ன பின்னமாகிவிட்டது.......நேற்றுக்கூட கடிதம் எழுதியிருந்தான்—உடனே புறப்படும்படி! உண்மைதான், ஒரு மாத லீவுதான் கேட்டுவந்தேன். ஆனல் எமனுடன் இறுதிப் போராட்டம் நடத்தும் என் அருமைத் தாயை நிராதரவாகப் போட்டுவிட்டு எப்படி

போகத் துணிவேன் ?....குடியேற்ற வெளியேற்றச் சட்டம் வேறு குறுக்கே நின்று தடுக்கிறது....உம்ம்........

**டாக்டர்:**—ஐ பிடி யு மிஸ்டர் சந்திரன். இதெல்லாம் சகஜந்தான். இதற்காகவெல்லாம் நீங்கள் அதைரியப்பட்டு விடக் கூடாது.... ..

**சந்திரன்:**—அந்தத்துரோகிகள் தர்மலிங்கமும், குணசிங்கமும் என் நாணயத்தையும், சத்தியத்தையும் குத்திக்காட்டி எழுதும் கடிதங்களைப் படித்தால் உயிரையே விட்டுவிடலாம்போல் தோன்றுகிறது. இலங்கையில் பிச்சையெடுத்தேன் என்றால் அதற்கான திருவோட்டையும் சட்டம் தகர்த்தெரிந்துவிட்டது...........இலங்கைக்குப் போவதெப்படி? அந்தத் துரோகியின் கடனை அடைப்பதெப்படி ? என்னையே நம்பியிருக்கும் என் மெனிக்காவின் கண்ணீரைத் துடைப்பதெப்படி ?........

[இதே சமயம் **"ராமச்சந்திரா, உங்கப்பா வந்துட்டாங்கடா....ராமச்சந்திரா....இதோ பாரேன்....என்னைக் கூப்புடுறாங்கடா........சாமி, இதோ வந்துட்டேன்"....**என்று ஜன்னியால் பிதற்றிக்கொண்டே கட்டிலை விட்டிறங்கி ஓடிவந்து 'தடா'ரென்று கீழே விழுகிறாள், தங்கம். 'அம்மா' வென்றலறி அள்ளி யெடுக்கிறான் சந்திரன். கட்டையாகிவிட்டாள் தங்கம். கதறுகிறான் சந்திரன்........]

**சந்திரன் :**—அம்மா....அம்மா....அம்மா....பாரம்மா, உன் மகனைப் பாரம்மா. வாழ்வின் வான முகட்டிலிருந்து தாழ்வின் கிடுகிடு பள்ளத்திலே தள்ளப்பட்டு விட்ட உன் சந்திரனைப் பாரம்மா........உன் அருமை மகன்

ஒரே மகன் இன்று அனாதை!...முற்றிலும் அனாதை!.... உன் சந்திரன் பீ. ஏ.—அனாதையம்மா!....இனி அவனுக்கு வாழ்வில்லை! வளமில்லை!...வாக்கில்லை! போக்கில்லை!....அம்மா!....அனாதை! உன் மகன் அனாதை!...

[தலையில் அடித்துக் கதறுகிறான். டாக்டர் தேற்றுகிறார்.]

## காட்சி 52. யாழ்ப்பாண வீதியிலே....

[யாழ்ப்பாண நகர வீதிகள் வழியாக சுருட்டுத்தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி ஊர்வலமாகச் செல்கிறார்கள். முன்னணியிலே 'அகில உலகத் தொழிலாளர்களே விழித்தெழுங்கள்' என்ற சுலோகம் பொறிக்கப்பட்ட அட்டையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு கம்பீரமாக நடந்து செல்கிறாள் மீனா தேவி.]

**தொழிலாளர்:—**(கோஷங்கள்) சம்பளத்தை உயர்த்து!.... தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!..........சுருட்டுத் தொழிலாளர் தலைவி, மீனா தேவிக்கு ஜே!......

(ஊர்வலம் மைதானத்தை அடைகிறது. பொதுக் கூட்டத்திலே மீனா பேசுகிறாள்.)

**மீனா:—**........நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் நீதியை அடிப்படையாகக் கொண்டது—நேர்மையை நெஞ்சிலே கொண்டது. கூலியைக் கூட்டு என்று கேட்கிறோம் — குடிசையைக் கோபுரமாக்குவதற்காக அல்ல; கூடிக்கொண்டே போகும் விலை வாசியை சமாளித்து கொடும் பசியை தணித்துக் கொள்ளத் தான். ஓய்வு வேண்டுமென்கிறோம் — வாய்வு உட்கொள்ள வென்று வரிந்துக் கட்டிக் கொண்டு, கடற்

கரைக்குச் சென்று, கண்டதைத் தின்று களியாட்டம் போடுவதற்கல்ல; களைப்படைந்த அவயவங்களுக்கு ஓய்வு கொடுத்து அடுத்தநாள் வேலைக்கு அதை பூரண மாக ஆயத்தப் படுத்திக் கொள்வதற்குத்தான். இது கூட தனக்கு விரோதமான செயல் என்று அவர்கள் கருதினுல் அதையும் நம்மால் புரிந்துகொள்ள முடி கிறது.

இந்த அளவு கூலியாவது அவர்கள் ஏன் கொடுக் கிருர்கள் ? நமது வேலைக்காக அல்ல. இந்தக்கூலியைப் பெற்று நாம் சிறிதளவாவது உணவு கொண்டு உயி ரோடிருக்கா விட்டால் நாளை வேலைக்கு ஆட்கள் இருக்க மாட்டார்களே என்ற சுய நலத்தால்தான் இதாவது தருகிருர்கள். (கூட்டத்தில் சிரிப்பும் 'அவ மானம்' என்ற குரல்களும்.)

ஆனுல் சிதறுண்டு கிடந்த தொழிலாளிகள் இன்று ஸ்தாபன ரீதியாகத் திரண்டு விட்டார்கள். தங்களின் அசுர பலத்தை உணர்ந்து கொண்டார்கள். இனி அவர்களை அடக்கி, ஒடுக்கி, ஏய்த்து வாழும் சக்தி யாருக்கும் கிடையாது. ("தொழிலாளர்கள் வாழ்க !........மீனு தேவி ! வாழ்க !")

## காட்சி 53. கொட்டாப்புளி குருப் தோட்டம்.

[ஆங்கில உடையுடன், தாடிமீசையுடன் ஒரு வாலிபன் காரை தோட்டத்தின் வாசலில் நிறுத்துகிருன். காவ லாளி ஓடிவர, அவனிடம் ஒரு 'விஸிட்டிங்கார்' டைக் கொடுத்தனுப்புகிருன். சிறிது நேரத்திற்கெல்லாம் காவலாளி அனுமதி வாங்கி வரவே உள்ளே சென்று

**தோட்டத் துரை ஹம்பக்ஸனின் பங்களாவிற்குள் கையில் ஒரு தோல்பையுடன் நுழைகிருன்.]**

**வாலிபன்:**—குட் மார்னிங் ஸார்.

**துரை:**—குட் மார்னிங் மிஸ்டர் ஷாந்தாராம்.

**ஷாந்தா:**—(உட்கார்ந்து கொண்டே) தேங் யூ. எங்கள் 'தவா ஹாஞ' (மருந்துசாலே) டில்லியில்தானிருக்கிறது, நான் விஸிட்டராக 3 மாதம் இலங்கையில் சுற்றுப் பிரயாணத்திற்காக அனுப்பப் பட்டிருக்கிறேன். பெரிய பெரிய நவாப்ஸ், படே படே மகாராஜாஸ்களுக்குத்தான் நாங்கள் எங்கள் தாது புஷ்டி மருந்துகளைக் கொடுப்பது. நூற்றுக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள், தங்கமெடல்களெல்லாம் பெற்றிருக்கிரோம். (தோல்பையை திறந்து ஒரு போத்தலே எடுத்துக் காட்டி) ஸீ திஸ் ஒண். இது 60 வயது கிழவனையும் 20 வயதாக்கிவிடும்.

**துரை:**—[சிரித்துக்கொண்டே] எனக்கெல்லாம் பார்ட்டி பைவ் தானே ஆகுது.

**ஷாந்தாராம்:**—தேட்ஸ் நதிங். டு வீக்ஸ் சாப்பிட்டால்போதும் ........உம்....பைதிவே...உங்க 'ஒய்ப்' நல்ல ஹெல்த்தி பாடிதானே ?

**துரை:**—(அதிர்வெடி சிரிப்புடன்) 'ஒய்ப்' இல்லே 'ஒய்வ்ஸ்'—மோர் தேன் ஹண்ட்ரட்!....என் எஸ்டேட்டிலே வேலே செய்ற பருவப் பெண்களுக்கெல்லாம் நான்தான் 'ஸுப்றீம் ஹஸ்பெண்ட்!'

**ஷாந்தாராம்:**—ஓ. ஐஸீ. அப்படியாஞல் உங்களுக்கு அவசியம் தேவையான மருந்து இதுதான். [பளபளவென

மின்னும் கத்தியை எடுத்துக் காட்டுகிருன். ]

**துரை:**—( பயந்து நடுங்கி ) வாட்ஸ் தேட் !

**ஷாந்தாராம்:**—( பொய் தாடி, மீசையை அகற்றுகிருன். )

**துரை:**—முத்து !...............

**முத்து:**—கத்து. தொழிலாளிப் பெண்களெல்லாம் உன் மனைவிகள் !—இல்லை, வைப்பாட்டிகள் ! அவர்களின் கற்பைச் சூறையாட உனக்கு தாது புஷ்டி லேகியங்கள் தேவை—அவர்களுக்கு விழுந்து சாக கிணறுகள் தேவை. என் கண்மணி மீனுட்சியைக் கற்பழித்து, தற்கொலை புரிந்துகொள்ளச் செய்தாயே................... என் சகலனல்லவா நீ. உனக்கு மரியாதை செய்ய வேண்டாமா ?............நான் செய்யாத எந்தக் குற்றத்தைச்சாட்டி என்னை 5 வருடம் கடுங்காவல் தண்டனைக்கு அனுப்பி வைத்தாயோ அதை இப்பொழுது உண்மையாகவே செய்து காட்டுகிறேன்.

[ ஓங்கிக்குத்தப் போகிருன் — பின்னல் வந்த கண்டக்டர் முத்துவைக் கட்டிப்பிடித்துக் கொள்கிருன். ஸ்தம்பித்து நிற்கும் முத்துவின் கையிலிருந்த கத்தியை பயங்கரச் சிரிப்புடன் பிடுங்கிக் கொள்கிருன் துரை. ஆங்காரத்துடன் அந்தக் கத்தியை முத்துவின் மார்புக்கு வீசி எறிகிருன் துரை. அதே நேரத்தில் முத்து திணறிக் கொண்டு திரும்பி விடவே, கத்தி கண்டக்டரின் முதுகில் ஆழமாகப் பாய்ந்து விடுகிறது. கண்டக்டர் அலறிக் கீழே சாய்கிருன்.பியூன்கள் முத்துவைப்

பிடித்துக் கொள்கிருர்கள். டெலிபோன் செய்து போலீசை வரவழைத்து, துரையை மீண்டும் கொலை செய்ய முயற்சித்த தாகவும், கணடக்டரைக் கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டி ஒப்படைக்கப் படுகிருன் முத்து..............

**காட்சி 54. தர்மலிங்கம் வீடு.**

**தர்மலிங்கம்:**—ஆச்சரியமாயிருக்கே! பய கடேசியிலே வர் ரேண்ணே எழுதிட்டானே!....எது!

**குணசிங்கம்:**—நம்பவே முடியலியே!....குடியேற்ற வெளி யேற்ற சட்டப்படி அவன் வரவே முடியாதே!.........

**தர்மலி:**—ஒருவேளை விஸிட்டர் பர்மிட்டிலே வருவானே ?

**குணசி:**—அதுக்கு டிபாஸிட் கெட்டணும், இங்கே பொறு மதியான ஆளு வேர ஜாமீன் கொடுக்கணும்........ அதுக்கெல்லாம் இந்த அன்னக் காவடிக்கு கெதியேது?

**தர்மலி.**—........அப்போ 'ஸீ பிளேன்' தான் இருக்கு!........ என்ன பிளேன் ?

**சுப்பு:**—அதுதாங்க. கள்ளத்தோணி!

**குணசிங்:**—கள்ளத்தோணி!........கள்ளத்தோணி! ஹஹ்ஹா ஹாஹா!..............கள்ளத்தோணி!.............கோல்டன் ஆப்பர் சூனிடி!.......

**தர்மலி:**—வெளங்கல்லியே, குணசிங்கம்?....எது?

**குணசிங்:**—(டெலிபோனைத் திருப்பிக் கொண்டே) இப்போ விளங்க வைக்கிறேன்..........ஹல்லோ.......போலீஸ் ...தர்மலிங்கம்ஸ், ஹியர்....ஹல்லோ ஒண் பெல்லோ, —சந்திரன் பை நேம்........யெஸ்....ஒரு கேங்கோட கள்ளத்தோணியிலே வர்ரதாக எழுதி யிருக்கான்.......

யெஸ்....விகேன் புரடியூஸ் த ஒரிஜினல் லெட்டர்....... டெபினிட்டா வர்ரான் சார்....பார்டன்? ஓ. கே. சரி யானபடி காவல் போட்டு ஆசாமியை.......உம்ம்....... ஹஹ்ஹஹ்ஹாஹா....ஆல்ரைட்!........சியர் யூ.............. ['டங்' என்று போனை வைத்துவிட்டு தர்மலிங்கத்தைப் பார்க்கிருன். இருவரும் சிரித்து உருழுகிருர்கள்.]

**குண சிங்:**—இப்ப விளங்குதா? ஹஹ்ஹஹ்ஹாஹா....கழுதை இனி இக்கரை வரவே முடியாது! நம்பதிட்டங்களும் வெளியாகவே முடியாது!

**தர்மலி:**—சனியன் தொலேஞ்சுது. கழுத இனி என்னத் துக்கு?—காரியம் தான் முடிஞ்சுட்டுதே.

## காட்சி 55 மன்னுர் மாஜிஸ்டிரேட் கோர்ட்

**2-வது காட்சி தொடர்ந்து நடைபெறுகிறது.**

**[...........சந்திரன் தனது வாதத்தைத் தொடர்ந்து நடத்துகிருன்.]**

**சந்திரன்:**—....ஆம், இன்று காரியம் முடிந்துதான் விட்டது! திருத்தவேண்டிய நாடுகளெல்லாம் திருத்தியாகி விட்டன. உறிஞ்ச வேண்டிய ரத்தமெல்லாம் உறிஞ்சியாகி விட்டது! படிக்கவேண்டிய படிப்பெல்லாம் அவர்களிடமிருந்து படித்தாகி விட்டது! இனி அவர்கள் எதற்கு? விரட்டி யடிக்கப்பட வேண்டியவர்கள்தான்—உழைக்க முடியாத அடிமைகளைப் போல! தூக்கி வீசப்பட வேண்டியவர்கள்தான்—குழம்பில் கிடக்கும் கருவேப்பிலேயைப்போல! இது தான் உங்கள் நீதி!....உங்கள் நேர்மை!....உங்கள் தர்மம்!

இன்று சொல்லுகிறீர்கள் 'வராதே' என்று—நெஞ்சிலே இரக்கமின்றி! வாழ்வைத் தந்த மக்களுக்கு வஞ்சகம்—சுரண்ட வந்தவனுக்கு தோத்திரப் பா! கலையைத்தந்த மக்களுக்கு நீங்கள் அளிக்கும் பரிசு கொலை—கன்னமிட வந்தவனுக்கு நீங்கள் வாசித்தளிப்பது வரவேற்புப்பத்திரம்! அப்பால் நீளும் கரங்களிலே நீங்கள் அள்ளி வைப்பது அணல்—அதட்டி மிரட்டுபவனிடம் நீங்கள் ஒப்படைப்பது ஆட்சிபீடம்!

அன்னைத் தமிழகம் தன் சேய் இலங்கைக்கு மக்களை அனுப்பினுள்—மன்னர்களாக; பிரஜைகளாக; பாட்டாளிகளாக; சிருஷ்டி கர்த்தாக்களாக; ரத்தம் சிந்தி இத்தீவைக்காக்கும் ரட்சகர்களாக; அன்பையும், அஹிம்ஸையையும் போதிக்கும் போதிமர புத்தர் பெருமானுக! அன்று முகமன் கூறி, நன்றியுடன், அன்புடன், ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்ட அதே லங்கா இன்று காரியம் முடிந்து விட்டதால் கையை அகல விரித்தால், முகத்தைச் சுளித்தால், முணுமுணுத்தால், உதட்டைப் பிதுக்கினுல்—உலகம் சொல்லாதா, தூற்ருதா: சுயநலக்காரி, வஞ்சகி, துரோகி, நன்றி கெட்டவள், அரக்கி என்று?

வீறிட்டலறும் தன் பச்சிளங் குழந்தையை லயத்திலே தன்னந்தனியாகப் போட்டு விட்டு சங்கோசை கேட்டதும் காலைக் கடுங்குளிரிலே, கட்டிய கூடையுடன் கடமையைச் செய்ய ஓடிவரும் என் தங்கை மீனுட்சிகள், அன்னை அங்கமுத்துகள் கிள்ளியெடுக்கும் தேயிலைக் கொழுந்துதான், ரப்பர் பால்

தான் தலைமுறை தலைமுறையாக உலக நாடுகளிலே அதிக கிராக்கியுடன் விற்கப்பட்டு டாலரும், ஸ்டர்லிங்குமாக மாறி இந்நாட்டில் வாழும் எழுபது லட்சம் மக்களின் உணவும் உடையுமாகக் கிடைக்கிறது என்பதை மறந்துவிட்டாளா என் லங்கா மாதா? உழைப்பையே அணிகலனாகப்பூண்டு, களைப்பில்லா உழைப்பால் இந்நாட்டைக் காப்பாற்றும் என் தாய் மீனாட்சிகளின் குரல்வளைகள் சட்டத்தின் இரும்புக் கரங்களால் நசுக்கப்பட்டு அவர்கள் எழுப்பும் குரல்—அழு குரல்—கூக்குரல், உலகெல்லாம் ஒலித்து எதிரொலிக்கிறதே, அவர்கள் உழைப்பையே உண்டு உயிர் வாழும் லங்காவின் செவிகளில் இன்னும் விழவில்லையா? அல்லது கேட்டும் கேளாத செவிடியாகப் பாசாங்கு செய்கிறாளா?

பாழும் மலைக்காடுகளைப் பண்படுத்த பகலிரவாக உழைத்த என் முற்பிதாக்களில் எத்தனை ஆயிரம் பேர்களை சரிந்து விழுந்த மலைப்பாறைகள் துவம்சம் செய்திருக்கின்றன: புடையன், விரியன் முதலிய மலைப் பாம்புகளுக்கு இறையானோர் எண்ணற்றோர்: இப்படி எலும்பும் சதையும் உரமாக ஊட்டி ரத்தத்தை நீராகப்பாய்ச்சி பண்படுத்தப்பட்ட தோட்டங்களல்லவா இன்றைய இலங்கையின் செல்வங்கள்!

தமிழனின் ரத்தக்தைக் குடித்து வளர்ந்த தேயிலை நன்றி மறவாதிருக்கவே தன் சாயத்தை ரத்தச் சிவப்பாகத் தருகிறது! பழபழக்கும் ரப்பர்பாளங்கள் கிழித்தெடுக்கப்பட்ட தமிழனின் சதை! இத்தீவின் எத்திக்கும் ஜொலிக்கும் ரத்தினக் கற்கள் தமிழனின் நெற்றியி

லிருந்து சிந்திய வியர்வைத் துளிகள்!.

ஏன் வந்தேன்? வரவழைக்கப்பட்டேன்—நிர்ப்பந் திக்கப் பட்டேன், சத்தியம் நிறைவேற்றப்பட வேண் டும்—தஞ்சமடைய சற்குணவதியின் நெஞ்சம் குளிர வேண்டும்—இயற்கையன்னையின் நன்கொடை யான இந்தப் பரந்த உலகின் எந்தப் பகுதிக்கும் மனிதன் தன் இஷ்டம்போல் போகவர சுதந்திரம் பெற் றிருக்க வேண்டும் என்று நினைத்தேன்—வந்தேன். காத லும், கடமையும், நீதியும், நேர்மையும், சத்தியமும், வாழ்வும் என்னை இலங்கைக்கு வா வா வென்றழைத் தன. மனித உரிமையைப் பறிக்கும் ஒரு மட்டரகச் சட்டம் இரும்புக் கரம் நீட்டித் தடுத்தது. என் செய் வேன்? காதலி காத்திருந்தாலும் கடன்காரன் காத்தி ருக்க மாட்டான். ஒரே ஒரு வழிதானிருந்தது—சுதந்தி ரவழி! எங்கள் முற்பிதாக்கள் வந்த முதல் வழி! தொன்று தொட்டு நடந்து வரும் தோணி வழி! எங் கள் பூர்வீகத் தாயகமாகிய இலங்கையை—எங்கள் தமிழகத்தின் சிறிய பகுதியான இலங்கையை—எங்கள் உழைப்பின் ஊதியமான இலங்கையை—எங்கள் முயற் சியின் மலர்ச்சியான இலங்கையை—நாங்கள் அந்த ரங்க சுத்தியுடன் அமைத்த சௌந்தரிய மாளிகையான இலங்கையை, கள்ளத்தோணிக்குற்றவாளி விஜயனின் சந்ததியாகிய நீங்கள் அபகரித்து வைத்துக் கொண்டு இன்று கூறும் கள்ளவழி!—கள்ளத்தோணி வழி!

**சர். வக்கீல்:**—கடமையென்றும் காதலென்றும் கதையளந்து கோர்ட்டை ஏமாற்றப்பார்க்கிறார்.

**குரல்:**—காதலைச் சொல்லி ஏமாற்றவில்லை, அவர். காதல் கண்ட உண்மையைக் கௌரவிக்க மறுக்கிறதே உங்கள் கபோதிச் சட்டம் என்றுதான் அங்கலாய்க்கிறார். (ஆவேசத்தோடு பிரவேசிக்கிறாள் மெனிக்கா.)

**மாஜிஸ்:**—மெனிக்கா !....என் மகள் !....மெனிக்கா !....

**மெனிக்கா:**—ஆம் ; உங்கள் மகள்தான்....மெனிக்காதான்!.... காற்றும். மழையும், பட்சியும், மிருகமும் பெற்றிருக்கும் சுதந்திரம்கூட மனிதனுக்கு இல்லை யென்று மறுக்கிறது உங்கள் மகத்தான ஜனநாயக சட்டம் !

இலங்கையில் பிறந்தேன் — இந்தியாவில் படித்தேன். உத்தமர் இவரைக் காதலித்தேன். பிறப்பிலே வளர்ப்பிலே, கல்வியிலே, காதலிலே, காணவில்லை நான்கடுகளவு பேதத்தை ! உள்ளங்கவர்ந்த உத்தமரை மணக்கலாம், இல்லற வாழ்வின் இன்பத்தைப் பருகலாம் என்று நான் கொண்டிருந்த என் நம்பிக்கைப் பூங்காவை வெம்பிக்கருகச் செய்கிறது உங்கள் சட்டம். உள்ளத்தை ஒருவனுக்கும் உடலை ஒருவனுக்கும் உயிருள்ளவரை ஒப்படைக்கச் சகியாள் கடுகளவாவது கற்பைக் கௌரவிக்கும் ஒரு கன்னிகை ! அவள் ஈழ நாட்டில் பிறந்தாலென்ன, சோள நாட்டில் பிறந்தாலென்ன ! வீரக் கன்னியர்களை விபச்சாரிகளாக்க நினைக்கிறதா உங்கள் விவேகமற்றச் சட்டம் ? அவர் எனக்குக் கணவராகப் போகிறவர்........

**மாஜிஸ்:**—(குறுக்கிட்டு) மெனிக்கா !

**மெனிக்கா:**—ஆம். உங்களுக்கு மாப்பிள்ளையாகப் போகிறவர். இங்கு வரப்போக அவருக்குப் பூரண உரிமை உண்டு.

**சர். வக்கில்:**—சட்டம் இடந்தரவில்லை.

**மெனிக்கா:**—சட்டம் !............பணக்காரனைக் கண்டால் பல் லிளித்துப் பச்சைக் கொடி காட்டும் சட்டம், அனுதை களைக் கண்டால் அபாயக் கொடி காட்டுகிறது! உலகில் தோன்றிய ஒவ்வொருவனுக்கும் அன்னவன் இஷ்டம்போல் எங்கும் போக வர உரிமை உண்டு. இதுதான் இயற்கையின் சட்டம் !

**சர். வக்கில்:**—இயற்கையின் சட்டம் எப்படியும் இருக்கலாம் ஆனல் இலங்கையின் சட்டம் இந்நாட்டுப் பிரஜை களுக்கு மட்டுந்தான் உரிமையளிக்கிறது !

**குரல்:**—பிரஜையாம் ! யார் இந்நாட்டுப் பிரஜை ? எலும்பும் சதையும், ரத்தமும் தந்து இந்நாட்டை வளர்க்கும் பாட்டாளியா ? எண்ணற்ற ஏழைகளின் பிரேதங்களை அடுக்கியெழுப்பிய மாடமாளிகைகளிலே கண்ணற்ற கபோதிகள் போல் வாழும் கயவர்களா ? (பார்வதி பிரவேசிக்கிருள்--மக்கள் ஆர்ப்பரிக்கிருர்கள். 'ஆர்டர்' 'ஆர்டர்' சப்தம்.) யாருக்கு இருக்கிறது உரிமை ?

**சர். வக்கீல்:**—தலைமுறை தலைமுறையாக இந்நாட்டில் பிறந்து வாழும் மக்களுக்குத்தான் உண்டு உரிமை.

**பார்வதி:**—தலைமுறை தலைமுறையாய் நாட்டில் வளர்ந்து நாசத்தை விளைவித்துவருகிறது காலரா, தொத்து நோய் ஆனலும் அவற்றைத் தொலைத்துக்கட்ட கோடிக் கணக்காக செலவு செய்து வருகிறேம். வம்சாவளியை நினைத்து அதைவளர விடுவதில்லை. ஏன் ?

**சர். வக்கீல்:**—அது தேச நலனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடி யது. ஆகையால்தான்....

**பார்வதி:**—உண்மைதான். அதேபோல நாட்டுக்கு இன்றியமையாத உணவுப் பொருள் நாட்டில் இல்லாவிட்டாலுங்கூட பிற நாடுகளுக்குக் காவடி எடுத்தாவது கொண்டு வந்து சேர்க்கிறோம். அவை தலைமுறை தலைமுறையாய் இந்த நாட்டில் விளைபவையா என்பதை யெல்லாம் நாம் எண்ணிப்பார்ப்பதே இல்லை. காலராவும், தொத்து நோய்களும் மட்டுந்தானா நாட்டு நலனுக்குத் தீங்குபுரிபவை? பரம்பரை பரம்பரையாய் நாட்டிலே பிறந்துவிட்ட ஒரே சலுகையை மாத்திரம் வைத்துக்கொண்டு, நாட்டு மக்களேயே கொள்ளையடித்துக் கூத்தாடும் கள்ள மார்கட்காரர்கள் மனித உருவில் நடமாடும் தொத்து நோய்களல்லவா? இவர்கள் நாட்டிற்கு வேண்டிய பிரஜைகளா, அல்லது அயல் நாடுகளில் பிறந்துங்கூட நம் நாட்டில் ரத்தஞ்சிந்தி உழைத்து நம்மைக் காப்பாற்றும் உணவுப் பொருள் போன்ற உழைப்பாளிகள் நாட்டிற்குத் தேவையானவர்களா?

**மாஜிஸ்:**—பெண்ணே, உனக்குள்ள பேச்சு சுதந்திரத்தைத் தப்பாகப் பயன்படுத்திக் கொள்ளாதே?

**பார்வதி:**—நீதிபதியவர்களே, சந்திரன் நேர்மையானவர்—சத்தியவந்தர்—சற்குணக் குன்று. இன்று அவர் இன்னிலையிலே குற்றவாளிக் கூண்டிலே நிற்கிறரென்றல் அதற்குக் காரணம் சர்க்கார் சமீபத்தில் சிறந்த பிரஜை யெனக்கருதி 'ஸர்' பட்டம் தந்து கௌரவித்ததே அந்த ஸ்ரீமான் தர்மலிங்கமும், அவரை ஆட்டிவைக்கும் அயோக்யன்—உங்கள் தங்கை மகன்—குணசிங்கமும் தான்!

**மாஜிஸ்:**—இதெல்லாம் பேச நீ யார்?

**பார்வதி:**—நான் யாராயிருந்தாலென்ன. மனித சுதந்திரத்தின் குரல்—கூக்குரல் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

**மாஜிஸ்:**—சம்பந்தமில்லாத வழக்கில் தலையிட்டு குதர்க்கம் பேசினுல் கோர்ட்டிலிருந்தே வெளியேற்றப் படுவாய்.

**பார்வதி:**—சந்திரனின் தொடர்கதையில் நான் ஒரு தவிர்க்க முடியாத அத்தியாயம். ஸர். தர்மலிங்கத்தின் ஒரே மகள் - தான் நான் (கோர்ட்டில் பரபரப்பு) பெயர் பார்வதி!

தான் பிறந்தது முதல் பார்த்தறியாத தந்தையைக் காண முதல் முதலில் 1943-ல் இலங்கைக்கு வந்தார் சந்திரன். ரயிலில் வரும் பொழுதே கஞ்சா கடத்தும் கோஷ்டியை சுங்க அதிகாரியிடம் பிடித்துக் கொடுத்து, தப்பிக் கொண்ட இருவரால் மண்டை உடைக்கப்பட்டு, அவர் தந்தை வசித்துவந்த எங்கள் வீட்டிற்கு ரத்த வெள்ளத்துடன் கொண்டு வரப்பட்டார். அவரது தீரத்தையும் தியாகத்தையும் உங்கள் சர்க்காரே — சுங்க அதிகாரியின் அறிக்கை மூலம் புகழ்ந்து பாடியிருக்கும் பாராட்டுப் பாக்கள் இதோ. (பத்திரிகைகளைக் காட்டுகிருள்.) இரவு பகல் பணிவிடை புரிந்து அவரைக் கவனித்து வந்தேன் நான். அவருடைய உத்தமகுணமும் உயரிய பண்பும், என் உள்ளத்தைக் கவர்ந்தன. ஏற்கெனவே அவர் மனம் மெனிககாவால் — உங்கள் மகளால் — நிரப்பப் பட்டு விட்டது என்பதை அறியாத நான் அவரை மனமாரக் காதலித்தேன். நானும் என் தந்தையும் எத்தனையோ

உபாயங்களைக் கையாண்டும், அவருடைய தந்தையே உருட்டியும் மிரட்டியும் இந்தத் துரோகி குணசிங்கம் பயமுறுத்தியும் கூட தன் உண்மைக் காதலியான இந்த மெனிக்காவுக்கு துரோகம் செய்து என்னை மணக்க மறுத்து விட்டார். அதன் காரணமாகப் பல இன்னல்களையும், அகௌரவங்களையும் சகித்தார். சகலவழியிலும் அவர் மனதை மாற்ற முடியாமற் போகவே என் தந்தையும் குணசிங்கமும் பொய்க் கணக்கு ஜோடித்து அவர் தந்தை விட்டுச் சென்ற லட்சக்கணக்கான ரூபாய்களை மூடி மறைத்து விட்டு, அதிகப்பற்றுக் கடனாக ரூபாய் ஐயாயிரத்தைக் காட்டி, கட்டச் சொல்லி ஹிம்ஸித்து, பணமில்லாத தால் கடன் தீரும்வரை அவர் தந்தையின் பணத்தால் நடைபெறும் அதேகடையில் ஒரு வேலைக்காரனாக வைத்து மானபங்கப் படுத்தினார்கள்.

**பொது மக்கள்:**—துரோகிகள் !....பாவிகள் !....சண்டாளர் கள் !........

**மாஜிஸ்:**—ஆர்டர் !....ஆர்டர் !....

**பார்வதி:**—[தொடர்ந்து] கள்ளமார்கெட் கொள்ளை லாபப் பொய்க்கணக்கை எழுத மறுத்து அதற்காக கன்னத்தில் விழுந்த பல அறைகளையும் சகித்தார் இந்தக்கருணை மூர்த்தி. தாயின் மரண அழைப்பு கேட்டு தத்தளித்த இந்த உத்தமரை மீண்டும் கட்டாயம் திரும்பி வந்து கடன் தீரும் வரை உழைப்பதாக சத்தியம் செய்து வாங்கிய பின்னரே போக அனுமதித்தார்கள் அந்தப் புல்லர்கள். 1943-லிருந்தே அவர் இலங்கையில்

வசித்து வந்திருப்பதற்கான சகல அத்தாட்சிகளும் அவரிடமிருந்தும் அவைகளை அபகரித்துக்கொண்டு அவருக்கு 'விஸா' கிடைக்காமற் செய்தார்கள்.

**சர். வக்கீல்:**—விசித்திரமான விவாதம். அவர் கட்டாயம் மீண்டும் வரவேண்டும் என்ற ஆவலால் சத்தியம் செய்து வாங்கியவர்கள் அவர் வருவதற்கு அனுகூலமாயிருக்க வேண்டிய விஸா கிடைக்காமல் ஏன் செய்யவேண்டும்?

**பார்வதி:**—உண்மையில் அவர் திரும்பி வந்தால் ஒருவேளை எவ்வகையிலாவது அவருக்கு இவர்கள் ஜோடித்த கள்ளக்கணக்கின் விபரம் தெரிந்து விடக் கூடுமே என்ற பயம் இவர்களுக்கு. ஆகையால்தான் விஸா கிடைக்காமல் செய்தார்கள். ஆனாலும் சத்தியம் செய்து வாங்கியிருக்கிறபடியால் சந்திரனின் நேர்மை உள்ளம் எப்படியும் அவரை வரத் தூண்டுமென்பதும் அப்பொழுது தோணி மார்க்கம்தான் உண்டென்பதும் சுலபமாக ஆளைப் பிடித்துக் கொடுத்து இனி எந்தக் காலத்திலும் இலங்கைக்கு வரமுடியாதபடி செய்து விடலாமென்பதுமே அவர்களின் திட்டம்................ அப்படியே, அவருக்கு அவரது நாணயத்தையும், சத்தியத்தையும் இடித்துக் கூறி பல கடிதங்கள் எழுதி தோணிமார்க்கமாக அவரைப் புறப்பட்டு வரச்செய்து, போலீஸாருக்கும் தகவல் கொடுத்து, பிடித்து, இங்கே நிறுத்தச் செய்து விட்டு, அதோ கூட்டத்தில் ஒழிந்து நின்று வேடிக்கைப் பார்க்க வந்திருக்கிறார்கள் அந்தத் துரோகிகள்! **[தர்மலிங்கத்தையும், குணசிங்கத்தையும் மக்களுக்குக் காட்டிக் கொடுத்து விடவே**

**மக்கள் அவர்கள் மீது சீறுகிறார்கள். போலீஸ் அவர்களைக் காப்பாற்றி பந்தோபஸ்தான இடத்திற்கு அழைத்துச் செல்கிறது.]** இலங்கை பொது ஜனங்களே, நீங்களே கூறுங்கள்: இந்த நாட்டில் வாழும் யோக்யதை யாருக்கு இருக்கிறது? நாட்டின் நலன் மறந்து கஞ்சா கடத்தியும், கள்ள மார்க்கட் வியாபாரத்தாலும் நாட்டு மக்களைக் கொள்ளையடித்துக் கூத்தாடும் குண சிங்கங்களுக்கும், தர்மலிங்கங்களுக்கும், ஹம்பக்ஸன்களுக்குமா ?—அல்லது அயல் நாட்டிலே பிறந்துங் கூட நம் நாட்டு மக்களை ஏமாற்றும் கள்ளக் கணக்கு எழுத கைக் கூலியாக இருக்க மறுத்து, கஞ்சா கடத்தும் கோஷ்டியைக் காட்டிக் கொடுத்து,கண் கண்ட துரோகங்களைத் தயங்காமல் கண்டிக்கும் கடமையுணர்ச்சியும், நீதியும், நேர்மையும் ஒளி வீசும் இந்தச் சந்திரர்களுக்கா ?

**குரல்கள்:**—சந்திரனுக்குத்தான் உரிமை உண்டு !.....சந்திரன்தான் சிறந்த பிரஜை !

**மாஜிஸ்:**—இந்த வழக்கில் என் மகள் மெனிக்காவே நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாலும், கள்ளக் குடியேற்ற கேஸ்களில் இது பரபரப்பையும், முக்கியத்துவத்தையும் பெற்று மக்களின் மனதையும் கவர்ந்துவிட்டதனாலும் இந்த வழக்கில் நீதி வழங்கும் புனித கடமையை கொழும்பு மேஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கு கம்மிட் செய்கிறேன். [கோர்ட் கலைகிறது. பொது மக்கள் ஆர்பாட்டம் செய்கிறார்கள்.]

**பொதுமக்கள்:**—சந்திரர்கள் வரவேண்டும் !....வாழ வேண்டும்!....சத்திய சீல சந்திரர்கள் வாழமுடியாத இலங்

கை எங்களுக்கு வேண்டாம் !....மனித சுதந்திரம் வேண்டும்.! ...மட்டரக சட்டம் ஒழிக !........

(போலிஸ் தலையிட்டு கூட்டத்தைக் கலைக்கிறது.)

## காட்சி 56. யாழ்ப்பாணத்தில் ஒரு குடிசை

**சுந்தரி:**—வணக்கம், அக்கா.

**மீனு:**—வாம்மா சுந்தரி. என்ன விசேஷம்?

**சுந்த:**—(கையிலிருக்கும் தினசரியை விரித்துக்கொண்டே)

அக்கா, நம்ப ஊர்வலம்—உங்கள் பிரசங்கம் எல்லாம் பிரமாதமா பேப்பர்லே போட்டிருக்கு. இதோ கேளுங்க! "சம்பள உயர்வு கோரி சுருட்டுத் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்—தலைவி மீனு தேவியின் வீராவேசப் பிரசங்கம்."

**மீனு:**—(மகிழ்ச்சியோடு) எங்கே பார்ப்போம். **(பேப்பரை வாங்கிப் படிக்கிருள்.......அங்கே !....... அதோ வலது புறம்........மேலே !.... இமைகொட்டாமல் அதையே கூர்ந்து படிக்கிருள் — மீண்டும் மீண்டும்.)**

"கொட்டாப்புளி குருப் தோட்டத்துரை ஹம்பக்ஸன்மீது இரண்டாவது கொலை முயற்சி !—முதல் முயற்சியில் 5 வருட கடுங்காவல் தண்டனை பெற்று வெளி வந்த முத்து மாறுவேடத்தில் சென்று கண்டக்டரைக் குத்திக் கொன்ற பயங்கர சம்பவம் !—குற்றவாளி விளக்க மறியலில் வைக்கப்பட்டார்..........."

**மீனு:**—(ஆவேசத்தோடு) பொய்.......பொய். சுத்தப்பொய்.... என் அத்தான் ஒருக்காலும் அப்படி செய்யவேமாட்டார்....செய்யவே மாட்டார்.... அத்தான் !.... அத்தான் !

**சுந்தரி:**—(ஒன்றும் புரியாமல்) அக்கா, அவர் உங்க அத்தானு?

**மீனு:**—ஆமாம் சுந்தரி....நான் இன்றைக்கே புறப்பட்டுப் போகிறேன். என் அத்தானை ஜெயிலில் சந்திக்கவேண்டும். (கண்ணீரைத்துடைத்துக் கொண்டே) நீ தொழிலாளர்களுக்குச் சொல்லிவிடு. முதல் வண்டியிலேயே புறப்பட்டுப் போகிறேன். (பரபரப்போடு சாமான்களைப்பத்திரப் படுத்துவதில் முனைகிருள் மீனு).

**சுந்தரி:**—நானும் ஸ்டேஷனுக்கு வர்ரேங்கா.

## காட்சி 57 கொழும்பு—ஜெயிலில்

[ஜெயிலரிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு வருகிருள் மீனுட்சி. கம்பிகளினூடாக அவனைக் கண்டதும் 'அத்தான்' என்று அலறுகிருள். செத்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கும் மீனுட்சி நேரில்வருவதைக் கண்டதும் நம்ப முடியவில்லை முத்துவுக்கு. என்ருலும் அவன் சக்திகளை மீறி 'மீனு' என்ற குரல் வெடித்து விடுகிறது, ஓடிவந்து கம்பிகளில் முட்டிக்கதறுகிருள் மீனுட்சி. அவள் கூந்தலை வருடுகிருன் முத்து.]

**முத்து:**—மீனு !........

**மீனு:**—(கண்ணீரினூடாகச் சிரிக்க முயன்றுகொண்டே-மெல்லிய குரலில்) ஆமா அத்தான். மீனுவேதான்....

**முத்து:**—நீ இறந்துவிட்டதாக அல்லவா சொன்னுர்கள் துரோகிகள் !

**மீனு:**—ஆம், அவர்களுக்கும்—இந்த முழு உலகத்திற்கும் நான் செத்துப் போனவள்தான். உங்களுக்கு மட்டும்தான் நான் உயிருள்ள மீனுட்சி....அத்தான், தேன்

கூட்டில் தீப்பந்தம் விழுந்ததுபோல் சிதறி சின்ன பின்னமாகி விட்டது நமது குடும்பம்.

**முத்து:**—எல்லாம் அந்த நீசன் செய்த சதியல்லவா!

**மீனு:**—அத்தான், உங்களை இந்த நிலையில்!........தேம்பியழுகிருள்.)

**முத்து:**—(**கண்ணீரைத்துடைத்துக்கொண்டே**) நீ ஏன் இங்கே வந்தாய். மீனு? சற்று நேரத்துக்கு முன் வரை உயிரோடிருக்க வேண்டிய -ஒவ்வொரு நிமிஷத்தையும் சபித்துக் கொண்டிருந்தேன். அதி சீக்கிரம் ஆவி உலகத்தில் உன்னை சந்திக்கத்துடிதுடித்துக் கொண்டிருந்தேன். ஆனல் உன்னைக்கண்டதும்-நீ உயிரோடிருப்பது தெரிந்ததும் சாவு எனக்குப் பயங்கரமாகத் தோன்றுகிறது. நான் சாவை வெறுக்கிறேன் மீனு. வெறுக்கிறேன். (கதறுகிருன்,)

**மீனு:**—நீங்கள் சாகக்கூடாது.......சாகமாட்டீர்கள்.......... சாகவிடமாட்டேன். சத்தியம் ஜெயித்துவிடும்........

**முத்து:**—சத்தியம்!........இந்தநாட்டிற்குள் தலைகாட்டக்கூட அதற்குத் தெரியம் இருக்கிறதா? (அவள் முகத்தில் வடியும் கண்ணீரைத் துடைக்கிருன்.)

**மீனு:**—(துடித்து விலகிக்கொள்கிருள்) இந்தப்பாவியைத் தொடாதீர்கள். உங்கள் புனித ஸ்பரிசத்துக்கு அருகதையற்றவள் நான்........உங்கள் மீனு மாசுடையவள்! (ஏங்கி அழுகிருள்.)

**முத்து:**—இல்லை. மாசுப்பெற மனதாலும் நினைக்க மறுப்பவள். அவள் மாசு படுத்தப்பட்டிருக்கலாம். ஆனல் மாசற்றவள் என் மீனு!........மீனு, நீ என்றும் என்

லட்சிய மங்கைதான்! மாசுற்றது உன் குற்றமா?

(மீண்டும் அவள் கூந்தலைக் கோதுகிறான்).

**மீனு:**—அத்தான், நீங்கள் தெய்வம்!

**முத்து:**—இல்லை—மனிதன்! அதுதான் உன்னை மதிக்கிறேன். நேசிக்கிறேன். தெய்வமாயிருந்திருந்தால் தீக்குளித்து நிரூபிக்கச்சொல்லியிருப்பேன் உன் பரிசுத்தத்தை. நான் பகுத்தறிவுள்ள மனிதன்.

(நேரம் ஆகிவிட்டதை காவலாளி எச்சரிக்கிறான்.)

**முத்து:**—நாளைமறுநாள் விசாரணை. மௌனம் சாதித்து தூக்குமேடை யேறி, சீக்கிரம் உன்னிடம் வந்துவிட உறுதி கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது அதை மாற்றிக்கொண்டேன். ஆம். நான் வாழ விரும்புகிறேன்—என் மீனுவுக்காக. வாதாடுவேன், நீதி கேட்பேன். இந்த உயிர் என்னுடையதல்ல, என் மீனுவுடையது.

(காவலாளி மீண்டும் எச்சரிக்கிறான்)

**மீனு:**—கோர்ட்டில் சந்திக்கிறேன், அத்தான். வருகிறேன். [திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போகிறாள். ஜெயிலை விட்டு தெருவில் நடந்து வருகையில் பேப்பர் விற்கும் பையன் ஒருவன் கத்திக்கொண்டு ஓடுகிறான்.

—''கள்ளத்தோணி சந்திரனின் வழக்கு—நாளை தீர்ப்பு''—என்று. மீனுட்சி ஒரு பத்திரிகையை வாங்கிப்படிக்கிறாள். தலை சுற்றுகிறது. ஆம். சந்திரன் நிச்சயமாகவே அவள் சகோதரனேதான். அருணசலம் குடும்பத்தின் முழுவிபரமும்

அங்கே கொடுக்கப்பட்டிருந்தது — மீனுட்சி செத்துவிட்ட விபரம்...............மீண்டும் ஜெயிலை நோக்கி ஓடினுள்.]

## காட்சி 58. கொழும்பு-ஜெயில்

**[தான் இதுவரை பார்த்திராத தன் தம்பி சந்திரனை ஜெயிலில் சந்தித்து முழுவிபரங்களையும் எடுத்துரைத்து தேம்புகிருள் அபாக்யவதி மீனுட்சி].**

**மீனு:**—தம்பி, நீயும் நானும் சந்திக்கும் முதல் சந்திப்பே இப்படியா அமைய வேண்டும்!...அத்தான் கொலை வழக்கிலே!—அருமைத் தம்பி கள்ளத்தோணி வழக்கிலே...!

**சந்திரன்:**—இரண்டும் பொய்க் குற்றங்கள். உண்மைக்குற்றவாளி நீதிபதி கோலத்திலே உலவுகிருன். உரிமைக்காரன்—நிரபராதி—கூண்டிலே கதறுகிருன். அக்கா, கடல் கடந்த குற்றத்திற்காக நம் குடும்பம் கடுந் தண்டனை பெற்றுவிட்டது.... அம்மாவும், அப்பாவும் மரணத்தறுவாயிலுங்கூட உன் பெயரை உச்சரிக்காமல் இருக்கவில்லை, கடைசியாக நாம் இன்று சந்தித்தோம். அதுவும் இந்த சூழ்நிலையிலே!......அதைரியப் படாதே. அத்தான் விஷயத்தைக்கவனி...........நேரமாகிவிட்டது. அதோ காவலாளி கத்துகிருன்.

**மீனு:**—(கரைபுரண்டோடும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே) எதற்கெல்லாம் அழுவதென்றே தெரியவில்லை. (விம்மிக்கொண்டே போகிருள்.)

## காட்சி 59 கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்

**[சந்திரன் வழக்கிலே தீர்ப்பு நாள். மாபெரும் கூட்டம் கோர்ட்டை முற்றுகையிட்டு நிற்கிறது. போலீஸ் ஒழுங்கை நிலைநாட்டத் திணறுகிறது.]**

**நீதிபதி:**—பிரதிவாதி சந்திரன் எவ்வளவு தான் நேர்மையான வரென்று சாட்சி யங்களிலிருந்து தெளிவான போதி லும், அவர் கள்ளத்தோணி மார்க்கமாக இலங்கைக் குள் பிரவேசித்தது மறுக்கப்படவில்லை. அவரே இதை ஒப்புக் கொள்கிருர். இது சட்டப்படி தண்டித்து நாடு கடத்தப்பட வேண்டிய குற்றமே. என்ருலும் இந்த விசித்திர வழக்கில் இலங்கைப் பிரஜையாகிய மிஸ் மெனிக்காவின் வருங்கால வாழ்வு சம்பந்தப்பட்டுருப்ப தாலும், இலங்கை பிரஜையான இவரை மணக்க சந்தி ரன் விரும்புவதனுலும், இலங்கை பிரஜை ஒருவரை மணந்து கொண்ட ஒருவர் ஒருவருடத்திற்குப் பின் தனக்கும் பிரஜா உரிமைகோரி மனுச்செய்ய இலங் கைப் பிரஜா உரிமைச் சட்டத்தில் இடம் இருப்ப தனுலும், இலங்கை மக்களின் அபிமானத்தை-குறிப் பாக சிங்களவர்களின் அபிமானத்தையும், நன் மதிப் பையும் சந்திரன் வெகுவாகக் கவர்ந்து விட்டதனுலும், இந்த வழக்கில் நான் கருணை காட்ட..........

**சந்திரன்:**—[திடீரெனக் குறுக்கிட்டு] என்ன! கருணை காட்டுவதா? யார், யாருக்கு கருணை காட்டுவது? கன்னமிட்டவன் அன்னமிட்டவனுக்குக் கருணை காட்டு வதா? சுரண்ட வந்தவன் சொந்த நாட்டானுக்குக் கருணை காட்டுவதா? நீதிபதி அவர்களே, நான் கேட் பது கருணை காட்டும்படி யல்ல

**நீதிபதி:**—வேறு என்னதான் வேண்டுகிருய்?

**சந்தி:**—நீதி வழங்கும்படி!—நேர்மையை நிலைநாட்டும்படி! எங்கள் பூர்வீக நாட்டிற்குள் கள்ளத்தோணி மார்க்க

மாகப் புகுந்த ஒரு குற்றவாளியின் சந்ததி இன்று எங்களையே விரட்டிவிட முயற்சிக்கிறதே, இந்த துரோகத்தைக் கண்டிக்கும்படி—தண்டிக்கும்படி!

**நீதிபதி:**—உன்னுடைய உரிமையைத்தான் நீ கோரலாம். நாட்டிற்காகவோ, சமூகத்திற்காகவோ பேச தலைவர்கள் இருக்கிறார்கள்.

**சந்தி:**—தலைவர்கள்....ஹும்....தன்னலத்திற்குத் தலைவர் பட்டம். அதிகாரப்பித்துக்கு ஆட்சிபீடம்!........என் தாய் நாட்டின் உரிமைதான் எனது உரிமை. இதுவரை நான் எழுப்பியதெல்லாம் தன்னலக்குரலல்ல—தாயகத்தின் குரல், தர்மத்தின் குரல், மனிதவர்க்கத்தின் புனிதக் குரல்!......மெனிக்கா ஒரு காதலிமட்டுமல்ல. இன்று தன் காதலனை அடைய முடியாமல் கதறிக் குமுறுபவள். ஆயிரமாயிரம் காதலிகள் காதலரை அடையமுடியாமலும், லட்சோப லட்சம் கணவன்மார்கள் தங்கள் மனைவி, மக்களைப்போய்ப் பார்த்துவர முடியாமலும் கண்கலங்கி நிற்கிறார்கள். மெனிக்காவின் ஏக்கக்குரல் உங்கள் காதுவரை எட்டிவிட்டது. ஆனால் அந்தத் துர்ப்பாக்கியர்களின் ஈனக்குரல் உங்களுக்கு எட்ட முடியவில்லை—ஏனென்றால் அவர்களின் குரல்வளை சட்டத்தின் இரும்புக்கரங்களால் நசுக்கப்பட்டிருக்கிறது. மரணப்படுக்கையில் எமனுடன் போராடிக்கொண்டிருக்கும் தங்கள் அருமைத்தாய்மார்களை, மனைவி மக்களை, சகோதர சகோதரிகளைப் போய்ப்பார்த்து அவர்களுக்கு ஆத்ம சாந்திகூட அளிக்கவிடாதபடி தடுக்கிறதே இந்த அனுகரீகச் சட்டம்

என்று அங்கலாய்க்கும் அபாக்கியர்கள் எண்ணிக் கைக்கோர் அளவேயில்லை!

கோல்பிடிக்கும் கட்சிக்கு நாலாயிரத்தை வீசி எறிந்தால் கால்களை முத்தமிடுகிறது கௌரவப் பிரஜா உரிமை! ஆபீஸருக்கு ஐநூறு, அடுத்த நாள் ஐந்தாண்டு விஸா! ஆனல் பரம்பரை பரம்பரையாய் பாடுபட்டு உழைக்கும் பாட்டாளி பலியிடப்படுகிருன்—லஞ்சம் கொடுக்கப் பணமில்லாத ஒரே குற்றத்திற்காக!........ கண்ணீரும், கம்பலையுமாய், குமுறலும், கொந்தளிப்புமாய் சதா சபித்துக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மெனிக்காக்களின் காதல் கைகூட மார்க்கம் பிறக்கும் வரை—லட்சக்கணக்கான சந்திரர்களின் லட்சியங்கள் நிறைவேற்றப்படும்வரை சூடேறிப் போன எங்கள் ரத்தம் குளிராது! இழந்துவிட்ட எங்கள் உரிமைகளைப் பெறும்வரை எங்கள் உரிமைக்குரல் ஓயாது—ஒடுங்காது!

**நீதிபதி:**—இழுத்துச் செல்லுங்கள்—சந்திரனை நாடுகடத்த உத்தரவிடுகிறேன். (எழுந்து போய்விடுகிருர்கள்.)

(இரண்டு கான்ஸ்டபிள்கள் சந்திரனைக் கூண்டிலிருந்து அழைத்து வருகிருர்கள். 'சந்திரன்' என்று அலறிக்கொண்டுவந்து அவனைத்தழுவிக் கொள்கிருள் மெனிக்கா. மக்கள் கொதித்துக் குமுறுகிருர்கள்)

**சந்திரன்:**—(மெனிக்காவின் கண்ணைத் துடைத்துக் கொண்டே) மெனிக்கா இதயமற்றவர்களின் இரும்புச் சட்டம் நம் புனிதக்காதலுக்கு விலங்கிட முடியாது,

இன்று அறிந்துகொண்டாய் அநீதியை! இனி ஓய்ந்திருக்காதே. அதோ என் அன்புத்தங்கை பார்வதி. ('அண்ணா' என்று கதறிக்கொண்டுவந்து அவனைப் பிடித்துக் கொள்கிருள் பார்வதி.) நீங்கள் இருவரும் மனித ரத்தினங்கள். கணக்கற்ற கன்னியர்களின் கண்ணீர் துடைக்கப்படும்வரை நீங்கள் கண்ணயரக் கூடாது. தட்டியெழுப்புங்கள் தர்மத்தை—மனித தர்மத்தை! அதிகாரவர்க்கத்திடமல்ல, பொதுமக்களிடம். மனிததர்மம் இன்று இந்நாட்டில் உறங்குகிறதேயன்றி ஒழிந்துவிடவில்லை. மெனிக்கா வருகிறேன்—வெற்றி வீரனாக, உன் உண்மைக்காதலனாக. அவதிப்படும் அபாக்யர்களின் அன்பனாக, ஆதிக்க வெறியர்க்கு அபாயச்சங்காக, சுரண்டல்காரர்களுக்குத் தூக்கு மேடையாக! அதுவரை காத்திரு—கடமையைச் செய்துகொண்டிரு. (பார்வதியிடம்) அன்புத் தங்கையே வருகிறேன்,

(அதே சமயம் 'தம்பி' என்று அலறிக்கொண்டு வருகிருள் மீனாட்சி)

**மீனா:**—தம்பி........சந்திரன்.......தூக்குத்தண்டனை விதித்து விட்டார்கள்—அத்தானுக்கு........தூக்குத் தண்டனை—அத்தானுக்கு.

**சந்திரன்:**—(அலறுகிறான்) அக்கா.......அத்தான்...........அத்தான்....—(மீனா ஓடிவந்து அவனைக்கட்டிக்கதறுகிருள். போலீஸார் பலவந்தமாகப் பிரிக்கிருள்.) அக்கா, நான் செல்கிறேன் நம் தாயகத்திற்கு—தமிழகத்திற்கு .......ஆனால் ஓய்ந்திருக்கமாட்டேன்—அநீதி அழிக்கப்

படும்வரை, உரிமை நிலைநாட்டப்படும்வரை, தாயின் அன்பணைப்பிலே சேய் அமைதிபெறும்வரை — இன்று அராஜகத்தால் அநியாயமாகத் தூக்கு மேடைக்கு இழுத்துச்செல்லப்படும் நம் அத்தானின் புனித ஆவி மேல் ஆணை. ஓய்ந்திருக்கமாட்டேன்.

மெனிக்காவும், மீனாட்சியும் ஒருபக்கம் இழுக்க இரு கான்ஸ்டபிள்களும் சந்திரனை மறுபக்கம் இழுக்க, மக்கள் கொந்தளித்து ஆர்ப்பரிக்க பார்வதி கதறிஅழ கோர்ட்டு அல்லோல கல்லோலப் படுகிறது. பலவந்தமாக மெனிக்காவையும் மீனாட்சியையும் உதைத்துத் தள்ளி விட்டு சந்திரனை இழுத்துச் செல்கிறார்கள் போலீசார். எங்கும் 'சந்திரன்' 'சந்திரன்' என்ற அலறல்.

**மெனிக்கா:**—(சப்பாத்துக்காலால் மிதிக்கப்பட்டதால் மண்டையில் கசியும் ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே எழுந்து உட்காருகிறாள். பார்வதி தாங்கிக் கொள்கிறாள்).......துரோகிகளே, நாட்டுமக்களின் உணர்ச்சியையும், கிளர்ச்சியையும் உதாசீனம் செய்து விட்டு ஆதிக்கப் பேராசையால் தாய்நாட்டையும் சேய்நாட்டையும் பிரித்தாளும் பித்தர்களே, ஏழைகளின் எலும்புக்கூடுகளால் எழுப்பப்பட்ட உங்கள் எதேச்சாதிகார ஆட்சிபீடத்தை ஏழைகளின் கண்ணீர்ப் பிரளயமே இழுத்துச் செல்லட்டும். என் உயிரைப் பிரித்து எடுத்துச் செல்கிறீர்கள் — உங்களில் ஒருசிலர் பதவியிலிருப்பதற்காக.... ....சந்திரன்.........சந்திரன்.........என் உயிரே, நீங்கள் பிரிக்கப்பட்டு விட்டீர்கள்.......மனித

சுதந்திரத்தின் குரல்—மாபெரும் குரல் நசுக்கப்பட்டு விட்டது........அக்கா மீனுட்சி...பார்வதி....

[இதேசமயம் ரோட்டிலே ஜெயில் வேன் போகிறது. தன் அத்தான் முத்து—தூக்குத்தண்டனைக்காக அதே வேனில் தான் கொண்டுபோகப்படுகிருன் என்ற பிரமையுடன் 'அத்தான்!' என்று அலறிக்கொண்டே ஓடுகிருள் மீனுட்சி. முத்துவிற்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஆனந்தத்தால் வெற்றிமாலை சூடி வேகமாக வந்து கொண்டிருந்த கொட்டாப்புளி குருப் தோட்டத்துரை ஹம்பக்ஸனின் கார் அவள் மீது மோதுகிறது. ரத்தவெள்ளத்தில் மிதக்கும் மீனுட்சியை மெனிக்காவும், பார்வதியும் கதறிக்கொண்டே தூக்கி எடுக்கிருர்கள். கீழிறங்கிவந்த ஹம்பக்ஸனும் மீனுட்சியை அடையாளம் தெரிந்துகொண்டு விட்டான். மீனுவின் அழிவிற்கு முதற்காரணமும் இறுதிக் காரணமுமாயிருந்த அந்த அரக்கனின் கண்கள்கூட கலங்கி விட்டன.)

**மீனு:**—(ஈனக் குரலில் பிதற்றுகிருள்) அன்புச்சகோதரிகளே நம் மூவருடைய வாழ்க்கையும் ஒரே படகு வாழ்க்கை தான்; மூவரும் காதலில் தோல்விகண்டவர்கள்....... ரத்த நீர்ப்பாய்ச்சி, எலும்பு உரமிட்டு தேயிலையையும், ரப்பரையும் வளர்த்து, செல்வம் பெருக்கும் மக்களிலே இனி எந்த மீனுட்சியும் தோன்ருமல் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த ஹம்பக்ஸன்களின் ஹம்பக் இன்ருேடு தொலையட்டும்........ அத்தான் ........உம்ம்....தம்பி........ அத்தான்........

(உயிரை உதறி எறிந்து விட்டு, உருண்ட மீனாட்சியின் தலையை மடியில் போட்டுக்கொண்டு கதறுகிறாள் மெனிக்கா.)

**மெனிக்கா:**—சண்டாளர்களே, உங்களைப்போன்ற உலுத்தர்களின் கையில் ஆட்சியிருக்கும் வரை உருவப்படப் போவதில்லை உழைப்பாளர் லங்கா. வஞ்சகம், துரோகம், விபச்சாரம், மது, கொலை, களவு, அன்னிய நாட்டானுக்கு அடிவருடுதல் - ஆகியவற்றால் அழிந்து போகும் நாடு. அப்புறம்?........பிணக்குவியலே உங்கள் பிரஜைகள்! பிசாசுகளே உங்கள் பிரதானிகள்! பிணங்களின்மேல் வட்டமிடும் கழுதுகளின் நிழலே உங்கள் கொற்றம்; தர்மத்தின் புலம்பலே உங்கள் சங்கீதம்! சாவின் தாண்டவமே உங்கள் நாட்டியம்! ........உலகின் பழிச் சொல்லே உங்கள் சரித்திரம்........!

(திக்கற்றுப் புலம்பியழும் அந்தச்சிங்கள சகோதரியின் குரல் எத்திக்கும் ஒலித்து, எதிரொலித்து காற்றிலே கரைந்து கொண்டிருந்தது........)

## காட்சி 55. ஜீவனின் நாடகசபா—சென்னை

(மீண்டும் முதற்காட்சி)

**('கள்ளத்தோணி' என்ற நாடகம் முடிந்து திரை விழுகிறது. பேரறிஞர் மணிமாறன் தனது தலைமை முடிவுரையை நிகழ்த்துகிறார்—உணர்ச்சியால் உந்தப்பட்டு உள்ளக்கொதிப்புடன் அமர்ந்திருக்கும் ரஸிகர்களின் முன்னால் நின்று.)**

**பேரறிஞர் மணிமாறன்:**—தோழர்களே. 'கள்ளத்தோணி

என்ற இந்தக்கருத்துள்ள நாடகத்தை—காலத்திற்குத் தேவையான நாடகத்தைக் கண்டு களித்தீர்கள்—மன்னிக்கவும்—கண்டு கண்கலங்கினீர்கள் என்று சொல்வதுதான் பொருந்தும். ஆனாலும் காணவும், கைதட்டவும், கண்கலங்கவும் மட்டுந்தான் இந்த நாடகம் பயன் பட்டதென்றால் நான் பெரிதும் ஏமாற்றமடைந்தவனாவேன். இது இன்றைய தாழ்ந்த தமிழகத்தின் சரியான சரித்திரக் குறிப்பு. கடல் கடந்த தமிழனின் கண்கள் வடிக்கும் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும் சொல்லும் காவியம்! பாதிக்கப்பட்ட உள்ளங்களின் தெளிவான படப்பிடிப்பு! கண்ணற்றக் காலக் குழந்தை செய்துவிட்ட எண்ணற்ற மாறுதல்களினால் நாம் இழந்துவிட்ட உரிமைகளின் ஞாபகக் குறிப்பு! தன்மானமிழந்து கிடக்கும் தமிழனின் இன உணர்ச்சிக்கு சரித்திரம் கொடுக்கும் சவுக்கடி!

இன்று நமது உரிமை பறிக்கப் பட்டிருக்கிறது. சுதந்திரம் சூறையாடப் பட்டிருக்கிறது. குரல்வளை நசுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காலம் மாறிக்கொண்டே இருக்கிறது. மாறுவதுதான் இயற்கையின் நியதி. தமிழன் மீண்டும் தன்மான உணர்ச்சி பெற்று வருகிறான். மீண்டும் ஒருநாள் தனியரசு அமைக்கத்தான் போகிறான். அன்று இந்த நயவஞ்சகர்களை யெல்லாம்—அவர்கள் எங்கிருந்தாலும்சரி—மக்களின் மன்றத்திலே நிறுத்தி நல்லதோர் தீர்ப்பு வழங்கத்தான் போகிறான். (தமிழகத்தின் படத்தின் பக்கம் திரும்பி) தாழ்த்தப்பட்டு, சாக்கடைக் குழியில் வீழ்த்தப்பட்டு கிடக்கும் தமிழகமே—ஊனுயிர் தந்து உழைக்கக்

கூடிய உத்தம புத்திரர்களை இலங்கைக்கும், மலேயா வுக்கும், பர்மாவுக்கும், பீஜித் தீவுக்கும் நாடுகடத்தி விட்டு, ஊதாரிகளை, உலுத்தர்களை, சோம்பேறிகளை, பகட்டுப் பட்டதாரிகளை, கள்ள மார்க்கெட் கொள்ளைக் கூட்டத்தாரை மடியிலே தவழவிட்டுக் கொண்டு உழு வாரில்லையே, உழைப்பாரில்லையே, ஊட்டுவாரில்லையே என்று ஊர்ஊராகக் காவடி தூக்கும் உணர்ச்சியற்ற வளே, உன் மகன் சந்திரனின் கண்ணீரைப்பார். உன் மக்களின் உழைப்பிலே வழம்பெற்றன இலங்கை யின் விலங்குக்காடுகள்—பர்மாவின் பாலைகள் சோலை களாக மாறின. தென்னுப்பிரிக்கா பொன்னுப்பிரிக்கா வாகத் திகழ்கிறது. ஆனுல், பெற்ற தாயாகிய நீயோ தரித்திர நாராயணி! யார் குற்றம்? உன்னை அன்னை யென்றுதான் எப்படி அழைப்பது? பிச்சையெடுத்து திருடி, விபச்சாரம் செய்தாவது தன் மக்களைக் காப்பாற்றுபவளல்லவா தாயே!....காலம் இப்பொழு தும் கடந்துவிடவில்லை. இன்றேனும் உணர்வுகொள். உன் உழைப்புக் கரங்களை, கற்பகத்தருக்களை, தியாக சிகரங்களை, செல்வக் களஞ்சியங்களை திருப்பி அழைத் துக்கொள்—கடல் கடந்த நாடுகளிலிருந்து, அவர்களுக் குத் தலைமை தாங்கட்டும் உன்மகன் சந்திரன். மடிவ தேயாஞலும் உன் மடிமீது மடிவதாஞல் மட்டற்ற மகிழ்ச்சி கொள்வார்கள். உடனே அழைத்துக்கொள். இன்றேல்—நீ மெலிந்து, நலிந்து, சிதைந்து, அழிந்து விடுவாய்! நிச்சயம்! நிச்சயம்! (அமர்கிருர்.)

**('கடல் கடந்த தமிழர்களைக் கட்டாயம் திருப்பி யழைத்துக் கொள்வோம்' என்ற கர்ஜனையோடு— கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கலைந்து செல்கி ருர்கள் மக்கள்.)**

(முற்றும்.)

## அறிவிப்பு

எங்களிடத்தில் பல விதமான இன்பக்கலை நூல்கள், சினிமா பாட்டு புத்தகங்கள், நாவல்கள் மற்றும் எல்லாவிதமான தமிழ், ஆங்கிலப் புத்தகங்களும் கிடைக்கும்

விவரத்திற்கு :-

மோஹன் குமார் அன் கோ
66-1\5, 1-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

மதத்தின் பேரால்
திரை மறைவில் நடைபெறும்
அனாச்சாரங்களின் பிரதிபலிப்பு!




துரோகி

அறிஞர்
அப்பாஸ்
எழுதிய
அரிய நாவல்

விலை
ரூ 1-50

மோகன் குமார் & கோ
66, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.

Jacket printed at Shanii Press, Madras-1